Not for sale

ஜனவரி - பிப்ரவரி 2013

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## புதிய வருடத்திற்கான சிந்தனைகள்


காலம் • எதிர்நோக்குதல் • புதிதான வாய்ப்புகள்

அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கைக்கான சூத்திரம் • எதிரான சூழ்நிலைகளிலும் அவருக்குள்

உறுதியான நம்பிக்கை • ஒரு ஊழியக்காரனின் சித்திரம் • ஊக்குவிக்கும் வரம்

புதிய வருடத்திற்கான சிந்தனைகள்

# ஆதியிலே



"புதிய வருடத்திற்கான சிந்தனைகள்" என்ற தலைப்பில், 2013-ம் ஆண்டிற்கான முதல் பிரதியாக இருக்கிறது. இதில் ஒரு கிறிஸ்தவ வாழ்க்கையின் கடந்த கால பிரதிபலிப்புகள் அநேகம் காணப்படுகிறது. ஒவ்வொரு புதிய வருடமும், தேவனுடைய இரக்கங்களையும், அவருடைய நன்மைகளையும், மேலும் போற்றத்தக்கதான அதிகமதிகமான வாய்ப்புகளைக் கொடுக்கிறது.

"காலம்" என்று துவங்கும் கட்டுரையானது, தேவனுடைய கண்ணோட்டத்திலிருந்து நம்முடைய வாழ்க்கையை கண்ணோக்குகிறது. தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணித்த யாவரும், தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற நேரத்தில் வரக்கூடிய யுகத்தில் நடைபெறும் கிரியைகளுக்கு ஏற்றவிதமாய் தங்களுடைய சிந்தையையும், குணநலன்களையும் ஆயத்தப்படுத்த வேண்டும்.

இடுக்கமான வழியில் தொடர்ந்து செல்லக்கூடிய முக்கியத்துவத்தை, "எதிர் நோக்குதல்" என்ற தலைப்பு ஆராய்கிறது. ஒவ்வொரு சோதனையும் இதற்கான வாய்ப்பாக அமைகிறது. இறுதியாக வெற்றிகரமாய் ஒவ்வொரு வருடமும் நம்மை அழைத்துச் செல்வதற்கு இதுவே நமக்கு பலத்தைக் கொடுக்கிறது.

"புதிதான வாய்ப்புகள்" வேதாகமத்தில் காணப்படும் புதிய துவக்கங்களைப் பற்றிய கருத்தாய் உள்ளது. ஜலப்பிரளயத்திற்குப் பின் நோவா தன் குடும்பத்தாரோடு ஒரு புதிய துவக்கத்தை அனுபவித்தார். எகிப்திலிருந்து இஸ்ரயேலர்களின் சங்கதி வெளியே வந்தபொழுது, யேகோவா தேவனை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பையும், இதுவரையில் எந்த ஜனங்களும் அனுபவித்திராத அவருடைய தனிப்பட்ட பராமரிப்பைப் பெறுவதற்கான வாய்ப்பின் ஒரு புதிய துவக்கத்தைக் கண்டார்கள். அதற்கு பின் சாலொமோன் ஆலயத்தைப் பிரதிஷ்டைப் பண்ணின போது, இஸ்ரயேல் ஜாதிக்கு ஒரு வல்லமையான ஆராதிக்கும் வல்லமையை அறிமுகப்படுத்தினார். மேலும் நமக்கு அதிகமான பாடங்கள் அதில் காணப்படுகிறது.

"எதிரான சூழ்நிலைகளிலும் அவருக்குள் உறுதியான நம்பிக்கை" என்ற தலைப்பு தேவனுடைய மகா உன்னதமான நன்மைகளை நினைவுபடுத்துகிறது. இரக்கத்தின் வருடங்களின்போது, இஸ்ரயேல் அனுபவங்களின் மூலமாக அநேக பாடங்களைக் கற்றுக்கொண்டது. அதில் நாம் தேவனோடு ஐக்கியப்படுவதற்கான அநேக பாடங்கள் உதவியாய் இருக்கிறது. பயபக்தியும், சார்ந்து வாழ்தலும் மிக அவசியம். நம்முடைய முழுமையான அர்ப்பணிப்புக்குத் தடையாய் இருக்கும் சகல குறுக்கீடுகளையும் ஆராய்ந்து அவைகளை அகற்ற வேண்டும்.

தேவனுடைய பணியிலுள்ள கோட்பாடுகளை, "ஒரு ஊழியக்காரனின் சித்திரம்" என்ற தலைப்பு ஆய்வு செய்கிறது. அன்பினால் ஊக்குவிக்கப்படும் ஒரு மனித குலத்தை உருவாக்குவதே அவருடைய இறுதியான இலக்காகும். இதற்கிடையில், மனப்பூர்வமாய் ஊழியம் செய்யக்கூடியவர்களை தம்முடைய சபை அங்கத்தினர்களாக தேர்வு செய்ய விரும்புகிறார். ஒருவரில் ஒருவர் அன்பு செய்வதே கர்த்தரோடு நடக்கக்கூடியவர்கள் பெற்றுக் கொள்ளும் உச்சிதமான நோக்கமாய் இருக்கிறது.

"அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வுக்கான சூத்திரம்" என்ற தலைப்பு, ரோமர் 12-ம் அதிகாரத்தில் வசனவாரியான விளக்கத்தைக் காண்பிக்கிறது. அதில் ஒரு கிறிஸ்தவனுடைய முழுமையான வாழ்க்கை மேலோட்டமாகக் காணப்படுகிறது. இயேசுவின் மனத்தாழ்மையும், அர்ப்பணிப்பும் தேவனால் கற்றுக் கொள்ளக்கூடியவர்களுக்குப் பாடமாக அமைகிறது. இரக்கமும், கருணையும் கிறிஸ்துவின் சீஷர்களுக்குத் தேவைப்படக்கூடிய மூலக்கூறுகளாய் இருக்கிறது.

இறுதியாக, "ஊக்கமளிக்கும் வரங்கள்" என்ற தலைப்பு நம்முடைய சக கிறிஸ்தவர்களை உயர்நிலை பணிக்காக எவ்வாறு ஊக்குவிக்க வேண்டும் என்று விவாதிக்கிறது. கிறிஸ்துவோடு நடப்பதற்கு மற்றவர்களை ஊக்குவிப்பதற்கான பொறுப்பைப் பெற்றிருக்கிறோம். மேலும் வளர்ச்சியடைவதற்கு ஏற்ற கருவிகளாக சோதனைகள் இருப்பதினால் நாம் அளிக்கக்கூடிய ஊக்கமூட்டும் காரியங்கள் சோர்ந்து இருக்கக் கூடியவர்களுக்கு முக்கியமான உதவிகளை அளிக்கிறது.

The Herald of Christ's kingdom என்ற இந்த பத்திரிக்கையை வெளியிடும் குழுவினர், இவைகளை வாசிக்கக்கூடிய ஒவ்வொருவரும் இந்த ஆண்டில் சுபிட்சமான ஆவிக்குரிய வாழ்க்கையைப் பெறுகிறதற்கு ஜெபிக்கிறார்கள்.

## ஜனவரி-பிப்ரவரி 2013

**காலம்** 2
நம்முடைய மணி நேரங்களை அர்ப்பணிக்கப்பட்டதாய் பயன்படுத்தல்

**எதிர்நோக்குதல்** 4
அர்ப்பணிக்கப்பட்டவர்களின் தீர்மானங்கள்

**புதிதான வாய்ப்புகள்** 9
தேவனுடைய திட்டத்தில் புதிய துவக்கங்கள்


**அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கைக்கான சூத்திரம்** 17
தீமையை மேற்கொள்ளுதல்

**எதிரான சூழ்நிலைகளிலும் அவருக்குள் உறுதியான நம்பிக்கை** 27
தேவனுடைய மேன்மையான நன்மைகள்

**ஒரு ஊழியக்காரனின் சித்திரம்** 32
மனப்பூர்வமான நோக்கம்

**ஊக்குவிக்கும் வரம்** 37
மற்றவர்களை ஊக்குவித்தல்

**தீர்க்கதரிசனத்தில் இன்று** 40



# காலம்

"தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்." (சங்கீதம் 51:10)

**George Eldridge**

இந்த வருடமும் காற்றில் கலக்கும் புகை மறைவதுபோல, வெகு சீக்கிரத்தில் மறைந்துவிடும் இந்த பூமியின் மேல் மனிதன் மட்டுமே ஒவ்வொரு வருடங்கள் கடப்பதைக் குறிக்கிறான்.

தேவனுடைய சிருஷ்டிகள் அனைத்து மத்தியிலும் மனுக்குலம் மட்டுமே கடக்கக்கூடிய வருடங்களையும், நாட்களையும், நொடிகளையும் எண்ணுகிறார்கள். பறவைகள், மீன்கள் மற்றும் மிருகங்கள் பூமியெங்கும் பரவி ஒரேவிதமான கால சூழ்நிலைகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு முன் கடந்து போகும் வருடங்கள், நாட்கள் மற்றும் மணி நேரங்களை அறியாமலும், சிந்தியாமலும் இருக்கிறார்கள். ஒவ்வொரு வருடத்தின் முடிவிலும் மனிதர்கள் குறிப்பிட்ட காரியங்களைச் செய்வதைப்போல, அவைகள் எதையும் குறிப்பிடுவதில்லை, டிசம்பர் மாதம் 31-ம் தேதி நடு இரவில் மனிதர்கள் மணி ஓசைகளை ஒலித்து மகிழ்ச்சிகரமான வாழ்த்துதலைக் குதூகலமாய் பகிர்ந்துக் கொள்கிறார்கள்.

இந்த பூமியின் மேல் மனுக்குலம் மட்டுமே விரைந்து செல்லும் காலங்களைப் பற்றிய உணர்வுகளைப் பெற்றிருக்கிறார்கள். மனிதர்கள் கால அட்டவணைகளை மட்டும் அல்ல, நொடிகளை எண்ணக்கூடிய கடிகார சிந்தனைகளும் உருவாக்குகிறார்கள். தேவனுடைய காலங்களை மனிதன் மட்டுமே உணர்ந்து அஞ்சக்கூடிய சிருஷ்டியாக இருக்கிறார்.

நேரத்தை சுதந்தரிக்க ஜனங்கள் விரும்புகிறார்கள். இதை விலை கொடுத்து வாங்கும் ஒரு பொருளாக எண்ணி அவர்கள் அதிகம் வேண்டும் என்று மன்றாடுகிறார்கள். ஒருவர் நம்மை துரிதப்படுத்தினால், "இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள்" என்று கெஞ்சுகிறோம். நம்முடைய அயலான் ஒரு கடினமான அனுபவத்திற்குள் பிரவேசிக்கும் பொழுது, "காலம் இதை ஆற்றுவதற்கு காத்திருங்கள்" என்று நாம் கூறுகிறோம். மற்றொரு கோணத்தில், விரைவாக ஓடும் காலத்தினால் ஏற்படும் பயங்கள் ஒருவருக்கு நரம்பு தளர்ச்சியை ஏற்படுத்தும். இவை அனைத்து காரியங்களும் இந்த பூமியில் பெருகியிருக்கும் சிருஷ்டிகளின் மத்தியில் இவரை தனித்துவமாகக் காட்டுகிறது.

#### அர்ப்பணிக்கப்பட்ட காலம்

அனைவரும் ஒரே கால அளவைப் பெறுகிறோம். ஒருவரும் 24 மணி நேரங்களுக்கு மேலாக இழுத்துச் செல்ல முடியாது. அர்ப்பணிக்கப்பட்ட தேவ பிள்ளைகள் அவர்களின் நேரத்தை உயர்வான கிறிஸ்தவ நோக்கத்திற்குப் பணி செய்யும்படி கண்ணோக்க வேண்டும். இப்படியாக நாம் ஒவ்வொரு வருடமும் சில குணங்களில் வளர்ச்சியடைந்து ஆவிக்குரிய நிலையில் உயர்ந்த நிலையை எட்டிப் பிடித்தால் - அந்த வருடத்தில் உள்ள காலத்தை சரியாகப் பயன்படுத்தினோம் என்ற முடிவுக்கு வரலாம்.

பலியின் இடுக்கமான பாதையில் பரிசுத்த ஆவியின் செயல்பாட்டின் கீழ் ஆவிக்குரிய சுய வளர்ச்சிக்காக எந்த ஒரு முதலீடும் நம்முடைய ஆண்டவரின் சாயலை பெறுவதற்காக செலவழிக்கப்படும் நேரங்கள் அருமையானதாகும். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் காணப்படும் வளர்ச்சியை, நம்முடைய கைகளில் கட்டப்பட்டிருக்கும் கடிகாரத்தைக் காட்டிலும் ஒரு உயர்வான நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஏனெனில், நமக்கான தேவனுடைய சித்தத்தில் நிர்ணயிக்கப்பட்ட காரியங்களை நம்முடைய கால அளவைக் கொண்டு அளவிடுவது கூடாத காரியம்.

இந்த சிருஷ்டிப்பின் மூலக்கூறுகளை தேவன் ஆயத்தப்படுத்துவதற்கு எவ்வளவு காலம் சென்றது என்பதைக் குறித்து வேதாகமம் எதுவும் குறிப்பிடுவது இல்லை. ஆயினும் பிதாவாகிய யேகோவா தேவன் லோகாஸோடு தங்களுடைய நேரத்தை, மனுஷனை சிருஷ்டிப்பதற்கான திட்டங்களில் தங்களுடைய காலத்தை செலவழித்தார்கள். இதை அறிந்த நாம் இந்த உலகத்திற்கு "மனுஷனுக்காக தேவனுடைய தெய்வீக திட்டத்தை எடுத்துரைப்பதற்கு எவ்வளவு நேரமானாலும் செலவழிப்பதற்கு இக்காரியங்கள் நம்மை ஊக்குவிக்க வேண்டும். நம்மை சுற்றி காணப்படும் தீமையான உலகம், மாற்றி


அமைக்கப்படும் என்ற சத்தியத்தை அறிவிப்பதற்காக நம்முடைய முழு நேரங்களும் செலவழிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு நாளும் நம்முடைய நேரம், நம்மை சுற்றி தவித்துக் கொண்டிருக்கும் இந்த உலகத்தின் மேல் காண்பிக்கப்படும் இரக்கத்திற்காகவும், அன்பிற்காகவும் செலவழிக்கப்பட வேண்டும்.

ஒரு வருடத்தின் துவக்கத்தில் இந்த உலகம் ஒரு கடிகாரத்தைப் பார்ப்பதுபோல் நாம் பார்க்காமல், அதையும் தாண்டி இருக்கும் பரலோகப் பரிசைக் கண்ணோக்கலாம். ஒவ்வொரு வருடமும் கடந்து செல்கையில், "வரக்கூடிய வருடத்தில் எந்தவிதமான எதிர்பார்ப்பும் இன்றி என்னுடைய முழு நேரமும் தேவனுடைய பணிக்காக முழுமையாக அர்ப்பணிப்பதற்கு நாம் வாக்குக் கொடுக்க ஆயத்தமா?" என்ற கேள்வியை நம்முடைய அர்ப்பணிப்பை மனதில் கொண்டவர்களாக கேட்க வேண்டும்.

இந்த நாளில் என்னைக் குறித்து தேவனுடைய நோக்கம் என்ன? நான் அவருக்காக செய்ய வேண்டியது என்ன? நான் வாழக்கூடிய உண்மையான அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையையும், எனக்குள் இருக்கும் அன்பையும் நான் எவ்வாறு செயல்படுத்த வேண்டும்? என்ற கேள்வி ஒவ்வொரு நாளும் கேட்க வேண்டும். அதிகமான சோதனைகளை மிக மகிழ்ச்சியாகவும், அதிகமான பரிசோதனைகளை மிக உற்சாகமாகவும், அதிக ஜெபங்களுக்கான அதிக பதில்களோடும் இவைகளினால் அதிகமான பலத்தோடும், அதிகமான போர்களை, அதிகமான ஜெபங்களோடும் இந்த புதிய வருடத்தில் நாம் எதிர்நோக்குவோமாக.

காலப்போக்கில் ஒருவேளை வரக்கூடிய வருடத்திலும் கூட நம்முடைய காலம் இந்த பூமியில் நிறைவடையலாம். அப்பொழுதும் காலம் நிறைவடையாது. நாம் இயேசுவின் சாயலில் அவருடைய பரிசுத்தவான்களோடுகூட நித்தியமான மகிமையில் எழுப்பப்படுவோம் என்று நம்புகிறோம். இந்த வருடத்தில் தைரியத்தோடு உள்ளம் நிறைந்த துதிகளோடு நாம் பயணிப்போம். நம்முடைய வாழ்க்கையில் எல்லா பகுதிகளிலும் தேவன் மேற்கொள்ளுவதற்கு விரும்பி அவரை வரவேற்போம். வெகு சீக்கிரமாய் கடந்து செல்லும் வருடத்தைக் குறித்து நாம் எரிச்சல் அடையாமல், நம்முடைய நித்திய மகிழ்ச்சிக்கு மற்றொரு குறிப்பாய் இருக்கிறது என்பதை நினைவில் கொள்ளலாம்.

அர்ப்பணிக்கப்பட்டவர்களின் தீர்மானங்கள்



# எதிர்நோக்குதல்

"சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" - பிலிப்பியர் 3:13, 14

**Len Griehs**

தேவனுக்குப் பணி செய்வதற்காக தங்களையே முழுமையாக அர்ப்பணித்தவர்களுக்கு இக்காலத்தில் சுயபரிசோதனைகள் செய்து, நல்ல தீர்மானங்களை எடுப்பது மதிப்புள்ளதாய் இருக்கும். ஒவ்வொரு தொழிலிலும் தங்களுடைய இலாபத்தையும், நஷ்டத்தையும் வருடத்தின் முடிவில் அறிக்கையிடுவது வழக்கம். இதன் விளைவின் அடிப்படையில் பல புதிய திட்டங்கள் தீட்டப்படுகிறது.

இப்படியிருக்க நம்முடைய ஆத்துமா - புது சிருஷ்டிகளின் இலாபத்தையும், நஷ்டத்தையும் கணக்கெடுப்பது எவ்வளவு முக்கியமான காரியம். தொடர்ச்சியாக இந்த உலகம், மாம்சம், சாத்தானால் ஏற்படும் யுத்தங்கள் எப்பொழுது, எங்கு, எவ்வாறு நடைபெற்றது? இப்படிப்பட்ட காரியங்களை தேவனுடைய பார்வையில் பிரியமாகக் காணப்படுகிறவர்கள் நிச்சயமாக இலாபகரமான சூழ்நிலையில் சில மாதங்களுக்குப் பின் நடைபெறும் ஞாபகார்த்த நாளுக்கு தங்களை சரியான முறையில் ஆயத்தம் பண்ணக்கூடியவர்களாய் இருப்பார்கள்.

### "சத்தியம்" என்பதன் பொருள் என்ன?

இந்த பூமியில் மனுஷனுடைய தோற்றம் தற்செயலாகவோ, நோக்கமற்றதாகவோ இருக்கவில்லை. இந்த உலகத்தில் வாழ்ந்த ஒவ்வொரு நபருக்கும் தேவனுடைய நீதியும், அன்பான திட்டமும் இருப்பதை வேதாகமம் சரியாக விவரிக்கிறது. தேவனுடைய கால திட்டத்தில், நித்தியமாக தீமையை ஒழியப் பண்ணும்படிக்கு மனித வரலாற்றில் தேவனுடைய கண்ணோட்டத்திலிருந்து சொல்லியிருக்கும்படி இந்த உலகத்தில் தீமை அனுமதிக்கப்பட்டிருப்பதின் நோக்கத்தைப் புரிந்து கொள்வதற்கு உதவி செய்கிறது. இந்த இருள் நிறைந்த இரவின் உபத்திரவங்கள், இப்பொழுது விழுங்கிக் கொண்டிருக்கும் மனிதனை தொடர்ந்து விழுங்கப் போவதில்லை. இயேசு சுகமளித்து ஆசீர்வதிக்கக்கூடிய ஒரு புதிய யுகம் இப்பொழுது விடிந்து கொண்டிருக்கிறது. வேதனை, வியாதி மற்றும் மரணம் முடிவு பெறும். "சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்."

வேதாகமத்தைப் பொறுத்த வரையில் மிகப் பெரிய மாற்றங்கள் இந்த உலகத்தில் காணப்படும். உலகமெங்கும் சமாதானம் நிலவும். (சங் 46:9) மனித குறைப்பாடுகள் நீக்கப்படும். (ஏசா 35:5, 6) உலகமெங்கும் ஒழுக்கமும் முழுமையான உண்மை காணப்படும். (எரே 31:33) கடந்த யுகங்களில் மரித்த அனைவரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1 கொரி15:22) வேதனைகள், உபத்திரவங்கள், கண்ணீர், மரணம் முற்றிலுமாக இல்லாமல் போகும். (வெளி 21:4)

அறிவு சார்ந்த பயிற்சிக்காக அநேகர் வேதம் வாசிக்கிறார்கள். ஆயினும் அதைக்காட்டிலும் மேலான நோக்கத்தோடு வாசிப்பவர்களையே தேவன் எதிர்பார்க்கிறார். அந்த வார்த்தைகளின் படி அசைக்கப்பட்டு அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையை வாழ விரும்பி அதிலுள்ள நற்செய்திகளை பிரசங்கிக்க கூடியவர்களை தேவன் தேடுகிறார். மேலும் இந்த இயேசுவின் சுவிசேஷத்திற்காக தங்களுடைய காலத்தையும், தாலந்துகளையும் மனப்பூர்வமாய் கொடுப்பவர்களை தேவன் எதிர்பார்க்கிறார்.

### உலகத்தின் காரியத்திலிருந்து பிரித்தெடுத்தல்

"இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்." (எபே 4:21-24)

தேவனுக்குத் தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணிப்பவர்களுக்குரிய பாதையை குறித்து பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்தில் கூறுகிறார். இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்கள் தேவனுடைய புத்திரர்களாக இருப்பதற்கு அழைப்பைப் பெறுகிறார்கள். நாம் அனைவரும் புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றவர்களாய் (எபே 1:5) நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட

வாழ்க்கையை செலவழித்து, இயேசுவோடு இணைந்து, இந்த பூமியிலுள்ள முழு குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதற்கு இன்று நாம் ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அப்பொழுது உண்மையில் நாம் அவருடைய புத்திரர்களாக மாறுவோம். (ரோ 8:23) தெய்வீக வழிநடத்துதலினால் இப்பொழுது நாம் பெறும் அனுபவங்களின் வழியாக வரக்கூடிய நாட்களில் மனுஷனை தேவனோடு ஒப்புரவாக்குவதற்கு தகுதி பெறுகிறோம். (எபே 1:10)

வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." -( மத் 5:20) தங்களுடைய கிரியைகளினாலே இஸ்ரயேலரின் மூப்பர்கள் தங்களை நீதியுள்ளவர்கள் என்று காட்டிக்கொண்டனர். ஆயினும், "நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம்; எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டுபோகிறது" (ஏசா 64:6) என்ற வசனத்தின் படி அவர்கள் தீர்க்கதரிசியாகிய ஏசாயாவின் வார்த்தைகளைப் புறக்கணித்தார்கள். இன்று இயேசுவை நம்முடைய ஈட்டுக் கிரயமாகவும், சொந்த இரட்சகராகவும் ஏற்றுக் கொண்டு, நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையை அவருடைய பலியின் ஜீவியத்திற்கு ஒப்பாக வாழ்ந்தோமேயானால், "நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்" (பிலி 3:9) பெறலாம்.

நம்முடைய சித்தத்தை இயேசுவை பின்பற்றுவதற்காக அர்ப்பணிக்கும் போது, நம்முடைய கிரியைகளை தேவனிடத்தில் சமர்ப்பிக்க நாம் ஒத்துக் கொள்ளக்கூடியவர்களாக இருக்கிறோம். இந்த உலகத்தின் போக்கின்படி சுய காரியங்களுக்காக இனி ஒருபோதும் நாம் சுயாதீனமாக செயல்பட முடியாது. "சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், துஷணமும், மற்ற எந்தத் துர்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது" (எபே 4:31) என்று பவுல் கூறுகிறார். கிரியை செய்வதற்கு இது ஒரு வல்லமையான அழைப்பாய் இருக்கிறது. இந்த ஒரு கற்பனைகளை நாம் பின்பற்றுவதில் காட்டக்கூடிய வளர்ச்சியை நாம் எவ்வாறு சீர் தூக்கிப் பார்ப்பது? அழுத்தமான பரிசோதனைகளினாலும், கடுமையான சோதனைகளின் வழியாக மட்டுமே நம்முடைய வளர்ச்சியையும், குறைப்பாடுகளையும் அறிந்து கொள்ள முடியும்.

தண்ணீர் நிரம்பிய ஒரு பஞ்சை நீங்கள் அழுத்திப் பார்த்ததுண்டா? உங்கள் கையினால் அதை அழுத்தும்போது, அந்த தண்ணீர் பஞ்சைவிட்டு வெளியேறுவதைக் காணலாம். இந்த ஒரு செயலை தொடர்ந்து செய்தால், அந்த பஞ்சில் ஒரு துளி தண்ணீர் கூட காணப்படாது. அதேபோல நம்முடைய பரலோகப் பிதா சோதனை என்னும் அழுத்தத்தை நம்மேல் அனுமதித்து, நமக்குள் இருக்கும் காரியம் இன்னதென்று வெளிப்படுத்துகிறார். நாம் வேதத்தை வாசித்து, ஜெபித்து அவரோடு ஐக்கியப்படும்போது, அதிகமான இயேசுவின் குணநலன்களைக் காணலாம். சோதனையின் அழுத்தத்தின் போது இக்குணங்கள் ஏற்ற நேரத்தில் வெளிப்படக் கூடியதாய் இருக்கிறது.

**சுகந்த வாசனை**

"ஆதலால் நீங்கள் பிரியமான பிள்ளைகளை போல தேவனை பின்பற்றுகிறவர்களாகி கிறிஸ்து நமக்காக தம்மை தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புகொடுத்து நம்மில் அன்புக்கூர்ந்தது போல நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்" - (எபே 5:1-2)

நீங்கள் வண்டி ஓட்டும் பொழுது, "இது என்ன வாசனை?" என்று நீங்கள் உங்கள் தோழருடன் கேட்டதுண்டா? ஒருவேளை நீங்கள் ஒரு காகித தொழிற்சாலையை கடந்திருக்கலாம் அல்லது மரித்துப்போன மிருகத்தின் சடலத்தைக் கடந்திருக்கலாம், ஆயினும் இவைகளின் துர்நாற்றம் கிட்டத்தட்ட 2.5 மைல்களுக்கு மனுஷர்களால் முகரக்கூடியதாய் இருக்கிறது. முகரும் தன்மை தேவன் நமக்கு கொடுக்கப்பட்ட ஒரு வல்லமையுள்ள உணர்வாகும். சில அபாயங்களை உணர்த்துவதற்கு சில முகரும் தன்மை உதவியாய் இருக்கிறது. (பற்றி எரியும் வீடுகள்) உயிர்வாழ்வதற்கு இந்த முகரும் தன்மை

மிருகங்களுக்கு மிக அவசியமாயிருக்கிறது. அவைகளின் எதிராளிகளை இந்த முகரும் தன்மையினால் எளிதில் அறியமுடிகிறது. நறுமணங்களும் அதிக வல்லமை கொண்டதாகக் காணப்படுகிறது. நறுமணம் கொண்ட மெழுகுவர்த்திகள் எரியும்போது, சோர்வுள்ள நம்முடைய நரம்புகள் ஆறுதல் பெறுகிறது. புதிதாக வேக வைத்த அப்பங்கள் நம்முடைய பசியைத் தூண்டிவிடுகிறது.

சுத்தமான ஆடைகளில் காணப்படும் வாசனைகளினால் சில குறிப்பான சோப்புகளை வாங்குவதற்கு நம்மை தூண்டுகிறது.

முகரும் தன்மை மற்றும் சுவையைப் பற்றி ஆய்வு செய்யும் படிப்புகள் (Research foundation studies) உணரும் தன்மை மற்றும் சுவைக்கும் தன்மை இவ்விரண்டும் மனுஷனுடைய உணர்வுகள், நோக்கங்கள், நடைமுறைகள் மற்றும் வியாதிகளின் நிலையை கூட பாதிப்பதாகக் கூறப்படுகிறது. எடுத்துக்காட்டாக, மல்லிகைப் பூவின் வாசனை ஒவ்வொரு தனிப்பட்ட நபரிடமும் வெவ்வேறு உணர்ச்சிகளைத் தூண்டக்கூடியதாய் இருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் வல்லமையான முகரும் தன்மையை இயேசுவின் ஈடுபலியையும், அவருடைய சீஷர்களின் பலியையும் தேவன் கண்ணோக்குவதற்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். "இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம். கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரணவாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறோம். இவைகளை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதியானவன்?" (IIகொரி 2:15,16). இயேசு தம்முடைய பரிபூரணமான மனுஷ ஜீவனை ஈட்டு கிரயமாக ஆதாமுக்குச் செலுத்தினார். நாம் இதை செய்ய இயலாது. ஆயினும் இயேசுவின் ஜீவபலியின் வழியாக அர்ப்பணிக்கப்பட்ட நாம் மற்றவர்களுக்கு பலியின் மூலம் ஊழியம் செய்வதினால் சுகந்த வாசனையை வீசச் செய்யலாம்.

**இயேசுவின் மூலம் நம்முடைய காணிக்கை அங்கீகரித்தல்**

"பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: சுத்த வெள்ளைப்போளமும், குங்கிலியமும், அல்பான் பிசினுமாகிய கந்தவர்க்கங்களையும், சுத்தமான சாம்பிராணியையும் நீ சமநிறையாக எடுத்து, தைலக்காரன் செய்கிறதுபோல அதற்குப் பரிமளமேற்றி, துப்புரவான பரிசுத்த தூபவர்க்கமாக்கி, அதில் கொஞ்சம் எடுத்துப் பொடியாக இடித்து, நான் உன்னைச் சந்திக்கும் ஆசரிப்புக் கூடாரத்திலிருக்கும் சாட்சி சந்நிதியில் வைப்பாயாக; அது உங்களுக்கு மகா பரிசுத்தமாயிருக்கக்கடவது. இந்த தூபவர்க்கத்தை நீ செய்யவேண்டிய முறையின்படி உங்களுக்காகச் செய்துகொள்ளலாகாது; இது கர்த்தருக்கென்று உனக்குப் பரிசுத்தமாயிருப்பதாக. இதற்கு ஒப்பானதை முகருகிறதற்காகச் செய்கிறவன் தன் ஜனத்தில் இராதபடி அறுப்புண்டுபோகக்கடவன் என்றார்." (யாத் 30:34-38) இந்த நறுமண தைலத்தை இஸ்ரயேலின் பிரதான ஆசாரியர், பரிசுத்த ஸ்தலத்தில் விளக்கில் உள்ள திரியைத் தூண்டுவதற்கு செல்லும் பொழுது பயன்படுத்துவார். (யாத் 30:7, 8) மற்றும் பாவநிவாரண பலியின் நாளில் செலுத்தப்படும் பலிகளின் போது, இந்த தைலத்தை அவர் பயன்படுத்துவார். (லேவி16:11-13)

இஸ்ரயேலின் முதல் பிரதான ஆசாரியனாகிய ஆரோன், ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள பொன்னான தூபபீடத்தில், சுகந்த தூபவர்க்கங்களை எரியவிடாமல், மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் எரியவிட முடியாது. (ஷெக்கினா ஒளியின் மூலம் தேவனுடைய பிரசன்னத்தைக் காட்டும் இடம்) அதுபோல நாமும் இயேசுவின் பலியின் மூலம் ஜெபமாகிய தூபங்களை ஏறெடுக்காமலும், அதின் வழியாக நம்மில் கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பிரதிபலிக்காமலும், தேவனுடைய பிரசன்னத்திற்குள் நுழைய முடியாது. (சங் 141:2; வெளி2:4) சோதனையின் உபத்திரங்களிலும் நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்ய விரும்பி அவர் அங்கீகரிக்கக்கூடிய சுகந்த வாசனையை நாம் ஏறெடுப்பதை தேவன் கண்ணோக்குகிறார். தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக, இயேசு செய்த உடன்படிக்கை முழு விசுவாசத்தோடும், கீழ்ப்படிதலோடும் நிறைவேற்றப்பட்டது நமக்கு முன் வைக்கப்படுகிறது. பாஸ்டர் ரஸலின் எழுத்துக்களில் சிலவற்றை நாம் சிந்திக்கக்கடவோம்.

"புதிய சிருஷ்டிகளாகிய நாம் இப்பொழுது பரிசுத்த ஸ்தலத்தில் காணப்படுகிறோம் - முதலில் துவங்கும் பரிசுத்தம் அல்லது பரத்துக்குரிய காரியங்கள் - பரிசுத்த ஸ்தலத்திலுள்ள பொன் குத்துவிளக்கின் வெளிச்சத்தினால் பிரகாசிக்கப்படுகிறது. (ஆவிக்குரிய காரியங்கள் குறித்த தேவவார்த்தைகள்) - தேவனுடைய ஆழமான காரியங்கள் - நித்தமும் சமூகத்து அப்பத்தை அடையாளப்படுத்தும் சத்தியத்தினால் பலனடைந்து, புத்துணர்வைப் பெறவேண்டும். இவைகளை ஆசாரியர்கள் மட்டுமே உண்ணுவது நியாயம். (மத் 12:4) பலமும் புத்துணர்வும் அடைந்த நாம் நித்தமும் தூபபீடத்தில் நம்முடைய அன்றாட பலிகளைச் செலுத்தி, இயேசு கிறிஸ்துவின் வழியாக தேவனால் அங்கீகரிக்கப் படக்கூடிய - சுகந்த வாசனையாக பிதாவினிடத்தில் ஏறெடுக்க வேண்டும். (1 பேது 2:5)"

சகோதரர் ஆன்டன் பிரே, தூபவர்க்கத்துக்குத் தேவையான நான்கு உட்பொருள்களை தேவனிடத்தில் நாம் சேருவதற்கு உண்டான விசுவாசம், அன்பு, கீழ்ப்படிதல் மற்றும் துதி செலுத்துதலுக்கு ஒப்பாக அடையாளப்படுத்துகிறார்.

- அறிவு பூர்வமாக தேவன் மேல் நம்பிக்கை வைப்பது விசுவாசம் அல்ல, மாறாக நம்முடைய சகல கடுமையான அனுபவங்களிலும், அவருடைய ஆறுதலான பிரசன்னத்தை மனதார உணர்வதே விசுவாசம் ஆகும்.
- அன்பு உணர்ச்சியின் வெளிப்பாடு மட்டுமல்ல, மாறாக தேவனை போல இருப்பதற்கு அவரிடம் நெருங்கக்கூடிய அன்பாகும் - நம்முடைய ஜீவனையும் அவருக்காகக் கொடுக்கக்கூடிய அகாபே.
- பிரமாணங்களைப் பின்பற்றுவது மட்டுமே கீழ்ப்படிதல் அல்ல, மாறாக ஒருவர் தன்னையே பலவிதமான எதிர்ப்பான சூழ்நிலைகளிலும் கட்டுப்படுத்துவதே கீழ்ப்படிதல்.
- உதட்டளவில் ஏறெடுக்கும் துதி தேவனுக்கேற்ற ஆராதனை அல்ல, மாறாக இடுக்கமான சோதனை மத்தியில் அவரே நம்மை விடுவிப்பவர் என்று எண்ணி நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து ஏறெடுப்பதே உண்மையான துதியாகும்.

ஆனால் நமக்கு இயேசு என்ற பிரதான ஆசாரியர் ஒருவர் உண்டு. அவருடைய மரணம் பிதாவுக்கு சுகந்த வாசனையாக ஏறெடுக்கப்பட்டது. இந்த பலியின் நன்மையின் வழியாக நம்முடைய மிகக் குறைவான காணிக்கைகளை தேவனிடத்தில் எடுத்துச் செல்ல வழி வகுக்கிறது. ஆகவே, "கிறிஸ்துவுக்குள் தேவனுக்கு சுகந்த வாசனையாக இருக்கிறோம்" என்று கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற விரும்பி, தங்களை பலி செலுத்தி, கிறிஸ்துவின் வழியாக விசுவாசத்தோடும், அன்போடும், கீழ்ப்படிதலோடும், துதியோடும், காணிக்கையை ஏறெடுக்கக்கூடியவர்கள் தங்களுடைய பரலோக பிதாவுக்கு சுகந்த வாசனையாக இருப்பார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார்.

**தள்ளிவைக்கப்பட்ட நம்பிக்கை**

"கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு." (சங் 27:14)

கிறிஸ்துகளாகிய நாம், தேவசித்தத்தை பின்பற்றுவதற்கு நம்மை அர்ப்பணித்திருக்கிறோம். சில நேரங்களில் அவருடைய சித்தத்தைக் காண்பது எளிதாக இருப்பதில்லை. அப்போது நாம் பொறுமையாக இருக்க வேண்டுமென்று சங்கீதக்காரர் கூறுகிறார். இந்த உலகத்தில் அநேகர் தற்காலிகமான நன்மையைப் பெறுவதற்கு நீண்டகால பலனை செலவழிக்கிறார்கள். நாமோ நம்முடைய வாழ்க்கை முழுவதும் இந்த வளர்ச்சிக்காக நாம் செலவழிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய குணங்களை கிறிஸ்துவின் குணங்களுக்கு ஒப்பாக மாற்றுவதற்கு தடையாய் இருக்கும் காரியங்களை முதலில் அகற்றுவதற்கு தேவன் நம்மை வழிநடத்துகிறார். முதலில் வேத வாசிப்பின் மூலமாக அவருடைய வழிகளைக் கற்றுக்கொள்ள வேண்டும். நமக்குள் மறைந்திருக்கும் நற்குணங்கள் நாம் சந்திக்கும் அனுபவங்களின் மூலமாக வெளிப்படும்போது, நம்முடைய சகோதர ஐக்கியத்தோடு அவைகளை பிரதிபலிக்க வேண்டும்.

முதலில் நாம் தேவனுடைய வார்த்தைகளை ஆராய்ந்து அறிய வேண்டும். அடுத்து, அவருடைய வழிநடத்துதலுக்காய் காத்திருக்க வேண்டும். நாம் தரிசித்து அல்ல, விசுவாசத்தினால் நடக்க வேண்டும், (11 கொரி 5:6) தைரியம், துணிகரம் மற்றும் விடாமுயற்சியான குணங்கள் இக்காரியத்திற்கு அவசியமானது. நிகழ்காலத்தில் எதிர்நோக்கும் ஏமாற்றங்களை சமாளிப்பது கடினமாக இருந்தாலும், தேவனிடத்தில் விசுவாசத்தோடு காத்திருந்து இறுதியில் இலாபகரமான பாதையில் வழிநடத்தப்படுவதற்கு ஆயத்தப்பட வேண்டும். (ரோம 8:28)

ஒவ்வொரு புறஜாதி தேசங்களுக்கும் சுவிசேஷத்தை எடுத்துச்செல்ல அப்போஸ்தலனாகிய பவுல், மிகவும் வாஞ்சையுள்ளவராக இருந்தார். அவர் தொடர்ந்து ஆசியா கண்டத்திற்கு பயணிக்க முயற்சித்தார். ஆனாலும் அவர் அனுமதிக்கப்படவில்லை. அவருடைய முயற்சிகள் தொடர்ந்து தோல்வியடைந்ததைக் குறித்து ஆச்சரியப்பட்டார். இறுதியாக தேவனுடைய பரிசுத்த ஆவியின் தூண்டுதலினால் அவர் கிரேக்க பட்டணத்திற்கு அனுப்பப்பட்டார். "ஆகையால், நாங்கள் உங்களிடத்தில் வர இரண்டொருதரம் மனதாயிருந்தோம், பவுலாகிய நானே வர மனதாயிருந்தேன்; சாத்தானோ எங்களைத் தடைபண்ணினான்" (1 தெச 2:18)என்று தெசலோனிக்கேயர்களுக்கு எழுதிய முதல்


நிருபத்தில் பவுல் குறிப்பிட்டார். சாத்தானுடைய தடையை தேவன் மேற்கொண்டு ஆசியாவுக்குப் பயணிக்க அனுமதித்திருக்கலாமே? நிச்சயமாக இது தேவனால் முடிந்த காரியம். ஆயினும், பவுல் தேவனுடைய சித்தத்தை பொறுமையோடும், நிதானத்தோடும் கீழ்ப்படிய கற்றிருந்தார். இந்த ஒரு பாடத்தை தேவன் நம் ஒவ்வொருவருக்கும் முன்வைக்கிறார்.

நம்முடைய சுய பலத்தின் மேல் சார்ந்திருப்போமேயானால், சோர்வான ஏமாற்றங்களை அடைவதற்கு தேவன் அனுமதிப்பார். நம்முடைய சுய நம்பிக்கையை இழக்கும் பட்சத்தில் நமக்குள் மிகுந்த பயம் உண்டாகும். இப்படி கைவிடப்பட்ட நிலைமையில் நம்முடைய பலவீனத்தை உணர்ந்தவர்களாக முழுமையாக தேவனுடைய உதவியை மட்டுமே எதிர்பார்த்து இருப்போம். நாம் கர்த்தருக்காகக் காத்திருக்கக் கற்றுக்கொள்ளும் போது, அவர் நம்மை சரியான வழியில் நடத்துவார். "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்." (ஏசா 40:31 )

வரக்கூடிய வருஷத்திலும் நாம் கர்த்தரை நோக்கி இருந்தால், பரலோக இலக்கை அடைவதற்கு மேலும் சில நன்மையான வழிகளை சிந்திக்கக்கடவோம்!

புதிய துவக்கங்கள்

# புதிதான வாய்ப்புகள்



"வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது" - சங்கீதம் 65:11

**David Rice**

தேவனிடத்தில் அர்ப்பணித்தவர்களுக்கு ஒரு புதிய வருஷத்தில், புதிதான வாய்ப்புகள் திறக்கப்படுகிறது. இனிமேல் வரவிருக்கும் வருஷத்தில், பக்தியுள்ள ஒரு வாழ்க்கையில் நடப்பதற்கு புதிதான வாய்ப்புகள் கிடைக்கும் என்று பொருள்படுகிறது. பழைய வருடத்தின் முடிவில், நம்முடைய வாழ்க்கையின் ஒரு சிறிய பகுதி முடிவடைந்ததாக ஒரு உணர்வைப் பெறுகிறோம். அதில் நாம் சிறிது சிறிதாக சேர்த்த நன்மைகள் குறிக்கப்படுகிறது. நாம் செய்த தவறுகள் சிறிது சிறிதாக அலைந்து, கடந்த காலத்திற்குள் மங்கிவிடுகிறது. நாம் நம்முடைய சிந்தைகளை நன்மையான காரியங்களில் செலுத்த புதிதான தீர்மானங்களை தழுவுகிறோம்.

ஒரு கிறிஸ்தவன் எதிர்பார்க்கும் செய்தி மகிழ்ச்சிகரமானது. வரக்கூடிய வருடத்தில் புதிய அனுபவங்களினால் கிறிஸ்தவ குணலட்சணங்களை அதிகமாக வெளிப்படுத்துவதற்கு வாய்ப்புகளை பெற்றுக் கொள்ளும்படியாக நம்முடைய முகத்தில் புன்னகையோடு நம்முடைய அடிகள் துரிதமாக நடைபோடுகிறது. இதுவே நம்முடைய இருதயத்தின் ஆர்வமாய் உள்ளது. இக்காரியத்தை இன்னும் கொஞ்சம் மேம்படுத்தக் கூடுமா? இன்னும் அதிகமான நம்பிக்கை, அதிகமான கிரியை, அதிகமான சுயத்தை வெறுத்தல், அதிகமான பக்தி வைராக்கியம், ஆவிக்குரிய காரியங்களில் அதிக மகிழ்ச்சி.

கடந்த வருடத்தில் நாம் சில பாவங்களோடு உறுதியில்லாமல் போராடுகையில் அவைகள் நம்மை எளிதில் மேற்கொண்டிருக்கலாம். (எபி 12:1) ஒருவேளை நாம் அவைகளை (பாவத்தை) மேற்கொண்டதினால் நாம் நேசிக்கிறவர்களையோ, பதவியையோ, வேலையையோ, நம்முடைய வாகனங்களையோ, வீட்டையோ அல்லது இலக்கையோ இழந்திருக்கலாம். இப்பொழுது நாம் இருக்கக்கூடிய சூழ்நிலையை மிகச் சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளலாமா? நமக்கு மகிழ்ச்சி தருவதற்கு இது ஒரு இனிமையான சவாலாய் முன் வைக்கப்படுகிறது. சில காரியங்களை நம் வாழ்க்கையில் தொலைப்பதினால் சில பாரங்களை தொலைத்துவிட்டு நாம் விடுதலையாகி குறைந்தபட்சமான உபத்திரவங்களை மட்டும் அனுபவிக்க வேண்டியதாய் இருக்கும். இப்படிப்பட்ட இழப்புகளினால் நமக்கு இருக்கும் வெகு சில தடைகளோடு நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை பிரகாசிக்கப்படும்.

இந்த உலகமும் கூட இப்படிப்பட்ட காரியங்களை நோக்கிச் செல்கிறது. பூமியெங்கும் நீதியுள்ள ஆட்சி ஸ்தாபிக்கப்படும் நிலைக்கு, இந்த முழு உலகமும் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்த உலகம் இந்த மகா உபத்திரவத்தின் காலத்தில் மிகப் பெரிய இழப்புகளைச் சந்தித்தாலும், சகல தீமையான காரியங்களிலிருந்து அது விடுதலை பெறும்.

இறுதியில் சமாதானத்தையும், சுபிட்சத்தையும், பரிசுத்தத்தையும், அன்பையும், ஐசுவரியத்தையும், அடிமைத்தனத்திலிருந்து விடுதலையையும் மற்றும் கற்பனைக்கு எட்டாத நன்மையான காரியங்களையும் இந்த உலகம் பெற்றுக் கொள்ளும். ஆனால் இவை அனைத்தும் வருவதற்கு முன்னதாக செயல்படும் காலங்களில் ஒவ்வொருவருடைய மனதிலும் எழும்பக்கூடிய கேள்விகளுக்கு தேவன் அளிக்கும் பதில்களை அவர்கள் உணர்வதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

### இரண்டு புதிய துவக்கங்கள்

நோவாவின் நாட்களில் நடந்த ஜலப்பிரளயம் சரிந்து கொண்டிருந்த மனுக்குலத்தைத் தடுத்து ஒரு புதிய துவக்கத்தைக் கொடுத்தது. ஆதியாகமம் 5-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட வருடங்களைக் கணக்கிட்டு, அவைகளை ஆதியாகமம் 8:13-ல் சொல்லப்பட்ட நோவாவின்

வாழ்நாட்களோடு நினைத்துப் பார்க்கும்போது, இந்த ஜலப்பிரளயம் ஆதாமின் சிருஷ்டிப்பு முதல் 1656 வருடங்களில் முடிவடைந்ததாகக் காணப்படுகிறது. இந்த ஜலப்பிரளயம் ஒரு வருடம் நீடித்ததினால் ஆதாமிலிருந்து பழைய உலகத்தைக் கணக்கிடும் பொழுது, இந்த ஜலப்பிரளயம் சரியாக 1655-ம் வருடத்தில் துவங்கியிருக்க வேண்டும்.

ஆதாமுக்குப் பின் 3500 வருடங்களுக்குப் பின் மற்றொரு புதிய துவக்கம் காணப்பட்டது. அதாவது, ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட ஏழாவது சிருஷ்டிப்பின் நாள் தேவன் ஓய்வு எடுத்த நாள் அல்லது ஆறு சிருஷ்டிப்பின் நாட்களில் செய்த வேலைகளிலிருந்து ஓய்வெடுத்த நாள் = 7000 வருடங்கள் கால அளவு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த 7000 வருடத்திற்குள் பாவம் மற்றும் மரணம் அனுமதிக்கப்பட்ட 6000 வருடங்களும் சீர்ப்பொருந்துவதற்கான 1000 வருடங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்பாக ஒவ்வொரு சிருஷ்டிப்பின் நாட்களும் ஒரு சாயங்காலம் ஒரு விடியற்காலம் என்று பிரிக்கப்பட்டுள்ளது. அதேபோல, ஏழாம் நாளும் அப்படியாகவே பிரிக்கப்பட்டுள்ளது. இப்படியாக ஏழாம் நாள் 7000 வருடங்கள் கொண்டதாய் இருக்க அதன் விடியல் ஆதாமிலிருந்து துவங்கி 3500 வருடங்களில் வந்திருக்க வேண்டும். அந்த விடியலில் இரட்சிப்புக்கேற்ற அனைத்து தீர்க்கதரிசனங்களும் நிறைவேறியிருப்பதைக் காணலாம். (இந்த தீர்க்கதரிசனம் தானியேலின் 70 வார தீர்க்கதரிசனத்தில் முதலில் காணலாம். இந்த தீர்க்கதரிசனம் இயேசுவின் மரணத்திலிருந்து 490 வருடங்களைக் குறிக்கக் கூடியதாய் இருக்கிறது. இப்படியாக சுவிசேஷ யுகம் கிட்டதட்ட அந்த விடியலுக்குப் பின் ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பிறகு துவங்கியது அல்லது 7000 வருஷத்தின் கடைசி பாதி பகுதியில் துவங்கியது.) மேலும் அதில் இரண்டு வித்தியாசமான குறிப்பிடத்தக்க இரட்சிப்பின் யுகங்களையும் காணலாம். இவைகள் இக்காலத்து சுவிசேஷ யுகமும் மற்றும் முன்னதாகவே உபத்திரவ காலம் ஆயத்தப்படுத்தி இருக்கும் கிறிஸ்துவின் இராஜ்யமாகும்.

தேவனுடைய திட்டத்தில் இந்த இரண்டு முக்கியமாக புதிய துவக்கங்களுக்கு இடையில் காணப்படும் வருடங்கள் 1845 வருடங்கள் என்று நம்முடைய கவனத்தை ஈர்க்கிறது, அதாவது, 3500 - 1655 = 1845. இந்த இரண்டு புதிய துவக்கங்களை வெகு காலங்களாக வேதமாணவர்கள் நன்கு உணர்ந்திருக்கின்றபடியால், இக்கால கணக்கு நமக்கு மிக முக்கியமானதாகும் - கிறிஸ்துவின் முதல் வருகை மற்றும் அவருடைய இரண்டாம் வருகை - இவைகள் ஒரே எண்ணிக்கை உள்ள வருடங்களாக குறிக்கப்பட்டுள்ளது. அதாவது, கிபி 29 முதல் (இயேசுவின் ஞானஸ்நானம்) 1874-ம் வருஷம் - தானியேல் 12:12-ல் சொல்லப்பட்ட 1335-ம் வருடத்தின் முடிவு வரைக்கும் 1845 வருடங்கள் ஆகிறது. (1874 - 29 = 1845)

மீண்டும் மீண்டுமாகக் காணப்படக்கூடிய எண், தேவனுடைய ஒழுங்கையும், திட்டத்தையும், எண்ணங்களையும் அழகாக வடிவமைத்துள்ளது. மேலும் வசனங்களில் காணப்படும் இந்த குறிப்புகளை நாம் சரியாகப் புரிந்து கொண்டோம் என்பதை நாம் கருத்தில் கொள்ளலாம்.

**இஸ்ரயேலுக்கான ஒரு புதிய வருடம்**

எகிப்தைவிட்டு இஸ்ரயேல் ஜனங்கள் புறப்படுவதற்கு ஆயத்தப்பட்டபோது, பிதாவாகிய தேவன் மோசேயை நோக்கி, நீங்கள் புறப்படக் கூடிய இந்த மாதம், வருஷத்தின் முதல் மாதமாக இருப்பதாக என்று கூறினார். "இந்த மாதம் உங்களுக்குப் பிரதான மாதம்; இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாயிருப்பதாக." (யாத் 12:2) அது முதல் நாம் வசனங்களில் எந்த ஒரு மாதத்தைப் பார்த்தாலும் அது ஆபிப் அல்லது நீசான் மாதமாகிய முதலாம் மாதத்திலிருந்து கணக்கிடப்படுவதைக் காணலாம்.

அந்த மாதம் 15-ம் தேதியில் இஸ்ரயேலர்கள் எகிப்தை விட்டுப் புறப்பட்டார்கள். (யாத் 33:3) அதற்கு முன் பஸ்கா ஆட்டை 10-ம் தேதியில் தேர்வு செய்து 14-ம் தேதியில் அதை அடித்தார்கள். (யாத் 12:3, 6) இதை தவிர இந்த மாதத்தில் விசேஷித்த காரியங்கள் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் அதை தொடர்ந்து வந்த வருடங்களில் சில முக்கியமான நிகழ்வுகள் சம்பவித்தது.

சீனாய் மலையில் இஸ்ரயேல் தங்கி 10 கற்பனைகளைப் பெற்றுக் கொண்டனர். மோசே இரண்டு முறைகளாக நாற்பது நாள் அந்த மலையில்

தங்கினார். அங்கு வனாந்தரத்தில் இஸ்ரயேலில் உள்ள சிற்பாசாரிகள் ஆசரிப்புக் கூடாரத்தை கட்டினார்கள். இதுவே இந்த கூடாரத்தைக் கட்டுவதற்கான முதல் வாய்ப்பாய் இருந்தது. அந்த நாள் இரண்டாம் வருஷத்தின் முதல் நாளாய் இருந்தது.

"கர்த்தர் மோசேயை நோக்கி: நீ முதலாம் மாதம் முதல் தேதியில் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணு." "இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் முதல் தேதியில் வாசஸ்தலம் ஸ்தாபனம்பண்ணப்பட்டது." (யாத் 40:1, 2) அந்த நாளின் முடிவில் அன்றைய தினத்திற்குரிய முழு காரியங்களும் ஒரு குறிப்பிடும் வழியில் முழுமையாக தேவனால் அங்கீகரிக்கப்பட்டது. "அப்பொழுது ஒரு மேகம் ஆசரிப்புக்கூடாரத்தை மூடினது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று."

இது ஒரு நினைவு கூருதலின் நாளாக இருந்தது. இஸ்ரயேலர்களுக்கு இது ஒரு புதிய துவக்கமாய் இருந்தது. ஒரு புதிய துவக்கம் ஒரு புதிய வருடத்தின் முதல் நாள் துவங்கப்பட்டதற்கான சூழ்நிலைகள் பொருத்தமாக அமைந்தது. நமக்கோ தேவனுடைய திட்டத்தில் துவங்கக்கூடிய புதிய யுகத்தை அடையாளப்படுத்தும் - இரட்சிப்பின் முதல் யுகமாகிய சுவிசேஷ யுகம். தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை அடையாளப்படுத்தும் ஆசரிப்பு கூடாரத்தின் நிஜமான காரியங்கள், சுவிசேஷ யுகத்தில் வெளிப்படுத்தப்பட்டது.

### யாத்திராகமம் மற்றும் லேவியராகமத்திற்கு இடையில் காணப்படும் தொடர்ச்சி

யாத்திராகமம் மற்றும் லேவியராகமம் புத்தகங்களுக்கு இடையில் உள்ள தொடர்பைப் புரிந்து கொள்வதற்கு இந்த ஒரு குறிப்பு ஆர்வமூட்டக் கூடியதாய் இருக்கிறது. யாத்திராகமம் 40-ம் அதிகாரத்தில், ஆசரிப்புக் கூடாரத்தின் கட்டுமானப் பணிகளைப் பற்றியும், பிரதான ஆசாரியனாகிய ஆரோன் மற்றும் அவருடைய குமாரர்களைப் பற்றியும் பதிவுகள் காணப்படுகிறது. "பின்பு ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசரிப்புக் கூடாரவாசலில் வரச்செய்து, அவர்களை ஜலத்தினால் ஸ்நானம்பண்ணுவித்து, ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்களை உடுத்தி, எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு அவனை அபிஷேகம்பண்ணி, அவனைப் பரிசுத்தப்படுத்துவாயாக. அவன் குமாரரையும் வரச்செய்து, அவர்களுக்கு அங்கிகளை உடுத்தி, அவர்கள் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி, அவர்களையும், அவர்கள் தகப்பனை அபிஷேகம்பண்ணினபடியே, அபிஷேகம்பண்ணுவாயாக; அவர்கள் பெறும் அந்த அபிஷேகம் தலைமுறைதோறும் நித்திய ஆசாரியத்துவத்துக்கு ஏதுவாயிருக்கும் என்றார்." (யாத் 40:12-15)

ஆரோன் மற்றும் அவருடைய குமாரர்களைப் பற்றி தேவன் மோசேக்கு சொல்லிய காரியங்கள் இந்த வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. வசனங்கள் 1-15-ல், ஆசரிப்புக் கூடாரம் கட்டும் பணியைக் குறித்த கட்டளைகளைக் காணலாம். தேவனுடைய கட்டளைகளை மோசே உண்மையில் நிறைவேற்றுவதற்காக செய்த காரியங்கள் 16-ம் வசனம் முதல் காணப்படுகிறது. ஆயினும் மோசே ஆரோனையும், அவருடைய குமாரர்களையும் ஜலத்தினால் சுத்திகரித்து அவர்களை அபிஷேகித்த காரியங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. "அவ்விடத்திலே மோசேயும் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளையும் கால்களையும் கழுவினார்கள். கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்துக்குள்ளே பிரவேசிக்கிறபோதும், பலிபீடத்தண்டையில் சேருகிறபோதும், அவர்கள் கழுவிக்கொள்ளுவார்கள்." (யாத் 40:31, 32) ஆயினும் ஆசாரியர்கள் தண்ணீர் தொட்டியில் தங்களை சுத்திகரிக்கக் கூடிய பொதுவான சுத்திகரிப்பை இது குறிக்கிறது. மாறாக ஆசரிப்புக் கூடாரம் ஸ்தாபிக்கப்பட்ட நாளின் போது சுத்திகரிக்கப்பட்டதை இது குறிக்கவில்லை.

யாத்திராகமம் 40-ம் அதிகாரத்தின் முடிவு வரைக்கும் பதிவு செய்யப்பட்ட அந்த நாளுக்குரிய அதே சம்பவத்தை லேவியராகமம் 8-ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால் யாத்திராகமம் 40-ம் அதிகாரத்தில் நடந்த சம்பவத்தின் தொடர்ச்சியை லேவியராகமம் 8:1 வசனத்திலிருந்து காணலாம்.

லேவியராகமத்தின் முதல் ஏழு அதிகாரங்களும் ஆசரிப்புக் கூடாரத்தில்

ஏறெடுக்கப்பட வேண்டிய ஐந்து விதமான பலிகளைக் குறித்த ஒழுங்குகளும், பிரமாணங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளது - தகன பலிகள், போஜன பலிகள், சமாதான பலிகள், பாவநிவாரண பலிகள் மற்றும் குற்ற நிவாரண பலிகள். மேலும் அந்த ஏழு அதிகாரங்கள் அந்த குறிப்பிட்ட நாளில் நடக்கக்கூடிய எந்த கிரியைகளைக் குறித்தும் பதிவு செய்யவில்லை. எதிர்பார்த்தபடி அந்த ஒழுங்குகள், அனைவரும் காணும்படியாக முன் வைக்கப்பட்டது. ஏனெனில் லேவியராகமத்தில் மீதியுள்ள அதிகாரங்களில் சொல்லப்பட்ட பலிகளுக்குத் தேவையான அஸ்திபாரமான காரியங்கள் முதல் ஏழு அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

முதல் ஏழு அதிகாரங்கள் பலிகளைக் குறித்த முக்கியமான செய்திகளைக் கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக, லேவியராகமம் 16-ம் அதிகாரம் இஸ்ரயேலில் வருடம் ஒருமுறை நடக்கக்கூடிய பாவநிவாரண நாளைக் குறித்து பேசுகிறது. பாவநிவாரண நாளின் போது மூன்று காரியங்களை தகனபலிகளாகக் கொடுப்பது பொதுவானதாய் தோன்றுகிறது - பரிசுத்த ஸ்தலத்திலுள்ள தூபபீடம் ஐக்கியமான உள் உறுப்புகள் மற்றும் வெண்கல பலிபீடத்தில் செலுத்தப்படும் கொழுப்பு பாளயத்திற்கு வெளியே எரிக்கப்படும் அதின் தோல்களும், அதின் சாணமும் இந்த மூன்று தகனபலிகளிலும் முதல் மற்றும் இறுதியான பலிகளைக் குறித்து லேவியராகமம் 16-ம் அதிகாரம் விசேஷித்த விதமாகக் குறிப்பிடுகிறது. ஆயினும் இரண்டாவது தகனபலியைக் குறித்து எந்த பதிவுகளும் காணப்படவில்லை. முக்கியமான உள்உறுப்புகளும், கொழுப்பும் பிரகாரத்திலுள்ள வெண்கல தகன பலிபீடத்தின் மேல் எரிக்கப்படும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். மேலும் குறிப்பாக லேவியராகமம் 4:8-10 வசனங்கள் குறிப்பாக இதை குறித்து தெளிவாகப் பேசுகிறது.

லேவியராகமத்தில் முதல் ஏழு அதிகாரங்களைத் தொடர்ந்து வரும் 8-ம் அதிகாரம் மீண்டும் நம்மை யாத்திராகமம் 40-ம் அதிகாரத்தின் முடிவுக்குக் கொண்டு செல்கிறது. லேவி 8:1-3-ம் வசனங்களில், ஆரோன் மற்றும் அவருடைய குமாரர்களையும் குறித்த கட்டளைகளை தேவன் மோசேக்குக் கொடுத்ததை மறுபடியும் குறிப்பிடுகிறது. மேலும் 4 முதல் 13 வசனங்கள் தேவனுடைய கட்டளைகளை மோசே நிறைவேற்றின விதத்தைக் குறிக்கிறது.

இப்படியாக லேவி 8:4-13 வசனங்கள் - மோசே ஆரோனையும் அவருடைய குமாரரையும் சுத்திகரித்து ஆசாரியர்களுக்கு உரிய வஸ்திரங்களை அணிவித்து பரிசுத்த தைலத்தினால் ஆரோனை அபிஷேகித்த காரியங்கள் குறிப்பிடப்படுகிறது. (ஒருவேளை இரத்தத்தோடு தெளிக்கப்படும் இந்த அபிஷேகத் தைலம் யாத் 30:30 மற்றும் லேவி 40:15 வசனங்களில் சொல்லப்பட்டதாக இருக்க வேண்டும். அல்லது குமாரர்களின் முழுமையான அபிஷேகத்தைக் குறித்து ஆரோனுக்கு நடந்ததுபோல படிப்படியான காரியங்கள் லேவி 8-ம் அதிகாரத்தில் பதிவு செய்யாமல் விடப்பட்டு இருக்கலாம்.)

இப்படியாக 40-ம் அதிகாரமும், லேவி 8-ம் அதிகாரமும் இணைக்கப்பட்டுள்ளது. இவைகள் ஒரே நாளில் நடந்த சம்பவங்களை விவரிக்கிறது. ஆரோனையும் அவருடைய குமாரர்களையும் குறித்து தேவன் மோசேயிடம் சொல்லிய காரியங்களை யாத் 40-ம் அதிகாரத்தில் காணலாம். அக்காரியங்களை மோசே நிறைவேற்றினதை லேவி 8-ம் அதிகாரத்தில் காணலாம்.

இந்த ஒரு இணைப்பும் மேலும் உறுதிப்படுத்தப்படுகிறது. யாத் 40:9-11 வசனங்களில் ஆசரிப்புக் கூடாரம் ஸ்தாபிக்கப்பட்ட பின் அதில் உள்ள சகல தட்டுமுட்டு சாமான்களையும் அபிஷேக தைலத்தினால் சுத்திகரிக்கப்பட வேண்டும் என்று தேவன் மோசேயிடம் கூறினார். இப்படியாக மோசே செய்த காரியங்கள் 17-ம் வசனம் முதல் விவரிக்கப்படுகிறது. ஆனால் இந்த பொருட்களை அபிஷேகித்தது குறித்து யாத்திராகமம் விவரிக்கப்படாமல், லேவி 8:10, 11 வசனங்களில் விவரிக்கப்படுகிறது. அதில் மோசே ஆசரிப்புக் கூடாரத்தையும், அதிலுள்ள சாமான்களையும், பிரகாரத்திலுள்ள பலிபீடத்தையும், அங்குள்ள கோத்திரங்களையும், தண்ணீர் தொட்டியையும், அதின் பாதங்களையும் அபிஷேகம் செய்தார் என்று தெளிவாக காணப்படுகிறது.

இக்காரியங்கள் நிறைவேறின பின் ஆரோனும் அவருடைய குமாரர்களும் ஏழு நாளளவும் பிரதிஷ்டை பண்ணப்பட்டார்கள். "பிரதிஷ்டையின் நாட்கள் நிறைவேறும்வரைக்கும், ஏழுநாள் ஆசரிப்புக் கூடாரவாசலை விட்டுப் புறப்படாதிருங்கள்; ஏழுநாளளவும் நீங்கள் பிரதிஷ்டைப் படுத்தப்படுவீர்கள்."(லேவி 8:33) இந்த ஏழு நாட்களும் சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்துகிறது. அவைகளை வெளிப்படுத்தின விசேஷத்திலுள்ள 2 மற்றும் 3 அதிகாரங்களில் சொல்லப்படும் ஏழு பகுதிகளான ஏழு சபைகளைக் குறிக்கக் கூடியதாய் இருக்கிறது.

இவைகள் அனைத்தும் புதிய வருடத்தின் துவக்கமாகிய முதல் மாதத்தில், முதல் நாளில் துவங்கப்பட்டது. யுகங்களுக்குரிய தேவனுடைய திட்டத்தில் - சுவிசேஷ யுகத்தில் - புதிய துவக்கத்தை அடையாளப்படுத்துகிறது. இந்த காரியத்தில் இரண்டாம் வருடம் என்று குறிப்பிடும் விஷயம் பரிசுத்த ஆவியை நமக்கு சித்தரிக்கக்கூடியதாய் இருக்கிறது. எடுத்துக் காட்டாக சகரியா 4:3-ல் சொல்லப்பட்ட இரண்டு ஒலிவ மரங்களும், லூக்கா 22:38-ல் சொல்லப்பட்ட இரண்டு பட்டயங்களும் பரிசுத்த ஆவியை அடையாளப்படுத்தும். இரண்டு என்ற எண்ணுக்கு ஒப்பிடப்படுகிறது. ஆகவே, நம்முடைய இயேசு தம்முடைய சீஷர்களோடு புதிதாக துவங்கி வைத்த ஆவிக்குரிய யுகத்தை இரண்டு என்ற எண் அடையாளப்படுத்துகிறது. (சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவின் இரட்சிப்பை சித்தரிக்கும் பேழையில் காக்கப்பட்ட எட்டு பேர்களைக் குறித்து 1 பேதுரு 3:20, 21-ல் குறிக்கிறது. இந்த விஷயத்தில் பேழைக்குள் நுழைவதே சுவிசேஷ யுகத்தின் துவக்கத்திற்கு ஒப்பிடப்படுகிறது. இரண்டாம் மாதத்தில் ஜலப்பிரளயம் நடந்ததென்பதை குறிப்பாய் சொல்லப்படுகிறது. இங்கும் இரண்டு என்ற எண் பயன்படுகிறது. (ஆதி 7:11) இந்த இரண்டாம் மாதம் (எண். 2) ஒருவேளை யாத்திராகமம் 40:17-ம் வசனங்களில் சொல்லப்பட்ட இரண்டாம் வருஷத்தில் அதே பொருளைக் கொடுக்கக் கூடியதாக இருக்கலாம். இப்படியாக சபை வகுப்பார் வளர்ச்சியடையக்கூடிய இந்த யுகம் பரிசுத்த ஆவியினால் துவங்கப்பட்டது.)

**சாலொமோன் ஆலயம்**

ஆசரிப்புக் கூடாரம் தற்காலிகமான ஒரு கட்டமைப்பாகக் காணப்பட்டாலும், சாலொமோன் கட்டின ஆலயம் ஒரு நிரந்தரமான கட்டமைப்பாகத் தோன்றியது. இவை இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகளை நீண்ட காலமாக இரட்சிப்பின் இரண்டு யுகங்களை அடையாளப்படுத்தும் சுவிசேஷ யுகம் மற்றும் ஆயிர வருட ஆட்சிக்கு ஒப்பிடப்படுகிறது. இதில் சொல்லப்படும் முதல் யுகம் தேவனுடைய பரிசுத்தவான்கள் அழைக்கப்பட்டு வளர்ச்சியடையக் கூடிய ஒரு காலப்பகுதியாக இருக்கிறது. ஆசரிப்புக் கூடாரத்தின் தரை மண்ணினால் அல்லது மணலாக காணப்பட்டது. அதே நேரத்தில் சாலொமோன் கட்டின தரை பொன்னாக இருந்தது. இப்படியாக இரண்டு கட்டமைப்புகளையும் கட்டப்பட்ட பொருட்கள் அளவுகள் நீடித்து உழைத்து போன்ற காரியங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது சுவிசேஷ யுகத்தில் சபை அனுபவிக்கக்கூடிய தற்காலிக அனுபவங்களை ஆசரிப்புக் கூடாரமும் ஆயிரவருட ஆட்சியில் நித்தியமான மகிமையடைந்த சபை சாலொமோன் கட்டின ஆலயத்தையும் அடையாளப்படுத்துகிறது.

சாலொமோன் கட்டின ஆலயமும், புதுவருட துவக்கத்தில் பிரதிஷ்டை பண்ணப்பட்டது. ஆயினும் அந்நேரத்தில் இஸ்ரயேலர்கள் வசந்த காலத்தைக் கொண்டு வருடங்களைக் கணக்கிடாமல். இலையுதிரும் காலத்தைக் கொண்டு கணக்கிடத் துவங்கினார்கள். வசந்த காலத்திலிருந்து கணக்கிடப்படும் மாதங்களின் வரிசையில் ஆபிப் முதலாம் மாதமாகவும், சீப் இரண்டாம் மாதமாகவும் காணப்படுகிறது. (1 இரா 6:1 வசனம் இரண்டாம் மாதத்தின் பேரை சீப் என்று கூறுகிறது. 1 இராஜாக்கள் 6:38 எட்டாம் மாதத்தை பூல் என்று கூறுகிறது. 1 இராஜ 8:2 ஏழாம் மாதத்தை ஏத்தானீம் என்று கூறுகிறது. இப்பொழுது ஆதிகால இஸ்ரயேலர் வரலாற்றில் கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாதங்களைக் குறித்து நாம் அறிந்திருக்கிறோம். ஆபிப் - 1, சீப் - 2, ஏத்தானீம் - 7, பூல் - 8 மற்ற மாதங்களை இஸ்ரயேலர்கள் எப்படி அழைத்தார்கள் என்று நமக்கு தெரியவில்லை. ஒருவேளை பாபிலோனின் சிறையிருப்புக்குப் பின்பு பாபிலோனிய

பெயர்களிலிருந்து மற்ற மாதங்களின் பெயர்களை இவர்கள் சூட்டியிருக்கலாம். இவைகளையே எபிரெயர்கள் பிற்காலத்தில் பயன்படுத்தினார்கள்.) ஆனால் வருடங்களை எண்ணக்கூடிய வரிசை இலையுதிர் காலமாகிய ஏழாம் மாதம், முதல் தேதியில் துவங்கியது.

வனாந்தரப் பயணத்திற்குப் பின் இஸ்ரயேலர்கள் வசந்த காலத்திலிருந்து தங்களுடைய வருடங்களைக் கணக்கிட்டார்கள் என்பதை உபா 1:3-ம் வசனத்தோடு எண் 33:38-ம் வசனத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் நாம் அறிந்து கொள்ளலாம். இந்த வேத பகுதிகள் அந்த வருடத்தை 40-ம் வருடம் என்றும் 11-ம் மாதத்திற்கு முன் வந்த ஐந்தாம் மாதம் என்று கூறுகிறது. இவைகளின் பொருளை புரிந்து கொள்வது மிகக் கடினமாக இருக்கிறது. ஆனால் உண்மையில் ஐந்து மற்றும் பதினோராம் மாதத்திற்கு இடையில் அந்த வருடம் மாறவில்லை என்று உறுதியளிக்கிறது. இப்படியாக அந்த வருடம் ஏழாம் மாதம் துவங்கும் போதும் மாறவில்லை.

இந்நாளில் இம்மாற்றம் காணப்படுகிறது. இன்றைய தினங்களில் யூத ஜனங்கள் தங்களுடைய வருஷத்தை திஸ்ரி மாதம், முதல் தேதியில் துவங்குகிறார்கள். (ஏழாம் மாதத்தை திஸ்ரி என்ற பெயரில் பயன்படுத்தி வருகிறார்கள்.) வருடங்களில் இப்படிப்பட்ட மாற்றங்கள் எப்பொழுது ஏற்பட்டது? மிக நீண்ட காலத்திற்கு முன்பு இதற்கான ஆதாரத்தை 2 நாளாகமம் 34:8-ம் வசனத்தோடு 2 நாளா35:19-ம் வசனத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் அறிந்து கொள்ளலாம். (2 நாளா 34:8 முதல், 2 நாளா 35:19-ம் வசனம் வரைக்கும் ஓசியா இராஜாவின் 18-ம் வருஷத்தில் ஆலயம் செப்பனிடப்படும் வேலையைக் குறித்து பேசுகிறது. இச்செயலின் போது, புறக்கணிக்கப்பட்ட ஒரு நியாயப்பிரமாண பிரதி கண்டுபிடிக்கப்பட்டது. இதை வாசித்த இராஜா யூதேயாவை சீர்ப்பொருத்த துவங்கி முதலாம் மாதம் 14-ம் தேதி பஸ்காவை அனுசரித்தார். அந்த பஸ்கா யோசியா இராஜாவின் 18-ம் வருஷத்தில் அநுசரிக்கப்பட்டது. (2 நாளா 35:19) இப்படியாக இதுவரைக்கும் நீசான் முதலாம் மாதம் என்பது மாற்றப்படவில்லை.)

(முதலாம் மாதம் துவங்கி அந்த வருடத்தின் கணக்கை அவர்கள் வரிசைப்படுத்தவில்லை என்ற உண்மையை - வசந்த காலம், வருடத்தின் மாற்றத்தை குறிப்பிடுகிறது. உண்மையில், எல்லா யூத இராஜாக்களின் ஆட்சியும் இலையுதிர் காலத்திலிருந்து கணக்கிடப்பட்டது. )

வசந்த காலத்தில் ஆசரிப்புக் கூடாரம் கட்டப்பட்டப்போது மாற்றப்பட்ட வருடம் துவங்கியது. அதற்கு பின் இலையுதிரும் காலத்தில் சாலொமோனுடைய ஆலயம் கட்டப்பட்டது. இவைகளுக்கு ஆழமான பொருளுண்டு. நியாயப்பிரமாணத்தின் கீழ் இருக்கும் வசந்த காலப் பண்டிகைகள் சுவிசேஷ யுக சபையையும், இலையுதிர் காலத்தில் கொடுக்கப்பட்ட பண்டிகைகள் ஆயிரவருட ஆட்சியின் இந்த உலக மனுக்குலத்தையும் அடையாளப்படுத்தப்படுகிறது.

ஆசரிப்புக் கூடாரம், வசந்த காலத்தில் அமைக்கப்பட்டது. ஆலயம், வசந்த காலத்தில் கட்டுவதற்கு துவங்கப்பட்டாலும், அது இலையுதிர் காலத்தில் நிறைவடைந்தது. ஆலயம் கட்டப்பட்ட ஏழு வருடங்கள் சுவிசேஷ யுகத்தின் ஏழு காலங்களை அடையாளப்படுத்துகிறது. இந்த யுகத்தில் ஆவிக்குரிய ஆலயமாகக் கட்டப்படும் ஜீவனுள்ள கற்கள் செப்பனிடப்பட்டு வடிவமைக்கப் படுகிறார்கள். இலையுதிர்காலம் - ஆலயம் முழுமைப் பெற்றபோது - இரட்சிப்பின் இரண்டாவது நிலையை அடையாளப்படுத்தும் வருடத்தின் மற்றொரு பகுதியாய் இருக்கிறது. அதாவது, சபை வகுப்பார் நிறைவடைந்த பின் இரண்டாம் யுகத்திற்கான பொதுவான இரட்சிப்பு துவங்கும்.

**எந்த நாள்?**

ஏழாம் மாதம் முதலாம் தேதியில் ஆலயம் பிரதிஷ்டை பண்ணப்பட்டிருந்தால், தேவனுடைய திட்டத்தில் ஆயிரவருட ஆட்சியின் யுகத்தை ஒரு புதிய யுகமாக துவங்குவதை இது குறிக்கும். ஆயினும், ஆலயம் ஏழாம் மாதத்தில் பிரதிஷ்டை பண்ணப்பட்டாலும் அது ஒரே நாளில் முடிந்து விடவில்லை. இது எந்த நாள்? அதின் பொருள் என்ன?

நாட்களின் எண்ணிக்கை நமக்கு நேரடியாகக் கொடுக்கப்படாமல் போனாலும் சில வசனப்பகுதிகளிலிருந்து மறைமுகமாக

அவைகளைக் கண்டுபிடிக்கலாம். 1 இரா 8:65-ம் வசனத்தில் ஆலயம் பிரதிஷ்டை நடைபெறும் பொழுது, சாலொமோன் இஸ்ரயேல் ஜனங்களுக்காக - "ஏழு நாளும் அதற்கு பின்பு வேறே ஏழு நாளும், ஆக பதிநான்கு நாள் வரைக்கும் பண்டிகையை ஆசரித்தார்கள்" என்று வாசிக்கிறோம். இந்த செய்தி இன்னும் அதிகமான தகவல்களோடு 11நாளா 7:8-10 வசனங்களில் இன்றும் காணப்படுகிறது.

அதே நேரத்தில் சாலொமோன் ஏழு நாட்கள் எல்லா இஸ்ரயேலர்களோடு பண்டிகை ஆசரித்து ஒரு மிகப்பெரிய சபையாக கூடியிருந்தார்கள். எட்டாம் நாளில் அனைவரும் சபை கூடி வந்து ஏழு நாட்கள் பலிபீடத்தை பிரதிஷ்டை படுத்தினார்கள். மேலும் ஏழாம் மாதத்தின் மூன்று மற்றும் இருபதாம் நாளில் அவர் ஜனங்களை தங்களுடைய கூடாரங்களுக்கு அனுப்பிவிட்டார்.

இரண்டு பண்டிகைகளையும் குறிப்பாகக் காணலாம் - ஏழு நாட்களில் நடந்த பலிபீடத்தின் பிரதிஷ்டை மற்றும் ஏழு நாட்கள் நடந்த பண்டிகை இந்த இரண்டாம் பண்டிகை கூடாரங்களின் பண்டிகையை குறிப்பிடுகிறதாக இருக்கிறது. இது ஏழாம் மாதத்தின் 15-லிருந்து 21- தேதி வரைக்கும் நடைபெற்றது. அதை தொடர்ந்து வந்த எட்டாம் நாள், அதாவது, 22-ம் தேதி அன்று பரிசுத்த கூடுதலாக அநுசரிக்கப்பட்டது. அதை தொடர்ந்து வந்த 23-ம் தேதியில் சாலொமோன் ஜனங்களை ஆசீர்வதித்து அவர்களை வீட்டிற்கு அனுப்பினான். ஆகவே, பலிபீடத்தின் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஏழு நாட்களைத் தொடர்ந்து கூடாரங்களின் பண்டிகை அநுசரிக்கப்பட்டது. சொல்லப்போனால் எட்டாம் நாளிலிருந்து பதிநான்காம் நாள் வரைக்கும் மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால் எட்டு என்ற எண்ணைக் குறிக்கக்கூடிய அந்த ஒரே நாளில் முழுமையான பிரதிஷ்டை செயல்பட்டிருக்க வேண்டும். இதன் பொருள் எதை காண்பிக்கிறது?

ஆசரிப்புக் கூடாரம் கட்டும் பொழுது ஆசாரியர்கள் ஏழு நாளளவும் பிரதிஷ்டை பண்ணப்பட்டார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். (முதலாம் மாதம் ஒன்று முதல் ஏழு தேதிகள் = சுவிசேஷ யுகத்தின் ஏழு பகுதிகள்) இப்படியாக எட்டாம் நாளில் ஆசாரியத்துவம் செயல்படுவதற்கு ஆயத்தமானது. ஆகவே, "எட்டாம் நாளிலே மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் இஸ்ரவேலின் மூப்பரையும் அழைத்து," (லேவி 9:1)என்று ஆசாரியத்துவம் ஆயத்தமானது என்று வாசிக்கிறோம். இங்கு எட்டு என்ற அந்த நாள் சுவிசேஷ யுகத்தின் ஏழு காலங்களைத் தொடர்ந்து வரும் கிறிஸ்துவின் இராஜ்யத்தை அடையாளப்படுத்துகிறது.

ஒருவேளை சாலொமோன் ஆலயத்தின் பிரதிஷ்டை செய்யப்பட்ட அந்த எட்டாம் நாள் சுவிசேஷ யுகத்தின் ஏழு காலங்களைத் தொடர்ந்து வரும் ஆயிரவருட ஆட்சிக்கு அருமையான சித்திரமாக அமைக்கப்படுகிறது.

**ஜலப்பிரளயம் உலர்ந்தது**

வேதாகமத்தில் சித்தரிக்கப்படும் காரியங்கள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டு இருந்தாலும், ஆங்காங்கே சின்ன சின்ன வித்தியாசங்கள் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக பரிசுத்த ஸ்தலத்தில் காணப்படும் ஏழு கிளைகள் கொண்ட குத்துவிளக்கு ஒரே தண்டை உடையதாக சபை வகுப்பாரின் ஏழு நிலைகளை அடையாளப்படுத்துகிறது. ஆயினும் வெளிப்படுத்தல் 1:20-ம் வசனத்தில் ஏழு சபைகளை அடையாளப்படுத்தும் ஏழு குத்துவிளக்குகள் தனித்தனியே காணப்படுகிறது. காண்பிக்கப்படும் அடையாளங்களில் வேறுபாடுகள் தென்பட்டாலும் அதற்குள் இருக்கும் தொடர்புகளை ஒருவர் விட்டுவிடக் கூடாது.

இப்படிப்பட்ட ஒரு கோட்பாடு தேவனுடைய இராஜ்யத்திற்குரிய காலத்தை அடையாளப்படுத்துவதற்குபபயன் படுத்த ப்பட்டுள்ளது.பழைய உலகத்தை ஜலப்பிரளயம் அழித்த பின் வந்த புதிய துவக்கத்தை சுவிசேஷ யுகத்தின் துவக்கமாகக் காட்டப்படுகிறது. (1 பேதுரு 3:20, 21) ஆகவே, ஜலப்பிரளயம் முழுமையாக உலர்ந்து போவதை சுவிசேஷ யுகத்தின் முடிவை அடையாளப்படுத்துகிறது. அதாவது, சாபத்தின் முடிவின் இராஜ்யம் துவங்கும், ஆதி 8:13-ம் வசனம் இச்சம்பவத்திற்கான துல்லியமான தேதியைக் குறிப்பிடுகிறது. "அவனுக்கு அறுநூற்றொரு வயதாகும் வருஷத்தில், முதல் மாதம் முதல் தேதியிலே பூமியின்மேல் இருந்த ஜலம்


வற்றிப்போயிற்று; நோவா பேழையின் மேல்தட்டை எடுத்துப்பார்த்தான்; பூமியின்மேல் ஜலம் இல்லாதிருந்தது."

வனாந்தரப் பிரயாணத்தின் போது, வருடத்தின் வசந்த காலத்தில் மாதங்களாகக் கணக்கிடத் துவங்கப்பட்டாலும், இந்த முதலாம் மாதம் வருஷத்தின் இலையுதிர் காலத்தில் துவங்கியிருக்க வேண்டும். இந்த விஷயத்தில் இந்த உலகத்திற்கு துவங்கப்படும் தேவனுடைய ஆயிரவருட ஆட்சி மிக அருமையாக தொடர்புடையதாய் இருக்கும். புதிய வருடத்தின் முதல் நாள், ஒரு புதிய யுகத்தின் துவக்கத்தை அடையாளப்படுத்துகிறது. ஆனால், அதோடு சேர்க்கப்பட்ட சில ஆவிக்குரிய கோணங்கள் இன்னும் ஆழமான புதிய துவக்கங்களை வலியுறுத்துகிறது. இந்த புதிய துவக்கம் புதிய நூற்றாண்டுக்கான முதல் நாளாகவும் காணப்பட்டது. ஏழாவது நூற்றாண்டின் முதல் நாளாகவும் காணப்பட்டது.

தேவனுடைய ஆயிரவருட ஆட்சியின் போது, ஆறாயிரம் வருடங்களாக இந்த உலகத்தை சுற்றிக் கொண்டிருந்த சாபம் முடிவுக்கு வரும். அழிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட தண்ணீர்கள் உலர்ந்து போகும். ஒரு புதிய உலகம் திறக்கப்படும். உலகத்தில் அனுமதிக்கப்படும் இறுதியான அனுபவங்கள் மனுக்குலத்தின் இருதயங்களை இலகுவாக்கும். அதற்குபின் மத்திய கிழக்கு பகுதிகளிலிருந்து வெளிப்படும் செய்திகளின் வழியாக ஜனங்களின் நீண்டகால கனவுகளையும், பிடித்தமான நம்பிக்கைகளையும் அடைவார்கள். "அக்காலத்திலே: இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும்." (ஏசா 25:9) மனுஷன் நீண்டகாலமாகக் காத்திருக்கக்கூடிய ஒரு புதிய துவக்கமாக இது இருக்கும்.

தீமையை வல்லமையோடு மேற்கொள்ளுதல்

# அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கைக்கான சூத்திரம்



"நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு." (ரோமர் 12:21)

Ernie Kuenzli

மேற்கூறப்பட்ட அப்போஸ்தலர் பவுலின் வாக்கியமானது, அதற்கு முன் எழுதப்பட்ட சாரம்சத்தின் முடிவுரையாகும். ரோமர் 12-ம் அதிகாரத்தில், ஓர் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்ற ஆலோசனையை பவுல் நமக்கு கொடுத்து சகலவிதமான தீமைகளையும், நன்மையால் வெல்ல வேண்டும் என்ற வார்த்தையோடு முடிக்கிறார். ரோமர் 12-ம் அதிகாரத்தை பிலிப்ஸ் (Phillips) மொழிப்பெயர்ப்பிலிருந்து நாம் எடுத்துள்ளோம். ஏனெனில், பவுலின் ஆலோசனைக்கு சில முக்கியமான கருத்துக்கள் அதில் கூறப்பட்டுள்ளது.

ரோமர் 12:1, 2-ல், பவுல் தம்முடைய அறிவுரையைத் துவங்குகிறார். "இப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று தேவனுடைய இரக்கங்களுக்கு உங்கள் கண்கள் விரிவாய் திறந்திருக்கும் படி உங்களை வேண்டிக் கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யக்கூடிய புத்தியுள்ள ஆராதனை. உங்களை சுற்றி இருக்கும் உலகம் உங்களை நெருக்கி அதற்கு இசைவாக உங்களைப் பயன்படுத்த அனுமதிக்காமல் தேவன் உங்கள் சிந்தையை சீரமைப்பதற்கு அனுமதித்து தேவனுடைய சித்தத்தின்படி செயல்படுவதே நன்மை என்பதை நிரூபித்து சகல தேவைகளையும் சந்தித்து உண்மையான வளர்ச்சியடைய இலக்கை நோக்கி தொடருங்கள்." (பிலிப்ஸ் மொழிபெயர்ப்பு)

நம்முடைய முழு கிறிஸ்தவ நடையை இந்த வசனங்கள் விவரிக்கிறது. முதலாம் வசனம், நம்முடைய நீதிமானாக்கப்பட்ட மாம்சத்தின் பலியையும் அதாவது இயேசு கிறிஸ்துவின் ஈடுபலியின் மேல் நாம் வைக்கும் விசுவாசத்தினால் பெறக்கூடிய நீதிமானாக்கப்பட்ட நிலையை விவரிக்கிறது. இயேசுவைப் போல நம்முடைய பலியும் ஜீவனுள்ள பலியாக தேவனுக்குக் கீழ்ப்படிவதிலும், சத்தியத்திற்கும், சகோதரர்களுக்கும், ஊழியம் செய்வதிலும் நம்முடைய ஜீவனைக் கொடுக்கக் கூடியதாய் இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட தேவையான முக்கியமான உறுப்புகளை பாவநிவாரண பலியாக செம்பு பலிபீடத்தின் மேல் எரிக்கப்பட்டு மீதியுள்ள மிருகத்தின் உறுப்புகளை பாளயத்திற்கு வெளியே எரிக்கப்படுவதின் மூலம் இது தெளிவாக நமக்கு காண்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் வசனம், புது சிருஷ்டியின் நடக்கையையும் அதின் வளர்ச்சியையும் விவரிக்கிறது. நம்முடைய வாழ்க்கையில் நடைபெற வேண்டிய சுத்திகரிப்பின் வேலைகளையும் கிறிஸ்துவுக்கு ஒப்பான புதிய சிந்தையின் வளர்ச்சிக்குரிய கிரியைகளைப் பற்றி விவரிக்கிறது. இவைகள் ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள பரிசுத்த ஸ்தலத்திலுள்ள ஆசாரியர் மூலமாக காண்பிக்கப்படுகிறது. 1. மேஜையின் மேல் இருக்கும் சமூகத்து அப்பத்தை உட்கொள்வது, 2. குத்துவிளக்கு வெளிச்சத்தில் வசிப்பது மற்றும் 3. பொன்னான தூபப்பீடத்தில் சுகந்த தூபவர்க்கங்களை எரிப்பது.

ஆயினும் அப்போஸ்தலராகிய பவுல், ரோமர் 12-ம் அதிகாரத்தோடு அர்ப்பணிக்கக்கூடிய உச்சநிலை விவரங்களை அவர் நிறுத்திவிடவில்லை. அவர் தொடர்ந்து வரும் அதிகாரங்களில், "உங்கள் சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும்" மற்றும் "தேவன் உங்களை உருவாக்கட்டும்" என்ற வாக்கியங்களுக்கான விளக்கத்தை தொடர்ந்து விவரிக்கிறார்.

"அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது; உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத்தேவன் பகிர்ந்தவிசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்" (ரோமர் 12:3) என்று பவுல் எழுதுகிறார். பவுல் தன்னுடைய ஆலோசனையின் துவக்கத்தில் தாழ்மையை குறித்துப் பேசுகிறார். இதற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கு மனத்தாழ்மை ஒரு அஸ்திபாரமான காரியமாக மட்டும் இராமல், அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கைக்கு அஸ்திபாரமே மனத்தாழ்மை தான். "மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயமஞ்செய்து,

இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்" (மீகா 6:8) என்று தீர்க்கதரிசியான மீகா எழுதுகிறார். நம்முடைய ஜீவனை பலி செலுத்தி அல்லது குமாரனுடைய சாயலைப் பெறுவதற்கு தேவன் நம்மை பக்குவப்படுத்தும்படி அனுமதிப்பதற்கு இந்த மனத்தாழ்மை மிகமிக அவசியம்.

தேவனுடைய பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு மனத்தாழ்மை என்ற இந்த சிறப்பான குணமே மிக முக்கியமானது என்று இயேசு வலியுறுத்துகிறார். "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது." (மத்5:3) இதன் முக்கியத்துவத்தை அப்போஸ்தலனாகிய பேதுருவும் 1 பேதுரு 5:5-ல் உறுதிபடுத்துகிறார்.

அடுத்து, கிறிஸ்துவின் சரீரத்தில் நாம் மட்டுமல்ல, இன்னும் அநேக அவயவங்கள் உண்டு என்பதை பவுல் நமக்கு நினைப்பூட்டுகிறார். "ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்." (ரோ12:4, 5 )

கிறிஸ்துவின் சரீரத்தை ஒரு மனித சரீரத்தோடு, 1 கொரி 12-ம் அதிகாரத்தில் ஒப்பிடுகிறார்.-"எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார். நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். அவயவங்கள் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றே. சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு, அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார். ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்." (1கொரி 12:12, 13, 18, 20, 25-27)

இந்த இரண்டு பகுதிகளிலும் அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள வேறு பாடுகளைக் குறித்து பேசுகிறார், சகலவிதமான தேசத்தாரிலிருந்தும், பாஷைக்காரர்களிலிருந்தும் சபை வகுப்பார் தேவனால் அழைக்கப் பட்டிருக்கிறார்கள். மேலும் எல்லாவிதமான சமுதாயம் மற்றும் பொருளாதார பின்னணியிலிருந்தும் தேவன் இவர்களை அழைத்திருக்கிறார். ஆகவே "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலா 3:28 )என்று எழுதப்பட்டுள்ளது. தேவன் பிரியப்படுகிறபடி கிறிஸ்துவின் சரீரத்தில் ஒவ்வொரு அங்கத்தினர்களையும் பொருத்தி இருக்கிறார். ஆகவே சரீரத்தில் இருக்கும் ஒவ்வொரு அங்கத்தினர்களையும் தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்தின் அங்கத்தினர்களாக ஏற்றுக் கொள்ளக்கூடிய பொறுப்பைப் பெற்றிருக்கிறோம். சபையின் அங்கத்தினராக வெற்றிகரமாய் நடைபயில்வதற்கு இதுவே ஆதாரமாய் உள்ளது.

"யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (ரோமர் 12:6)என்று அப்போஸ்தலனாகிய பவுல் தொடருகிறார். சரீரத்தில் உள்ள பலதரப்பட்ட அவயவங்கள் வேறுபட்ட வரங்களையும் திறமைகளையும் பெற்றிருக் கிறார்கள். வரங்கள் என்ற வார்த்தை சரிஸ்மா (charisma) என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (Strongs #5486). இதற்கு தெய்வீகம் அல்லது ஆவிக்குரிய என்று பொருள்படுகிறது. பவுலினால் விவரிக்கப்பட்ட வரங்கள் - சத்தியத்திற்காகவும், சகோதரர்களுக்காகவும் ஊழியம் செய்வதற்கு பயன்படுத்தக்கூடிய திறமைகளும் வல்லமையுமாய் இருக்கிறது. தேவைப்படும் பொழுது நம்முடைய தாலந்துகளையும் திறமைகளையும் வரம்புக்குள் பயன்படுத்த வேண்டும் என்று பவுல் நம்மை எச்சரிக்கிறார்.

போதிக்கக்கூடிய வரத்தைப் பற்றி துவங்குகிறார். கோதுமை என்ற வார்த்தை பிரோபெட்டியா (propheteia) என்ற கிரேக்க

வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (Strongs #4394) இதற்கு தீர்க்கதரிசனம் அல்லது வசனத்தின் வழியாக முன்னறிவித்தல் என்று பொருள்படும். தீர்க்கதரிசனங்கள் அவ்விசுவாசிகளுக்கு அல்ல, விசுவாசிகளுக்கே என்று பவுல் எழுதுகிறார். (1கொரி14:22)

சுவிசேஷ யுகத்தில் இனி நடக்கக்கூடிய காரியம் என்னவென்றும் அதற்கு இசைவாக எவ்வாறு நாம் செய்ய வேண்டும் என்றும், சகோதரர்களை முன்னதாக எச்சரிப்பதற்கே பிதாவாகிய தேவனால் தீர்க்கதரிசனங்களை வடிவமைத்திருக்கிறார்.

- போலித் தலைவர்கள் எழும்புதல் (அப் 20:29-31)
- போலி அமைப்புகளின் வளர்ச்சி (11 தெச 2:3, 4)
- சபையில் ஏழு வேறுபட்ட பகுதிகளில் சபை என்ன செய்ய வேண்டும் என்றும், எதை செய்யக்கூடாது என்றும் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும். (வெளி 2, 3 அதிகாரங்கள்)
- நம்முடைய ஆண்டவரின் இரண்டாம் வருகைக்குரிய அடையாளங்கள் (மத் 24:30-33)
- யுகத்தின் முடிவைக் குறிக்கக்கூடிய சம்பவங்கள் (2 தீமோ 3:1-5; 2 பேது 3:3, 4, 10-13; வெளி 18:1-6)

சகோதரர்கள் ஒருவரிலொருவர் பயமுறுத்துவதற்காக தீர்க்கதரிசனங்கள், என்றும் வடிவமைக்கப்படவில்லை. மேலும் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சி நிலையையோ புரிந்து கொள்ளுதலையோ - தீர்க்கதரிசனங்களைப் புரிந்து கொள்ளுதலை வைத்து எப்பொழுதும் அளவிடக்கூடாது. மாறாக கண்ணியில் சிக்காதபடிக்கு சகோதரர்களை முன் எச்சரிப்பதற்காக தீர்க்கதரிசனங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இன்றைய தினங்களில் புதிய ஆவிக்குரிய காரியங்களை வளர்த்துக் கொள்வதற்காக அல்ல, மாறாக வசனங்களில் முன்னதாகவே சொல்லப்பட்ட காரியங்கள் நிறைவேறினவற்றைப் புரிந்து கொள்வதே தீர்க்கதரிசனமாகும். தீமோத்தேயுவைக் குறித்த தீர்க்கதரிசனங்களைப் போல - "நல்ல போராட்டத்தைப் போராடு" (1 தீமோ1:18) போலவே சுவிசேஷ யுகத்தில் உள்ள முழு சபைக்கு விசேஷமாக அறுவடையின் காலத்தில் இந்த கோட்பாடு உண்மையாக விளங்குகிறது. ஆகவே ஒருவர் தீர்க்கதரிசனத்தைப் புரிந்து கொள்வதில் வல்லவராக இருந்தால் மற்ற சகோதரர்களின் நல்ல போராட்டத்திற்கு பயனுள்ளதாக அதை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

"ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும்" (ரோ12:7)என்று பவுல் தொடர்ந்து இரண்டு வரங்கள் பற்றிக் கூறுகிறார்.

அப்போஸ்தலர்களுக்கும் மூப்பர்களுக்கும் சகோதரர்களுக்கும் மட்டுமே ஊழியம் செய்ய வேண்டும் என்று வசனங்கள் குறிப்பிடப்படவில்லை. தியத்தீரா சபை, பொதுவாக அவர்கள் செய்த ஊழியங்களுக்கு கனம் பெற்றார்கள். (வெளி 2:19) அந்தியோகியாவிலுள்ள சீஷர்கள் யூதேயாவில் வந்த பஞ்ச காலத்தின்போது அங்குள்ளவர்களுக்கு உதவி செய்தார்கள். (அப் 11:29) அகாயா நாட்டைச் சேர்ந்தவர்களும் வைராக்கியத்தோடு ஊழியம் செய்தனர். (2 கொரி 9:1, 2) அனைவரும் ஏதோ ஒரு வழியில் சிறிதானதோ, பெரிதானதோ சகோதரர்களுக்காகவும், சத்தியத்திற்காகவும் பணி செய்யலாம். இதற்கு மனப்பூர்வமான இருதயமும், வேலை செய்வதற்கான விருப்பமும் மட்டுமே வேண்டும்.

சபையை கட்டுவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள மிக முக்கியமான வரங்களில் ஒன்று போதிக்கக்கூடிய வரம். தேவனைப் பற்றியும், அவருடைய திட்டங்களைப் பற்றியும் மற்றவர்களுக்குப் போதிப்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டு நம்முடைய ஆண்டவராம் இயேசு "தாம் வளர்ந்த ஊரிலே வந்து, அவர்களுடைய ஜெபஆலயத்திலே அவர்களுக்கு உபதேசம் பண்ணினார். அவர்கள் ஆச்சரியப்பட்டு: இவனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கைகளும் எப்படி வந்தது?" (மத்13:54 ) என்று அவரை பற்றி குறிப்பிடுகிறது. "அவர் மறுபடியும் புறப்பட்டுக் கடலருகே போனார்; அப்பொழுது ஜனங்களெல்லாரும் அவரிடத்தில் வந்தார்கள்; அவர்களுக்குப் போதகம்பண்ணினார்." (மாற் 2:13) "அவர் நாடோறும் தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தார். பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் ஜனத்தின் மூப்பரும் அவரைக் கொலைசெய்ய வகைதேடியும்," (லூக் 19:47) "ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்." (மத்7:29)

இயேசு என்ன போதித்தார்?

- இராஜ்யத்தின் சுவிசேஷம் (மத்4:23; 9:35)
- பரலோக இராஜ்யம் (மத் 5:3; 7:21)

- சீஷத்துவத்திற்கான விதிமுறைகள் (மத் 5:3-11; 7:21)
- தேவனிடத்தில் எவ்வாறு ஜெபிப்பது? (லூக் 11:1)
- அவருடைய வருகைக்குரிய அடையாளங்கள் (மத் 24:3, 14, 21, 22, 27, 30-33)

நாமும் இதே காரியங்களைப் போதிக்க வேண்டும். "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி;" (கொலோ 3:16)எழுதினபடி நாம் அனைவரும் போதிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

ரோமர் 12:8 - "புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்." இவ்வசனத்தில் பவுல் அடுத்த வரத்தைக் குறித்துப் பேசுகிறார். மற்றவர்களின் விசுவாசத்தை நாம் உற்சாகப்படுத்த வேண்டும் என்று கூறுகிறார். இதற்கு கிரேக்கில் பாராக்கேலியோ (parakaleo) என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது. மற்றவர்களை ஊக்குவிப்பது அல்லது உற்சாகப்படுத்துவது மிக முக்கியமான ஒரு பொறுப்பாகும். புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தை சுமார் 107 முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த எச்சரிப்பு தேவனிடத்திலிருந்து துவங்குகிறது. 1கொரி1:4 - "கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி உங்களுக்குள்ளே ஸ்திரப்பட்டபடியே," தேவனிடத்திலிருந்து பெறும் எச்சரிப்புகளையும், உற்சாகம் ஊட்டும் காரியங்களையும், மற்றவர்களிடம் நாம் பகிர்ந்து அளிக்க வேண்டும்.

நம்முடைய சகோதரர்களிடம் சம்பாஷிக்கும் போதும், தொடர்பு கொள்ளும் போதும் - கடிதங்கள், தொலைப்பேசி, இணையதளம், கூடுகைகள், ஐக்கியங்கள் அனைத்தின் வழியாக நாம் எச்சரித்து உற்சாகம் ஊட்டக்கூடியவர்களாய் இருக்க வேண்டும். நாம் சந்திக்காதவர்கள் மற்றும் தொடர்பு கொள்ளாதவர்கள் மத்தியில் நாம் இந்த எச்சரிப்புகளைக் கூறமுடியாது. பவுல் தன்னுடைய சகோதரர்களை இந்நாள் வரைக்கும் எச்சரித்துக் கொண்டிருக்கிறார்:

- உங்கள் சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுங்கள் (ரோமர் 12:1)
- அவரை பின்பற்றுங்கள் (1 கொரி11:1)
- பிரிவு உண்டாக்குபவர்களைத் தவிர்த்து விடுங்கள் (ரோமர் 16:17)
- பவுல் கற்பித்தபடி தேவனுக்குப் பிரியமாக நடந்து கொள்ளுங்கள் (1 தெச 4:1)

எபி 3:13 - "உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்." நாமும் இவைகளைச் செய்ய வேண்டும்.

"பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்" என்று பவுல் தொடருகிறார். ஆகவே நாம் கொடுக்கக்கூடிய காரியங்கள் உள்ளார்ந்த மனதோடு மனப்பூர்வமாய் கொடுக்க வேண்டும். ஏனெனில், "ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபே 4:32)என்று பவுல் கூறுகிறார்.

நாம் உடல் ரீதியான நன்மைகளை மட்டுமல்ல ஆவிக்குரிய நன்மைகளையும் கொடுக்கக் கூடியவர்களாய் இருக்க வேண்டும். ரோமாபுரியிலுள்ள சகோதரர்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருப்பதற்கு சில ஆவிக்குரிய வரங்களைக் கொடுப்பதற்கு பவுல் விரும்பினார். "உங்களிலும் என்னிலுமுள்ள விசுவாசத்தினால் உங்களோடேகூட நானும் ஆறுதலடையும்படிக்கும், உங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறபடியினாலே," (ரோமர் 1:11) ஒருவர் மேல் ஒருவர் வைக்கக்கூடிய அன்பின் அடிப்படையில் இது கொடுக்கப்பட்டதாக பவுல் விவரிக்கிறார். "நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம்." (1தெச 2:8)நாம் பவுலின் மாதிரியைப் பின்பற்றி சுவிசேஷத்தை மட்டுமல்ல, நம்முடைய ஜீவனையே கொடுக்க வேண்டும்.

அதிகாரத்தில் உள்ளவர்கள் தங்களுடைய பொறுப்புகளைக் குறித்து சிந்திக்க வேண்டும். (பிலிக்ஸ் மொழியாக்கம்) அதிகாரத்தில் உள்ளவர்கள் - மூப்பர்கள், கண்காணிகள் மட்டுமல்ல, ஆவிக்குரிய வளர்ச்சியில் தேறினவர்களும் ஞானமுள்ளவர் களையும் கூட இது குறிக்கிறது. இவர்கள் சபையின்

மந்தைக்கு முன் மாதிரிகளாக நிற்கிறார்கள். இவர்கள் அனைவரும் மிகுந்த கவனத்தோடு வேலை செய்து முழு சபை (விசேஷமாக சிறியவர்களும், வளர்ச்சியில்லாதவர்களும்) நன்மைக்கு ஏதுவான காரியங்களை நடப்பிக்க வேண்டும். இதே காரியத்தை "அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும்" (ரோமர் 15:1) என்று பவுல் கூறுகிறார். "மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்" (I தெச 5:14 ) என்று வலியுறுத்துகிறார்.

பவுலால் குறிப்பிடப்படும் கடைசி வரம் இரக்கம் ("இரக்கம் செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்") இங்கு பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தையானது - தனிப்பட்ட நபர்கள் சுகம் பெறுவதற்காக இயேசுவினிடத்தில் நெருங்கும் பொழுது அடிக்கடி பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

- மத் 9:27 - "இயேசு அவ்விடம் விட்டுப் போகையில், இரண்டு குருடர் அவர் பின்னே சென்று: தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்."
- மத் 15:22 - "அப்பொழுது, அந்தத் திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரீ ஒருத்தி அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லிக் கூப்பிட்டாள்."

தெய்வீக குடும்பத்தில் அழைப்பைப் பெறுவதற்கு நம்முடைய சகல பாவங்களும் மன்னிக்கும்படியாக தேவனிடத்திலிருந்து மிகுந்த இரக்கங்களை நாம் பெற்றிருப்பதினால் நம்முடைய வாழ்க்கையில் இரக்கம் என்ற இந்த வார்த்தை மிக எளிதாக நாம் மற்றவர்களிடத்தில் செயல்படுத்த வேண்டும். இப்பொழுது நாம் தேவனுடைய கிருபையைப் பெற்றிருப்பதினால் தேவனுடைய ஜனங்களாய் இருக்கிறோம். (II பேதுரு 2:10) இரக்கமற்ற ஊழியக்காரனைக் குறித்து நம்முடைய ஆண்டவர், "நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி," (மத் 18:33)என்று ஒரு உவமையில் கூறுகிறார். நம்முடைய சகோதரர்கள் மேல் நாம் இரக்கம் பாராட்டுவதற்கு தேவையான உதவிகளும் செய்து அவர்களை ஊக்குவிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்."( மத் 5:7)

ரோமர் 12:6-8 வசனங்களில், பவுல் குறிப்பிட்டுள்ள ஏழு வரங்களைக் குறித்து சிந்தியுங்கள். போதகம், ஊழியம், உபதேசம், மற்றவர்கள் விசுவாசத்தை உற்சாகப்படுத்துதல், பகிர்ந்துக் கொடுத்தல், வைராக்கியத்தோடு வழி நடத்துதல் மற்றும் இரக்கம் எத்தனை வரங்களில் நாம் திறமையாக செயல்பட முடியும்? ஒருவேளை பிரசங்கித்து வழி நடத்துதலில் மட்டுமா? மீதமுள்ள மூன்று காரியங்கள் நமக்கு கொடுக்கப்பட்ட வரமாய் இருக்கிறது.

- மனப்பூர்வமாய் மற்றவர்களின் தேவைக்கு ஏற்ப உதவி செய்தல்.
- மற்றவர்களால் செய்ய இயலாத காரியங்களை நாம் அவர்களுக்காக மனப்பூர்வமாய் செய்வது.
- நமக்கு இருக்கக்கூடிய தாலந்துகளை மற்றவர்களுடைய குறைப்பாடுகளைத் தவிர்த்து, செய்யும்படியாக மனப்பூர்வமாய் பங்கிட்டுக் கொள்வது.

கிறிஸ்துவின் இராஜ்யத்தில் சபை இக்காரியங்களை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நம்முடைய பரலோகத் தந்தை எவ்வளவு ஞானமுள்ளவர். இக்காலத்தில் சகோதரர்களின் தேவையை அறிந்து உதவி செய்யக் கூடியவர்களை வரக்கூடிய தேவனுடைய இராஜ்யத்தில் இந்த பூமியிலுள்ள முழு குடும்பங்களுக்கு உதவி செய்து, ஆசீர்வதிக்கும்படியான ஒரு வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்.

"உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள்" (மத் 5:7)என்று பவுல் தொடருகிறார் (ரோமர் 12:9). நம்முடைய அன்பு, போலியானதாக இராமல் உண்மையானதாக இருக்க வேண்டும் என்று ஆலோசனைக் கூறுகிறார். உண்மையான அகாபே அன்பை குறித்து பவுல் விவரிக்கம் போது, தீமையை முற்றிலும் வெறுத்து நன்மையான காரியங்களுக்கு கவனம் செலுத்த வேண்டும். தீமையை தவிர்த்தால் மட்டும் போதாது, தவறானவைகளையும், அசுத்தமானவைகளையும், பாவமானவைகளையும் உடனடியாக எதிர்க்க வேண்டும் என்று சகோதரர் ரஸல் தம்முடைய மறுபதிப்பில் எழுதியுள்ளார்.

(R2213) பாவம் மற்றும் சுயநலம் இந்த உலகத்தின் ஆவியாய் இருப்பதினால் அவைகளை முற்றிலுமாய் வெறுக்க வேண்டும்.

தீமையை எதிர்த்தல் என்ற காரியம் முதலில் நமக்குள் இருந்து செயல்பட வேண்டும். தீமைகள், குற்றங்கள், மீறுதல்கள் இவைகளை மற்றவர்களிடத்தில் கண்டுபிடித்து எதிர்ப்பது எளிது. அதேநேரத்தில் நமக்குள் இருக்கும் மீறுதல்களையும், குற்றங்களையும் கண்டுணர்ந்து அவைகளை முற்றிலுமாய் வெளியேற்றுவது மிகக் கடினம். ஆயினும் இந்த காரியத்தை நாம் முதலில் செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

பற்று என்ற வார்த்தை கோலாவோ (kollao) என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. (Strongs #2853) இதற்கு பகை அல்லது ஒட்டுதல் என்று பொருள். நாம் நன்மையான காரியங்களோடு மிக நெருக்கமாய் ஒட்டிக்கொள்ள வேண்டும் அலலது இறுக பற்றிக் கொள்ள வேண்டும். ஏனெனில், "பிரியமானவனே, நீ தீமையானதைப் பின்பற்றாமல், நன்மையானதைப் பின்பற்று, நன்மைசெய்கிறவன் தேவனால் உண்டாயிருக் கிறான்; தீமைசெய்கிறவன் தேவனைக் காணவில்லை" (3 யோவ 2)என்று அப்போஸ்தலர் யோவான் கூறுகிறார். நாம் நன்மை செய்தால் மட்டுமே தேவனுக்குப் பிரியமாய் இருக்க முடியும். "ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து, பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக்கடவன்." (1 பேது 3:10, 11)

"சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்" (ரோமர் 12:10) என்ற வசனத்தில் அப்போஸ்தலர் பவுல் உண்மையான கிறிஸ்தவ அன்பைக் குறித்து தொடர்ந்து பேசுகிறார்.

உண்மையான சகோதர அன்பு நம்முடைய சகோதரர்களை ஊக்குவிக்க வேண்டும். "சகோதர சிநேகத்தைக்குறித்து நான் உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை; நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படிக்குத் தேவனால் போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்களே." (1 தெச 4:9) மேலும் தேவன் தம்முடைய வார்த்தைகள், கிரியைகள் மற்றும் நம்முடைய ஆண்டவரின் எடுத்துக்காட்டுகளின் மூலம் நம்முடைய சகோதரர்களிடம் அன்பு செலுத்துவது எவ்வளவு முக்கியம் என்று கூறியிருக்கிறார். "தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?" (1 யோவ 4:20)

சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதினால் சகோதர அன்பு நமக்குள் வளரும் என்று பேதுரு கூறுகிறார். "ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்;" (1 பேதுரு 1:22)ஆகவே நாம் எந்த அளவுக்கு ஆவியினால் சத்தியத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கிறோமோ, அந்த அளவு நமக்குள் சகோதர அன்பு வளர்ச்சியடைந்திருக்கும்.

மற்ற மனிதர் இலாபமடைவதற்கு நாம் மனப்பூர்வமாய் விட்டுக் கொடுப்பதும் நாம் சகோதரர் மேல் வைக்கும் அன்பாகும். நாம் எந்த இலாபத்தையும் நன்மைகளையும் எதிர்பாராமல் நன்மை செய்வது சகோதர அன்பாகும், நம்முடைய செயல்களினால் மற்றவர்கள் நன்மை அடைவதற்கான திறவுகோலான குணம், மனத்தாழ்மையே ஆகும். நம்மிடத்தில் மனத்தாழ்மை குறைவுபட்டால் நமக்குள் இருக்கும் விட்டு கொடுக்கக்கூடிய குணங்கள் மிகக் குறைவாகக் காணப்படும். இதை குறித்து தொடர்ந்து அப்போஸ்தலர் பவுல் -"ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்." என்று பிலிப்பியர் 2:3-ல் கூறுகிறார்.

சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பெறும் வரைக்கும் எவ்வளவு போராட்டங்களைப் போராடினார்கள் என்று நாம் அறிந்திருக்கிறோம். சீஷர்களில் எவர் பெரியவர் என்ற வாக்குவாதம் பலமுறை உண்டானது. (மாற் 9:34; லூக் 22:24) ஆயினும், அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்ற போது இவைகளைக் குறித்த சரியான காரியங்களைப் புரிந்து கொண்டார்கள். அதேபோல நாமும் நம்முடைய சகோதரர்களுக்கு நன்மையான காரியங்களை விட்டுக் கொடுப்பதில் தெளிவான அறிவைப் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில், நாம் எந்த அளவுக்கு நன்மைகளைப் பெற வேண்டும் என்று

தேவன் முன்னறிந்திருக்கிறார் என்பதை நாம் முழுமையாக நம்பலாம்.

ரோமர் 12:11 - "அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்" என்ற வசனத்தில் நம்முடைய உடன்படிக்கையின் பொருத்தனைகளை நிறைவேற்றுவதற்கான வைராக்கியத்தைக் குறித்துப் பேசுகிறார். "அசதியாயிராமல்" என்ற வார்த்தைக்கு காலம் தாமதித்து செய்யும் வேலைகள் அல்லது மிகவும் மெதுவாக செய்யும் வேலைகள் என்று பொருள்படுகிறது. ஆகவே, "தேவனுடைய ஊழியக்காரர்களாகிய நீங்கள் உங்கள் ஆவியிலே துரிதமாய் செயல்படுங்கள்" என்று மற்றொரு ஆங்கில மொழிபெயர்ப்பில் வாசிக்கிறோம். ஆகவே இக்காலத்தில் தேவனுடைய சித்தத்தை வெகு துரிதமாக நிறைவேற்ற கடமைபட்டுள்ளோம். இப்படியாக நம்முடைய ஆண்டவர் பிதாவின் சித்தத்தை செய்வதில் மகிழ்ச்சியடைந்ததுபோல, நாமும் செய்ய வேண்டும். (சங் 40:8) தாலந்தைப் பற்றி சொன்ன உவமையில், அங்கு ஒரு தாலந்தைப் பெற்ற அந்த சோம்பேறியான ஊழியக்காரனைப் போல் நாம் இருந்து விடக்கூடாது. (மத் 25:26)

நமக்குள் இருக்கும் சோம்பலையும் நிர்விசாரத்தையும் போக்குவதற்கு அக்கினி எப்பொழுதும் கொழுந்துவிட்டு எரிவதாக என்று பவுல் நமக்கு ஆலோசனைக் கூறுகிறார். "அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தைமாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக்கொண்டுவந்தான்" (அப் 18:25)என்றும் சொல்லப்படுகிறது. "தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்." (யோவ 3:34)நமக்குள் அதிகப்படியான தேவனுடைய ஆவியை நாம் பெற்றிருந்தால், நாம் அதிக உற்சாகமாகவும் சுறுசுறுப்புள்ளவர்களாகவும் இருப்போம்.

ரோமர் 12:12 -"நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கள்." அப்போஸ்தலர் பவுல் நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையில் எவ்வாறு மகிழ்ச்சியாய் இருப்பது என்று விவரிக்கிறார். நம்முடைய மகிழ்ச்சி ஆவிக்குரிய அடிப்படையில் இருக்க வேண்டும். இவைகள் பூமிக்குரிய காரியங்களின் அடிப்படையில் இருந்தால் துருவும் பூச்சியும் அரித்துவிடும், திருடர்களும் திருடிச் செல்வார்கள். "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்: பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்." (மத் 6:19-21)நம்முடைய பொக்கிஷங்கள் எங்கேயோ, நம்முடைய மகிழ்ச்சியும் அங்கே இருக்கும். நம்முடைய மகிழ்ச்சி பரலோகத்தில் உறுதிபட்டிருந்தால், நம்முடைய சோதனைகளிலும், உபத்திரவங்களிலும் இந்த மகிழ்ச்சி எந்த விதத்திலும் பாதிப்படையாது.

"ரோமர் 12:12 - ". . . . . உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கள்" என்று தொடர்ந்து பவுல் கூறுகிறார். நாம் கிறிஸ்துவுக்குள் அடைந்திருக்கும் மகிழ்ச்சியானது, உபத்திரவங்களை நீடிய பொறுமையாய் சகிக்கச் செய்யும். கடுமையான சோதனைகள் அழுத்தும்போது, இப்படிப்பட்ட நீடிய சகிப்புத் தன்மை கிறிஸ்துவின் சாயலை நமக்குள் உருவாக்குகிறது. தேவையான அழுத்தமும், அனலும் சாதாரண கரியை வைரமாக மாற்றுவதுபோல, நம்முடைய அழியக்கூடிய சுபாவம் கிறிஸ்துவின் குணலட்சணங்களாக மாற்றப்படுகிறது. ஆனாலும் "மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகைள நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது." (llகொரி 4:17)இந்த ஒரு நிலையை வெற்றிகரமாக முடிப்பதற்கு நாம் பல அழுத்தங்களின் கீழ் நீடிய பொறுமையாக இருக்க வேண்டும்.

இவைகளில் தொடர்ந்து செயல்பட நாம் ஜெபத்தில் எப்பொழுதும் தரித்திருக்க வேண்டும். நமக்கு தேவைப்படும் போதெல்லாம் தெய்வீக உதவிகளைப் பெறுவதற்கு ஜெபமே நம்முடைய வாழ்க்கையின் ஜீவனாய் இருக்கிறது. "ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்." (எபி 4:16)தேவனுடைய

சித்தத்தை நிறைவேற்றுவதற்கு நமக்காகவும், நம்முடைய சகோதரர்களுக்காகவும் ஜெபிப்பது எவ்வளவு முக்கியம் என்பதை இந்த வசனங்கள் நமக்கு எச்சரிக்கின்றது.

- 1 தெச 5:17 - "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்."
- மத் 26:41 - "நீங்கள் சோதனைக் குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்."
- யாக் 5:13 - "உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்."
- பிலி 1:9 - "மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும்,"
- கொலோ 1:9 - "இதினிமித்தம், நாங்கள் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறோம்; நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும்,"
- யாக் 5:16 - "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும்பெலனுள்ளதாயிருக்கிறது."

நம்முடைய சகோதரர்களுக்காக ஜெபித்தால் மட்டும் போதாது என்று பவுல் கூறுகிறார். அந்த ஜெபத்தோடு கூடிய நன்மைகளையும் நாம் செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார். "பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள்" (ரோமர் 12:13 ) என்று வாசிக்கிறோம். நம்முடைய சகோதரர்களுக்குத் தேவைப்படும் காரியங்களை இலவசமாய் கொடுக்க வேண்டும். நம்முடைய சகோதரர்களுக்காக நம்முடைய ஜீவனையே கொடுப்பது என்பதற்கான அன்பைக் குறித்து இதுவும் ஒரு கருத்தாகும். "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்."(1யோவ 3:16)

நம் மத்தியில் கிறிஸ்து இருந்தால், நாம் அவருக்கு ஊழியம் செய்யும் விதமாகவே நம்முடைய சகோதரர்களுக்கும் ஊழியம் செய்ய கடமைப்பட்டுள்ளோம். ஏனெனில், நாம் சகலத்தையும் அவருக்கென்று ஒப்புக்கொடுத்திருக்கிறோம். இயலாத சகோதரர்களுக்கு உதவி செய்த மற்ற சகோதரர்களைக் குறித்து அப்போஸ்தலர் பவுல் அதிகமாக பாராட்டினார். "மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன். தங்கள் உபகாரத்தையும், பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக்கொண்டார்கள்." (11 கொரி 8:3, 4)

நாம் அதிகமாக பெற்றிருப்பதினால் சுயநலத்தோடு அல்ல, தேவனிடத்தில் பெற்றிருப்பதை தாராளமாகக் கொடுக்க வேண்டும் என்று பேதுரு கூறுகிறார்."அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்."(1 பேதுரு 4:10) மற்றவர்களுடைய நன்மைக்காக தேவன் நம்மிடத்தில் கொடுத்திருக்கும் காரியங்களின் மேல் நல்ல உக்கிராணக்காரர்களாய் இருப்போம்.

அதற்கு பின் ரோமர் 12:14, 17, 19, மற்றும் 20-ம் வசனங்களில் நம்முடைய எதிராளிகளிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை பவுல் விவரிக்கிறார். "உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றிச் சபியாதிருங்கள்." "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்." "பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்." "அன்றியும், உன் சத்துருபசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால்

அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய்."

முதலில் நம்முடைய எதிராளிகளை ஆசீர்வதிக்க வேண்டும் என்று பவுல் கூறுகிறார். அதே சிந்தையை நம்முடைய ஆண்டவரும் வெளிப்படுத்துகிறார்."நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்."( மத் 5:44) ஆசீர்வதித்தல் என்றால் அவர்களைக் குறித்து நன்மையாக பேசுவது அல்லது நன்றியறிதலோடு ஆசீர்வதிப்பது. இவ்வனைத்துமே நம்முடைய எதிராளிகளை அன்பு செய்வதில் ஒரு பகுதியாகும். ஆனால் அவர்களுடைய தீமையான காரியங்கள் வளர்ச்சியடைய வேண்டும் என்று பொருளல்ல, மாறாக, நாம் அவர்களை வெறுக்காமல், அவர்கள் செய்த தீமைக்குப் பதிலாக தீமை செய்யாமல் இருக்க வேண்டும்.

நாம் அவர்களிடம் காட்டக்கூடிய இரக்கத்தை அவர்கள் பாராதபடி சாத்தானானவன் அவர்களைக் குருடாக்கிவிட்டான் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் - நாம் அவர்களுடைய தீமையான கிரியைகளையல்ல, கிறிஸ்துவின் இராஜ்யத்தில் தேவனுடைய பூமிக்குரிய புத்திரர்களாக அவர்களுடைய சகல குருட்டாட்டங்களும் நீக்கப்பட்டு, பரிசுத்தமான பாதையில் நடக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்று நடக்கக்கூடியவர்களாக எண்ணி, அவர்களை நேசிக்க வேண்டும். ஆகவே நாம் அவர்களுடைய தீமைக்குப் பதிலாக தீமையை அளிப்பதில்லை. அதற்கு பதிலாக நாம் சொல்லர்த்தமான உணவையும், தண்ணீரையும், ஆவிக்குரிய உணவையும், தண்ணீரையும், கொடுக்கக் கூடியவர்களாய் இருக்கிறோம். நம்முடைய வார்த்தைகளினாலும், நம்முடைய கிரியைகளினாலும் சத்தியத்தின் செய்திகளை அவர்களுக்குக் கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். இதுவே நாம் அவர்களின் தலையில் குவிக்கக்கூடிய அக்கினியாகும். (நீதி 25:21,22)

ஆடம்ஸ் கிளார்க்கைப் பொருத்த வரையில் உலோகங்களை உருக்குவதற்கு அக்கினியானது இரண்டு பக்கங்களிலும் எரியவிடப்படும் பொழுது அந்த உலோகத்திலுள்ள அசுத்தங்கள் நீக்கப்படும் என்று ஒப்புமையாக அவர் கூறுகிறார்.

அடுத்து, நம்முடைய சகோதரர்கள் பெறும் அனுபவங்களில் நாம் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்று பவுல் வலியுறுத்துகிறார். "சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள்.( ரோமர் 12:15)" "சந்தோஷத்தைப் பகிர்ந்தால், சந்தோஷம் பெருகும். துக்கங்களைப் பகிர்ந்தால் அவைகள் குறைந்துவிடும்" என்று ஒரு வாக்கியம் நமக்கு நினைவுக்கு வருகிறது. நமக்குள் இருக்கும் சுயநலமற்ற அன்பே மற்றவர்களுடைய வெற்றியில் மகிழ்ச்சியடையச் செய்து, மற்றவர்களுடைய துக்கங்களில் பங்கெடுக்கச் செய்கிறது. "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்." (கலா 6:2) இது ஒரு இராஜரீகமான அன்பின் பிரமாணமாகும்.

ரோமர் 12:16, 18 - "ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்." "கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" என்ற வசனங்களில் நாம் சமாதானத்தோடு இசைந்து வாழ வேண்டும் என்று மட்டும் பவுல் நமக்கு அறிவுறுத்தாமல், அவைகளை எவ்வாறு செய்வது என்பதைக் கூறுகிறார். முதலில் நாம் மனத்தாழ்மைப்பட வேண்டும் என்று கூறுகிறார். "ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்." (ரோமர் 12:16)நாம் மனத்தாழ்மையாயிராவிட்டால், நம்முடைய விருப்பங்களும் எண்ணங்களும் நம்முடைய சகோதரர்களுடைய ஐக்கியத்தை விட்டு விலகிவிடும். இரண்டாவதாக, நாம் தாழ்மையுள்ளவர்களோடு உறவுக்கொள்ளும் பட்சத்தில் நாம் அனைத்திலும் திருப்தியடைவோம். தாழ்மையான காரியங்களோடு ஐக்கியப்பட்டு வாழும் போது, சமாதானமாய் வாழ்வதற்கு எளிதில் வழிவகுக்கும். மூன்றாவதாக, நாம் நம்முடைய முடிவுகளில் உறுதியாகவும் இறுமாப்பாகவும் இருப்பதற்கு வாய்ப்பிருக்காது. "ஒருவரோடொருவர்

ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்." (ரோமர் 12:16)நாமும் தவறான முடிவுகளை எடுக்கக்கூடும் என்பதை உணர வேண்டும். நாம் அறியாத காரியங்களைக் குறித்து அறிந்து கொள்வதற்கு ஆற்றல் வேண்டும். நாம் நம்முடைய சிந்தையில் உறுதியாக நிலைத்திருந்தால், அதை காட்டிலும் நன்மையான காரியங்களை ஆண்டவரிடத்திலிருந்து கற்றுக் கொள்வது கடினமாகிவிடும்.

அனைவரோடும் சமாதானமாய் வாழ வேண்டும் என்ற பொறுப்புகளை பவுல் நம்மேல் சுமத்துகிறார். எந்தவிதமான பிரச்சனைகளும், வேறுபாடுகளும் , சண்டைகளும் இருப்பதற்கு பவுல் நமக்கு இடம் கொடுப்பதில்லை. நம்மால் இயன்ற மட்டும் ஒருவரோடொருவர் சமாதானமாய் இருக்க வேண்டும் என்ற கட்டளையைப் பெற்றிருக்கிறோம். (1 கொரி 5:1-5) வசனங்களில் காணப்படும் காரியங்கள் இக்கருத்துக்கு விதிவிலக்காய் தோன்றுகிறது. "கடைசியாக, சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள்; ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார்" (11கொரி 13:11)என்று பவுல் குறிப்பிடுகிறார். அன்பும், சமாதானமுமான தேவன் நம்மோடு வாசம் செய்ய வேண்டும் என்று விரும்பினால் நாமும் அப்படிப்பட்ட சமாதானத்தோடு அனைவரோடும் வாழ வேண்டும்.


சமாதானத்தின் குறைச்சல் உண்மையாக சிற்றின்ப நாட்டத்தைக் காட்டுகிறது. ஏனெனில், இது ஆவியினால் உண்டானது அல்ல, மாம்சத்தினால் உண்டானதாகும். "பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்துக் குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா?" (1 கொரி 3:3) மனத்தாழ்மையின் குறைச்சலினால் சமாதானக் குறைவு ஏற்படுவதாக பவுல் கூறுகிறார். "ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்." (பிலி 2:3) "வைராக்கியம் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச் செய்கைகளுமுண்டு." (யாக் 3:16)மனத்தாழ்மையின் குறைவினால் ஏற்படக்கூடிய காரியங்களைக் குறித்து வசனங்களில் காண்பது ஆச்சரியமாய் இருக்கிறது. பிரச்சனைகளும், சண்டைகளும், பொறாமை யினாலும், பகையினாலும், சாத்தானாலும் வரக்கூடியது. அதேநேரத்தில் மனத்தாழ்மை, அன்பு மற்றும் நம்முடைய பரம பிதாவினிடத்திலிருந்து சமாதானமும் வருகிறது.

ரோமர் 12:17 -"ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்" என்று பவுல் கூறுகிறார். இதோடு கூட, "உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு" (தீமோ 4:12)என்றும் குறிப்பிடுகிறார். ஆகவே, "உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு." (மத் 5:16) இப்படியாக நாம் அனைவரும் இயேசுவின் மாதிரிகளை நம்மால் முடிந்தவரைப் பின்பற்றி நாம் சிந்திக்கக் கூடிய காரியங்களிலும், செயல்படக்கூடிய காரியங்களிலும், பேசக்கூடிய காரியங்களிலும் அவருடைய சத்தியத்தைப் பிரதிபலிப்போமாக.

ரோமர் 12:21 - "நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு" என்று பவுல் முடிக்கிறார். இந்த உலகமும், மாம்சமும், சாத்தானும் தீமையினால் நம்மை வெல்வதற்கு வகை தேடுகிறது. இந்த 2013-ம் ஆண்டில், இவைகளுக்கு நாம் இடங் கொடாமல் நன்மையான காரியங்களை மட்டுமே சிந்தித்து இந்த தீமையான வல்லமைகளை வெல்ல முயற்சிப்போம். ரோமர் 12-ம் அதிகாரத்தில் நாம் இவைகளை செயல்படுத்துவதைப் பற்றியும் பவுலின் ஆலோசனைகளை நம்மால் முடிந்தவரைக்கும் பின்பற்றி வெற்றியடையும் பட்சத்தில் - "நல்லது, உண்மையும் உத்தமுமுள்ள ஊழியக்காரனே, தேவனுடைய மகிழ்ச்சிக்குள் பிரவேசி" என்ற வார்த்தைகளைக் கேட்போம் என்று கூறப்படுகிறது.

மிகுந்த நன்மை

# எதிரான சூழ்நிலைகளிலும் அவருக்குள் உறுதியான நம்பிக்கை



உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டு பண்ணிவைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது! - சங்கீதம் 31:19

David Christiansen

சங்கீதம் 31, மிக அருமையான பாடங்களைக் கொண்டுள்ள சங்கீதமாகும். அதில் 19-ம் வசனத்திலுள்ள நான்கு முக்கியமான காரியங்களைக் குறித்துப் பார்க்கலாம். 1. தேவனுடைய மிகுந்த நன்மைகள், 2. "உமக்குப் பயந்தவர்களுக்கும்," 3. உம்மை நம்புகிறவர்களுக்கும், 4.மனுப்புத்திரருக்கு முன்பாக.

**பகுதி ஒன்று : தேவனுடைய மிகுந்த நன்மைகள்**

தாவீது யேகோவா தேவனுடைய மிகுந்த நன்மைகளைக் குறித்து, 31-ம் சங்கீதத்தில் பேசுகிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஏனெனில், வசனம் 14 - "நானோ, கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நீரே என் தேவன் என்று சொன்னேன்" என்று கூறுகிறது. மேலும் "உமது கிருபையிலே களிகூர்ந்து மகிழுவேன்; நீர் என் உபத்திரவத்தைப் பார்த்து, என் ஆத்துமவியாகுலங்களை அறிந்திருக்கிறீர்" என்று ஏழாம் வசனம் கூறுகிறது. மேலும் 9 மற்றும் 10-ம் வசனத்தில் - "எனக்கு இரங்கும் கர்த்தாவே, நான் நெருக்கப்படுகிறேன்; துக்கத்தினால் என் கண்ணும் என் ஆத்துமாவும் என் வயிறுங்கூடக் கருகிப்போயிற்று. என் பிராணன் சஞ்சலத்தினாலும், என் வருஷங்கள் தவிப்பினாலும் கழிந்து போயிற்று; என் அக்கிரமத்தினாலே என் பெலன் குறைந்து, என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று" என்று சொல்லப்படுகிறது.

வசனம் 18-ல், தாவீது தன்னுடைய இக்கட்டான நிலைமைகளை தேவனுக்கு முன் வைத்து, அவரிடத்தில் உதவிகளையும், விடுதலையையும், பாதுகாப்பையும் கேட்கிறார். இறுதியாக 19-ம் வசனத்தில், "உம்முடைய நன்மை எவ்வளவு பெரியதாய் இருக்கிறது" என்பதை அறிக்கையிடுகிறார். எல்லாவிதமான பிரச்சனைகளிலும், கஷ்டங்களிலும் தேவனுடைய நன்மைகளினிமித்தம் தாவீது தேவனைத் துதித்தார்.

பிரச்சனைகள் வந்த போது, இஸ்ரயேலர்கள் எவ்வாறு செயல்பட்டனர்? மற்ற காரியங்களுக்கு மத்தியில் ஜனங்கள் பொன் கன்றுகுட்டியை ஏற்படுத்தி மன்னாவினிமித்தம் ஓயாமல் முறுமுறுத்து, எகிப்தில் அவர்கள் விட்டுவந்த வெள்ளைப்பூண்டும், கொமட்டிக்காய்களையும் எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தனர். விசுவாசமுள்ள சில தீர்க்கதரிசிகள், சில இராஜாக்கள் எப்பொழுதும் அந்த ஜனத்தாரோடு இருந்தபோதிலும் அந்த தேசம் என்றுமே திருப்தியாக இருந்ததில்லை. தேவன் இஸ்ரயேலர்களை அநேக முறைகள் விடுவித்தப்போதிலும் ஜனங்கள் தேவனை என்றுமே நம்பாமல், அவருடைய நன்மைகளையும் அவர்கள் அறிக்கையிட்டதில்லை.

நாம் நமக்கு எதிரான பிரச்சனைகளை சந்திக்கும் போது, என்ன செய்கிறோம்? அவர் செய்த நன்மைகளுக்காக நன்றி செலுத்துகிறோமா? அல்லது கிடைக்காத காரியங்களுக்காக முறுமுறுத்து குறை கூறுகிறோமா? அவர் நிமித்தம் நம்மை கண்காணித்து பராமரிப்பதை எண்ணி, அவருக்கு நன்றிகளை ஏறெடுத்து நம்முடைய பிரச்சனைகளுக்குத் தீர்வுகளைத் தேடுகிறோமா?

2 நாளா 20-ம் அதிகாரத்தில் இம் மனநிலைக்கான சிறந்த எடுத்துக்காட்டு கொடுக்கப்பட்டுள்ளது. அக்காலத்திலே யூதாவை யோசபாத் இராஜா ஆண்டு வந்தார். "இதற்குப் பின்பு மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும், அவர்களோடே அம்மோனியருக்கு அப்புறத்திலுள்ள மனுஷருங்கூட யோசபாத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ண வந்தார்கள்." அப்பொழுது திரளான கூட்டங்கள் யூதேயாவை தாக்க வந்தனர். "அப்பொழுது யோசபாத் பயந்து, கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமுகப்பட்டு, யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித்தான்."

இக்காரியத்திற்கு முழு தேசமாக அவர்கள் தேவனை நோக்கி விண்ணப்பிக்க வேண்டும் என்பதை யோசபாத் அறிந்திருந்தார். அதற்கு பின் அந்த சூழ்நிலைகளை தேவனுக்கு முன்பாக எடுத்துச் சென்றார். "எங்கள் தேவனே, அவர்களை நீர்

நியாயந்தீர்க்கமாட்டீரோ? எங்களுக்கு விரோதமாக வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெலனில்லை; நாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை; ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக்கொண்டிருக்கிறது என்றான்."

தேவன் சகரியாவின் குமாரனாகிய யகாசியேலின் மூலம் பதிலளித்தார். "சகல யூதா கோத்திரத்தாரே, எருசலேமின் குடிகளே, ராஜாவாகிய யோசபாத்தே, கேளுங்கள்; நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்; இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது. நாளைக்கு நீங்கள் அவர்களுக்கு விரோதமாய்ப் போங்கள்; இதோ, அவர்கள் சிஸ் என்னும் மேட்டுவழியாய் வருகிறார்கள்; நீங்கள் அவர்களை யெருவேல் வனாந்தரத்திற்கு எதிரான பள்ளத்தாக்கின் கடையாந்தரத்திலே கண்டு சந்திப்பீர்கள். இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல; யூதா மனுஷரே, எருசலேம் ஜனங்களே, நீங்கள் தரித்துநின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்; நாளைக்கு அவர்களுக்கு எதிராகப் புறப்படுங்கள்; கர்த்தர் உங்களோடே இருக்கிறார் என்றான். அப்பொழுது யோசபாத் தரைமட்டும் முகங்குனிந்தான்; சகல யூதா கோத்திரத்தாரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரைப் பணிந்துகொள்ளக் கர்த்தருக்கு முன்பாகத் தாழவிழுந்தார்கள். கோகாத்தியரின் புத்திரரிலும் கோராகியரின் புத்திரரிலும் இருந்த லேவியர் எழுந்திருந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மகா சத்தத்தோடே கெம்பீரமாய்த் துதித்தார்கள். அவர்கள் அதிகாலமே எழுந்திருந்து தெக்கொவாவின் வனாந்தரத்திற்குப் போகப் புறப்பட்டார்கள்; புறப்படுகையில் யோசபாத் நின்று: யூதாவே, எருசலேமின் குடிகளே, கேளுங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்திபெறுவீர்கள் என்றான். பின்பு அவன் ஜனத்தோடே ஆலோசனைபண்ணி, பரிசுத்தமுள்ள மகத்துவத்தைத் துதிக்கவும், ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்னாக நடந்துபோய், கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றும் உள்ளதென்று கர்த்தரைப் பாடவும், பாடகரை நிறுத்தினான்." யூதா மிகுதியான பயமுறுத்தலில் அகப்பட்டிருந்தாலும், அவர்கள் அனைவரும் தேவனை நன்றியோடு துதித்து, அவருடைய அன்பை எண்ணி, அவரை போற்றினார்கள்.

யுத்தத்திற்குப் பின் ஒருவரும் தப்பவில்லை என்று கண்டார்கள். (24-ம் வசனம்) தேவன் இஸ்ரயேலை மீண்டும் ஒருமுறை இரட்சித்தார். அதற்கு பின் யோசபாத் மற்றும் யூத தேசம் தேவனை எவ்வாறு நம்பி நன்றியோடு துதித்தார்கள்? (வசனம் 30, 32) - "இவ்விதமாய்த் தேவன் சுற்றுப்புறத்தாரால் யுத்தமில்லாத இளைப்பாறுதலை அவனுக்குக் கட்டளையிட்டதினால், யோசபாத்தின் ராஜ்யபாரம் அமரிக்கையாயிருந்தது." "அவன் தன் தகப்பனாகிய ஆசாவின் வழியிலே நடந்து, அதைவிட்டு விலகாதிருந்து, கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்." ஆயினும் ஜனங்கள் முழுமையாக தேவன் வசமாகத் திரும்பவில்லை. "ஆனாலும் மேடைகள் தகர்க்கப்படவில்லை; ஜனங்கள் தங்கள் இருதயத்தைத் தங்கள் பிதாக்களின் தேவனுக்கு இன்னும் நேராக்காதிருந்தார்கள்." (வசனம்-33)

உயர்ந்த மேடைகள் என்ற வார்த்தையை சற்று கவனித்துப் பாருங்கள். அனைவரும் கண்டு ஆராதிக்கும் வண்ணமாக பாகால் மற்றும் அஸ்தரோத்தை மலையின் மேல் உயர்ந்த மேடைகளில் ஸ்தாபித்திருந்தார்கள். யூதா ஒருங்கிணைக்கப்பட்டு தங்களுடைய விடுதலைக்காக தேவனிடத்தில் மன்றாடி, தேவன் அவர்களை இரட்சித்தபோதும் அவர்களுடைய முழு இருதயத்தோடு அவர்கள் தேவன் வசமாய் திரும்பவில்லை.

இப்பொழுது யோசபாத் தேவனைத் துதித்து அவருடைய நன்மைகளைப் புகழ்ந்து பாடின பின் காலப்போக்கில் சற்று நேரத்திற்கு தம்முடைய முகத்தை தேவனைவிட்டு விலக்கினார். "அதற்குப்பின்பு யூதாவின் ராஜாவாகிய யோசபாத் பொல்லாப்புச் செய்கிறவனாகிய அகசியா என்னும் இஸ்ரவேலின் ராஜாவோடே தோழமைபண்ணினான்." "மரேசா ஊரானாகிய தொதாவாவின் குமாரனான எலியேசர் யோசபாத்துக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல்லி: நீர் அகசியாவோடே கூடிக்கொண்டபடியினால், கர்த்தர் உம்முடைய கிரியைகளை முறித்துப்போட்டார் என்றான்; அந்தக் கப்பல்கள் உடைந்துபோயிற்று, அவர்கள் தர்ஷீசுக்குப் போகக்கூடாமற்போயிற்று." (35, 37-வசனம்) தேவனுடைய உண்மையான மிகுந்த நன்மைகள் உணர்ந்து கொள்வதை, யூதா உணர்ந்து

கொள்ளவில்லை. தங்களுடைய எதிராளிகள் அழிவுக்கு முன்னாலும் பின்னாலும் அவர்கள் தேவனைத் துதித்தார்கள். ஆனாலும் அவர்கள் விக்கிரகங்களை நீக்கவில்லை.

ஆனால், "உம்முடைய நன்மைகள் எவ்வளவு பெரியது" என்று தாவீது தன்னுடைய முழு இருதயத்தோடு அறிக்கையிட்டார். சகலவிதமான எதிரான சூழ்நிலைகளிலும், அவர் தேவனைத் துதித்துப் புகழ்ந்தார். ஆனால், இஸ்ரயேல் ஜாதி நன்மைகளைப் பெறும்போது மட்டுமே அவர்கள் தாவீதின் மனநிலையை கொண்டிருந்தார்கள். அதற்கு பின் சகலத்தையும் மறந்தவர்களாய் தங்களுடைய தீமையான வழிகளுக்குச் சென்றார்கள்.

"உம்முடைய நன்மைகள் எவ்வளவு பெரியது" என்ற வார்த்தைகள் சபையின் முதற் பலன்களுக்கு எவ்வாறு பிரதிபலிக்கிறது? இஸ்ரயேலரைப் போல நாம் நன்மைகளைப் பெறும் போது மட்டுமே இந்த வார்த்தை நம்மிடமிருந்து எதிரொலிக்கிறதா? அல்லது நம்முடைய தேவையின் போதெல்லாம் தேவனிடத்தில் சேர்ந்த யோசபாத்தைப் போல நம்முடைய சுய விருப்பங்களுக்காக தேவனை விட்டு சற்று நேரம் விலகி இருக்கிறோமா?

**பகுதி இரண்டு: "உமக்கு பயந்தவர்களுக்கும்"**

தேவன் இஸ்ரயேலரோடு ஒரு உடன்படிக்கை ஏற்படுத்தியிருந்தார். இவர்கள் தேவனால் தேர்வு செய்யப்பட்ட ஜனங்களாக இருந்தார்கள். (ஆமோஸ் 3:2) இவர்கள் தேவனிடத்தில் பயபக்தியோடு இருந்திருக்க வேண்டும். இவர்கள் தற்காலிகமான பக்தியுள்ளவர்களாய் காணப்பட்டாலும் தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.

தேவன் அவர்களோடு செய்த உடன்படிக்கைக்கு விசுவாசமுள்ளவர்களாய் முடிவு பரியந்தம் காணப்பட்டிருந்தால் தேவன் பல வழிகளில் அவர்களை ஆசீர்வதிப்பேன் என்று வாக்களித்திருந்தார். குறிப்பாக தேவன் அவர்களை ஆசீர்வதிக்கும் காரியங்களைக் குறித்து உபாகமம் 28-ம் அதிகாரத்தில் வாசிக்கலாம்." உனக்கு விரோதமாய் எழும்பும் உன் சத்துருக்களைக் கர்த்தர் உனக்கு முன்பாக முறிய அடிக்கப்படும்படி ஒப்புக்கொடுப்பார், ஒரு வழியாய் உனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள், ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள்" 11நாளாகமம் 20-ம் அதிகாரத்தில் இக்காரியங்கள் யோசபாத்துக்கு நடந்ததைப் பார்க்கலாம். இருளான நேரத்திலும் யூதா ஒருமுகப்பட்டு - "கர்த்தாவே, உம்முடைய நித்திய அன்புக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்" என்று ஆரவாரித்தார்கள். யூதாவை அழிக்க வந்த மூன்று ஜாதிகளையும் தேவன் மொத்தமாக நிக்ரகம் பண்ணினார். யூதா நம்ப முடியாத அளவுக்கு தேவன் அவர் செய்த உடன்படிக்கையை காத்துக் கொண்டார்.

தேவனுடைய கற்பனையைப் பின்பற்றுவோம் என்று இஸ்ரயேல் ஜனங்கள் அனைவரும் ஒத்துக்கொண்டனர்."என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர் களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்."( யாத்20:3-5) ஆயினும் யூதா உயர்ந்த மேடைகளிலிருந்து விக்கிரகங்களை அகற்றவில்லை. (2 நாளா 20:33) யுத்தத்தின் போதும் அதற்கு பின்னும் இந்த விக்கிரகங்கள் நின்றது.

தேவன் விக்கிரகங்களை அருவருத்தாலும், அவர் யூதாவை விடுவித்தார். இதன் காரணம் என்ன? "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்." (எபி 11:6)அந்த கோட்பாடு இந்நாளிலும் அப்போஸ்தலர் பவுலின் வார்த்தைகள் மூலமாக நமக்கு முன் நிற்கிறது. யூதாவின் சகல ஜனங்களும் ஒருமித்து வந்து தேவனிடத்தில் விடுதலைக்கு மன்றாடின போது, தேவன் பதிலளித்தார். அவர் இப்படிப்பட்ட ஒரு இரக்கமுள்ள கிருபையான தேவனாயிருக்கிறார். "உங்கள் உயர்ந்த மேடைகளிலிருந்து விக்கிரகங்களை அகற்றாததினால் நான் உங்களை விடுவிப்பதில்லை" என்று தேவன் கூறவில்லை. அவர்களை இரட்சித்ததற்குப் பின் அவர்கள் தங்களை திருத்திக் கொள்வதற்கு வாய்ப்புக் கொடுத்தார். இவ்வாறாகவே இக்காலத்தில் தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமல் தீமையிலிருக்கும் இந்த உலகத்தை

மீட்டு தேவனுடைய இராஜ்யத்தில் இவர்களின் இருதயங்கள் சுத்திகரிக்கப்பட்டு ஒரே தேவனை உண்மையோடு தொழுது கொள்வதற்கான வாய்ப்பை பெறுவார்கள்.

இந்த எடுத்துக்காட்டில் நமக்கான மற்றொரு பாடம் அமைந்துள்ளது. மோவாபியர்கள், அம்மோனியர்கள் போன்றவர்களிடம் இருந்து வரும் தாக்குதல்களைக் குறித்து சபை வகுப்பினர், இப்பொழுது கவலைப்படாமல் இருந்தாலும் உலகம், மாம்சம் மற்றும் சாத்தான் ஆகிய இந்த மூன்று எதிரிகளும் தொடர்ந்து தாக்கிக் கொண்டே இருக்கின்றார்களா? இந்த தாக்குதல்களை எவ்வாறு சமாளிப்பது? இந்த தாக்குதலின் போது என்ன செய்ய வேண்டும்? இதிலிருந்து விடுவிக்கப்பட்டாலும், படாவிட்டாலும் அதற்கு பின் நாம் எவ்வாறு செயல்பட வேண்டும்? எல்லாவற்றின் மத்தியிலும் கிறிஸ்துவின் வளர்ச்சியை தடை செய்யக்கூடிய நம்முடைய விக்கிரகங்களாகிய பூமிக்குரிய விருப்பங்களை நமக்கு முன் நிறுத்தி வைத்திருக்கிறோமா?

"உம்முடைய நன்மைகள் எவ்வளவு பெரியது?" என்று தாவீது எழுதின வார்த்தைகளில் எவ்வளவு வல்லமையான பாடம் உள்ளது? நம்முடைய மாம்சத்திற்கு இசைவில்லாத சூழ்நிலைகள் மத்தியிலும் தேவனை மகிழ்ச்சியோடு தொழுது கொள்வதற்கான சிறந்த எடுத்துக் காட்டுகள் நமக்கு முன் இருக்கிறது. கொடூரமான முறையில் சிறையில் தொங்கிக் கொண்டிருந்த பவுல் மற்றும் சீலாவின் துதி செலுத்தக்கூடிய பாடல்களை எண்ணிப் பாருங்கள். (அப் 16:23-25) 2 நாளாகமம் 20-ம் அதிகாரத்தில் யூதாவின் விண்ணப்பத்திற்கு இறங்கி தேவன் விடுவிப்பார் என்று முன்னறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் பவுல் மற்றும் சீலாவுக்கு இப்படிப்பட்ட உறுதியளிக்கப்படவில்லை. இருந்த போதிலும், சாதகமற்ற சூழ்நிலையிலும் பரலோகத் தந்தையை முழுமனதோடு போற்றித் துதித்தது போல நாமும் செயல்பட வேண்டும்.

**பகுதி மூன்று: உம்மை நம்புகிறவர்களுக்கும்**

இரண்டாம் பகுதியில், "உமக்கு பயந்தவர்களுக்கும்" என்ற வார்த்தைக்கும் மூன்றாம் பகுதியில் "உம்மை நம்புகிறவர்களுக்கும்" என்ற வார்த்தைக்கும் உள்ள முக்கியமான வித்தியாசத்தைக் காணலாம். யங்ஸ் ஒத்தவாக்கிய அகராதியைப் பொருத்தவரையில், பயப்படுதல் என்பதற்கு, பக்தியையும், நம்பிக்கை என்பதற்கு தஞ்சமடைவது என்றும் பொருள். யோசபாத்தின் சரித்திரத்தை யூதாவின் ஜனங்கள் பக்தியோடு தேவனை வழிப்பட்டார்கள். "நாலாம் நாளில் பெராக்காவிலே கூடினார்கள்; அங்கே கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார்கள்; ஆதலால் அவ்விடத்திற்கு இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி பெராக்கா என்னும் பேர் தரித்தார்கள்."( 11 நாளா 20:26)

ஸ்தோத்திரம் என்பதற்கு - "முழங்கால்படியிட்டு ஸ்தோத்திரம் செலுத்துவது" என்று பொருள். ஆனால் அவர்கள் தேவனை முழுமையாக நம்பினார்களா? "ஆனாலும் மேடைகள் தகர்க்கப்படவில்லை; ஜனங்கள் தங்கள் இருதயத்தைத் தங்கள் பிதாக்களின் தேவனுக்கு இன்னும் நேராக்காதிருந்தார்கள்." (2 நாளா 20:33) யூத ஜனங்கள் தேவனை நன்றியோடு ஸ்தோத்தரித்தார்கள். ஆனாலும் அவர்கள் முழுமையாக அவர் மேல் நம்பிக்கை வைக்கவில்லை. இதற்கு எதிர்மாறாக சிறையில் தூக்கியெறியப்பட்ட பவுலும் சீலாவும் தங்களுக்கு என்ன நேரிடும் என்பதை அறியாதிருந்தபோதிலும் அவர்கள் தேவன் மேல் முழு நம்பிக்கை கொண்டவர்களாக சகலத்தையும் அவரிடத்தில் அர்ப்பணித்திருந்தார்கள்.

நம்மை குறித்து என்ன சொல்லுவோம்? அவருடைய நடத்துதலை அறியாத போதிலும் அவரிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறோமா? பாரமான சோதனைகள் மத்தியில் ஆழ்த்தப்பட்டிருந்த போதிலும், அவர் சகல காரியங்களையும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாக நடத்துகிறார் என்பதை நம்புகிறோமா? பவுலையும் சீலாவையும் போல சிறைப்பட்டிருக்கக் கூடிய இந்த வாழ்க்கையிலும் தேவனை மகிழ்ச்சியோடு துதிக்கிறோமா? "நான் எப்பொழுதும் தேவனைத் துதித்து, அவரை ஆராதித்து, புகழ்ந்து, அவரிடத்தில் அன்பு கூறுகிறேனா?" என்ற கேள்வியை நமக்குள் நித்தமும் கேட்க வேண்டும். அல்லது என்னுடைய குடும்ப காரியங்களுக்காகவும், பண உதவிகளுக்காகவும், பாதுகாப்புக்காகவும் மட்டுமே தேவனை நான் நம்புகிறேனா? இவைகள் நம்மை தேவனிடத்தில் அல்ல, விக்கிரகங்களிடத்தில் நடத்துகிறதாய் இருக்கும். அநேகர் தேவனை பக்தியோடு ஆராதிக்கலாம். ஆனால், தங்களுடைய இருதயத்தோடு அவர் மேல் நம்பிக்கை வைத்தவர்களாக அவரை தொழுது கொள்ளுபவர்கள் வெகு சிலரே. இக்காரியமே ஒருவரை முற்றிலுமாக ஜெயம் பெறுவதற்கு பாத்திரவான்களாக தீர்க்கக்கூடும்.

**பகுதி நான்கு : மனுப்புத்திரருக்கு முன்பாக!**


மனுபுத்திரர் என்ற சொற்றொடர் பழைய ஏற்பாட்டில் 21 முறை காணப்படுகிறது. ஒவ்வொரு இடத்திலும் இந்த உலகத்தில் உள்ள மனுக்குலத்தைப் பொருள் படுத்துகிறது. இந்த வார்த்தைக்கு இரண்டு வழிகளில் பொருள் கூறலாம். அதில் ஏதோ ஒன்று சரியாகப் பொருந்தும். அதின் முதல் அர்த்தம் காலகணக்கை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தேவனுடைய மிகுந்த நன்மைகள் சுவிசேஷ யுகத்தில் உள்ள மாம்சத்தில் உள்ள இயேசுவின் சீஷர்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

மனுக்குலம் அறிவை பெறுவதற்கு முன்னதாகவே கிறிஸ்துவின் சீஷர்கள் தேவனை அறியக்கூடிய அறிவை பெற்றுவிட்டார்கள். தேவனுடைய பரிசுத்த ஆவியின் வழியாக வசனங்கள் விசுவாசிகளுக்குத் திறக்கப்பட்டுள்ளது. "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்." (யோவ 14:26)பரிசுத்த ஆவியின் மூலம் இயேசு கிறிஸ்துவின் சீஷர்களுக்கு கிடைக்கக்கூடிய ஆறுதல்கள் இவ்வசனத்தின் மூலமாக வாக்களிக்கப்படுகிறது. இந்நாள் வரைக்கும் இது உண்மையாகக் காணப்பட்டு வருகிறது. "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும் நல்நம்பிக்கையையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும், உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக."( 11தெச 2:16, 17)

இயேசுவின் சீஷர்கள் மீதியிருக்கும் மனுக்குலத்திற்கு முன்பாக நியாயம் விசாரிக்கப்படுகிறார்கள். "ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை; நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்கவந்தேன்."( யோவ 12:47) சபை வகுப்பார் மனுப்புத்திரருக்கு முன்பாக நியாயம் தீர்க்கப்படுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலத்தை தேவன் நியமித்திருக்கிறார். அதற்கு பின் மீதியிருக்கும் மனுக்குலம் உயிர்த்து எழுப்பப்படும். அப்பொழுது சாத்தான் ஆயிரம் வருடம் ஒருவனையும் மோசம் போக்காதபடிக்கு காவலில் வைக்கப்படுவான். அதற்கு பின் பரிசுத்த ஆவி அனைவர் மேலும் பொழியப்படும். அப்பொழுது அவர்கள் நீதியை கற்றுக் கொள்வார்கள். எதார்த்தத்தோடு நியாயந் தீர்க்கப்படுவார்கள். (1 கொரி 15:22; வெளி 20:2; ஏசா 11:9; மீகா 4:1-4; யோயேல் 2:28, 29; ஏசா 26:9)

தேவனுடைய மிகுந்த நன்மைகள் மனுக்குலத்திற்காக வைக்கப்பட்டிருந்தாலும், தேவனுடைய இராஜ்யத்தில் கிறிஸ்துவும் அவருடைய மணவாட்டியின் மூலமாக தேவன் அவர்களை செயல்படுத்த இருக்கிறார். தேவன் அவர்களுக்காக என்ன செய்வார்? "முன்பாக" என்ற வார்த்தையில் இரண்டாவது வழியாக ஒரு பதில் உள்ளது - "மனுபுத்திரருக்கு முன்பாக" இந்த வசனத்திற்குரிய பல எடுத்துக்காட்டுகள் உண்டு.

இராஜாவின் கட்டளை பிறப்பிக்கப்பட்ட பின்பும் பலகணிகளைத் திறந்து வைத்து ஜெபித்த தானியேலை எண்ணிப் பாருங்கள். "அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான்" (அப் 7:56)என்று மரணத்திற்குரிய அபாயத்தையும் எண்ணாமல், ஆலோசனை சங்கத்தாரிடத்தில் பேசின ஸ்தேவானைக் குறித்து எண்ணிப் பாருங்கள். மார்ஸ் மேடையில் கிரேக்கர்களிடத்தில் பிரசங்கித்த பவுலை எண்ணிப் பாருங்கள். இந்த பக்தியுள்ள மனிதர்கள் அனைவரும் தேவனிடத்தில் முழுமையான நம்பிக்கை கொண்டிருந்தனர். தேவ புத்திரருக்கு முன்பாக வெட்டவெளியில் தேவனைத் தொழுது கொள்ளவும், அவரை குறித்து பிரசங்கிக்கவும் அவர்கள் ஒருபோதும் வெட்கப்படவில்லை. அவர்களைக் காட்டிலும் அதிகமான சிறப்புரிமை கொண்டிருக்கும் நாம் இவ்வாறாக செயல்பட முடியுமா? இந்த உலகம் எப்படி செயல் பட்டாலும் நாம் அனைவரும் மனுஷருக்கு முன்பாக நம்முடைய வெளிச்சம் பிரகாசிக்கப்படுவதற்கு ஏற்ற நற்கிரியைகளைச் செய்து பரலோகத்தில் இருக்கும் பிதாவை மகிமைப்படுத்துவதற்கு அழைக்கப்பட்டு இருக்கிறோம் அல்லவா? (மத் 5:16) பரலோக அழைப்பின் பரம பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடரும் ஒவ்வொருவரும் "பிதாவே, உம்முடைய நன்மைகள் எவ்வளவு மகத்துவமானது" (பிலி 3:16) என்று ஒவ்வொரு நாளும் அறிக்கையிட வேண்டியவர்களாய் இருக்கிறோம்.



# ஒரு ஊழியக்காரரின் சித்திரம்

"உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" - மத் 20:27

**Tom Ruggirello**

ஒருவருக்கொருவர் இருதயப்பூர்வமாக சேவித்து ஒட்டுமொத்த சமுதாயமும் இப்படிப்பட்ட மனநிலையோடு தேவனை சேவிப்பதற்கு ஏற்ற வளர்ச்சியடைவதற்கு தேவனுடைய தெய்வீக திட்டத்தில் மிகச் சிறந்த ஒரு கோட்பாடு உண்டு. தேவன் ஏதோ ஒரு காரியத்தை மனுஷரின் இருதயத்தில் விதைக்கிறார். அவைகள் வளர்ச்சியடையும் போது ஜனங்கள் தங்கள் தேவனை மனதார மகிழ்ச்சியோடு சேவிப்பார்கள்.

இருதயங்களில் இப்படிப்பட்ட ஊக்குவிக்கும் வல்லமையை உருவாக்குவது அன்பாகும். வரும் நாட்களில் மனுக்குலம் ஒருவருக்காக ஒருவர் பணி செய்வதை மிக இயல்பாக - சுவாசிப்பது, புசிப்பது போன்ற காரியமாக இருக்கும். தேவனை சேவிப்பதும், சக மனிதர்களை சேவிப்பதும் ஒவ்வொருவருக்குள் இருந்தும் மனப்பூர்வமாய் ஏற்படும் காரியமாகும். இப்படி ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு உலகத்தைக் கற்பனை செய்துவது எவ்வளவு ஆச்சரியமாய் இருக்கிறது! கடந்த ஆறாயிரம் வருடங்களாக ஒருவரோடு ஒருவர் போராடி ஒருவரையொருவர் கொலை செய்து வாழ்ந்த காலங்களுக்கு வரக்கூடிய காலம் எவ்வளவு வேறுபட்டதாய் இருக்கிறது :

தேவ பக்தியுள்ள சந்ததியை சிருஷ்டித்து கிறிஸ்துவின் கீழ் இவர்களை ஒருங்கிணைத்து நீதியின் கோட்பாடுகளுக்கு உட்படுத்தி மற்றவர்களுடைய நன்மைக்காக இவர்களை ஒப்புவிப்பதே - தெய்வீக திட்டத்தின் இறுதி இலக்காகும். பக்தி... ஒருங்கிணைப்பு... கடை பிடிப்பு. .. அர்ப்பணிப்பு... இப்படிப்பட்ட வல்லமையுள்ள காரியங்களை தேவன் நம்முடைய இருதயங்களில் விதைத்துக் கொண்டு இருக்கிறார்.

இந்த இலக்குக்கு பாவம் மற்றும் மரணத்தின் அனுபவங்கள் மிக அவசியமாகத் தேவைப்படுகிறது. தேவனையும் அவருடைய நீதியான கோட்பாடுகளைக் கற்றுக் கொள்வதற்கும் இப்படிப்பட்ட அனுபவங்கள் தேவைப் படுகிறது. நம்மை ஒரு இயந்திரமாக தேவன் சிருஷ்டித்து அவருடைய கற்பனைகளை கடைபிடிப்பதற்கு நம்மை ஏற்றபடி வடிவமைத்திருக்கலாம் என்று நாம் பலமுறை கூறுவதுண்டு.

**மரணத்துக்குரிய வெடிப்பு**

நம்முடைய உலகத்தில் காணப்படும் இயந்திர மனிதர்கள் செருகூட்டப்பட்ட கீழ்ப்படிதலையும், வேலைகளையும் திட்டமாக செய்து வருகிறது. அதற்குள் ஆழமான சந்தோஷங்களோ, மிகுந்த வல்லமையோ, அன்போ காணப்படுவதில்லை. இயந்திர மனிதர்கள் இருதயத்திலிருந்து ஒருவரை நேசிக்க முடியாது. அதேபோல, ஒரு மனுஷனை வலுக்கட்டாயப்படுத்தி கீழ்ப்படியச் செய்வது சிறந்த பணியாக இருக்க முடியாது. இதுவே தேவனைப் போல் வாழக்கூடிய வாழ்க்கையல்ல. தேவன் தாம் பெற்றிருக்கும் உயர்ந்த ஞானத்தினால் தம்முடைய விருப்பத்தின்படி தன்னுடைய சொந்த சாயலில் அறிவுள்ள சிருஷ்டிகளை உருவாக்க விரும்பினார். ஆகவே எல்லா பணிகளும் இருதயத்திலிருந்து நிரப்பப்பட்டதாக முழு அன்போடும் உணர்வோடும் வெளிப்பட வேண்டும். இதுவே தேவ சாயல். இதை தவிர வேறு எந்த சிருஷ்டிப்பும் இதற்கு ஈடாக முடியாது.

இந்த யுகத்தில் ஆண்டவருக்கு ஊழியம் செய்ய விரும்புபவர்களைக் குறித்து என்ன சொல்லுவோம்? நம்முடைய உள்ளம் நிறைந்து தேவனை சேவிப்பதற்கு நாம் எப்படி கற்றுக் கொள்வது? எந்தவிதமான நிபந்தனையும், கட்டாயமுமின்றி மனப்பூர்வமாய் அவரை எவ்வாறு சேவிப்பது? ஆனால் இப்படியிருக்க நாம் முயற்சிக்கும் பொழுது உலகப்பிரகாரமான ஊழியக்காரர்களை ஒப்பிடுகையில் மனப்பூர்வமாய் ஊழியம் செய்யக்கூடிய ஒரு வேலைக்காரராய் இருப்பது மிகவும் கடினம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். ஏனெனில் அவர்கள் சுயநலமான நோக்கம் கொண்டவர்களாய்

இருக்கிறார்கள். நாம் கவனமாய் இராவிட்டால் தேவன் எதிர்பார்க்கக்கூடிய ஊழியக்காரர்களாக நாம் இருப்பதற்கு வாய்ப்பில்லை.

**மனப்பூர்வமான ஆவி**

உண்மையான ஊழியக்காரனுடைய சித்திரத்தில் மனப்பூர்வமாக என்ற குணமே அடிப்படை குணமாக வசனங்கள் குறிப்பிடுகிறது. யாத்திராகமம் 35-ம் அதிகாரம் தேவன் ஆசரிப்புக் கூடாரம் கட்டுவதற்கான கட்டளைகளை பதிவு செய்திருக்கிறது. அங்கு ஜனங்கள் மனப்பூர்வமாய் கொடுக்க வேண்டும் என்று தெளிவாய் கூறப்பட்டுள்ளது.

"பின்னும் மோசே இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரையும் நோக்கி: உங்களுக்கு உண்டானதிலே கர்த்தருக்கு ஒரு காணிக்கையைக் கொண்டுவந்து செலுத்துங்கள்; மனமுள்ளவன் எவனோ, அவன் அதைக் கொண்டுவரட்டும்; கர்த்தருக்குச் செலுத்தும் காணிக்கை என்னவென்றால், பொன்னும், வெள்ளியும், வெண்கலமும்," "பின்பு எவர்களை அவர்கள் இருதயம் எழுப்பி, எவர்களை அவர்கள் ஆவி உற்சாகப்படுத்தினதோ, அவர்கள் எல்லாரும் ஆசரிப்புக் கூடாரத்தின் வேலைக்கும், அதின் சகல ஊழியத்துக்கும், பரிசுத்த வஸ்திரங்களுக்கும் ஏற்றவைகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தார்கள். மனப்பூர்வமுள்ள ஸ்திரீ புருஷர் யாவரும், அஸ்தகடகங்கள், காதணிகள், மோதிரங்கள், ஆரங்கள் முதலான சகல வித பொன்னாபரணங்களையும் கொண்டுவந்தார்கள்; கர்த்தருக்குக் காணிக்கை செலுத்தின ஒவ்வொருவனும் பொன்னைக் காணிக்கையாகச் செலுத்தினான்." "செய்யப்படும்படி கர்த்தர் மோசேயைக்கொண்டு கற்பித்த வேலைக்குரிய யாவையும் கொண்டுவர, இஸ்ரவேல் புத்திரருக்குள் தங்கள் இருதயத்தில் உற்சாகமடைந்த ஸ்திரீ புருஷர் யாவரும் கர்த்தருக்குக் காணிக்கையை மனப்பூர்வமாய்க் கொண்டுவந்தார்கள்."( யாத் 35:4, 5, 21, 22, 29)

மனப்பூர்வமாய் என்ற வார்த்தை எத்தனை முறை எழுதப்பட்டு இருக்கிறது என்று சற்று கவனித்துப் பாருங்கள். தங்களுடைய சொந்த உடைமைகளை காணிக்கைகளாகக் கொடுத்து ஆசரிப்புக் கூடாரம் கட்டும் பணியில் ஒரு பங்கை பெறுவதற்கு தேவன் இக்காரியங்களைச் செய்தார். தேவனை ஆராதிப்பதற்காக சில காரியங்களை சொந்தமாக செலவழிக்க வேண்டம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இப்படிச் செய்தார். தேவன் இக்காரியத்தை நடப்பித்ததில் அவருடைய மிகச் சிறந்த ஞானம் அடங்கியுள்ளது. ஒரு வேலைக்காக நாம் நம்முடைய பணத்தை செலவழிக்கும்போது, இயல்பாக அதன் முக்கியத்துவத்தை நாம் அதிகமாக அறிந்து கொள்ளுவோம். ஒரு விசேஷித்த காரணத்திற்காக நாம் பலி செலுத்தி உழைக்கும்போது நம்முடைய வாழ்க்கையில் அதற்கு அதிகமான முக்கியத்துவமும் மதிப்பும் கொடுக்கப்படுகிறது. அதேபோல, நாம் ஆண்டவருடைய பணிக்காக செலவழிப்பதினால் நம்முடைய ஊழியங்கள் நமக்கு விலையுயர்ந்ததாக மாறுகிறது.

அன்றைய தினத்தில் மனப்பூர்வமாய் காணிக்கை செலுத்தின இஸ்ரயேலர்கள் தேவனுடைய சித்தத்தினாலேயே இந்த பொன்னையும், வெள்ளியையும் எகிப்தியரிடமிருந்து பெற்றுக் கொண்டனர் என்பதை நினைவில் கொண்டிருக்க வேண்டும். சகல வார்தைகளோடு இஸ்ரயேலர்களையும் வெளியே விரட்டுவதற்கு எகிப்தியர்களுக்கு இது பயன்பட்டது. முதலில் மனப்பூர்வமான இஸ்ரயேலர்கள் தேவன் அவர்களுக்கு தந்த நன்மைகளை தங்களுடைய உடைமை களாகப் பெற்றுக் கொண்டனர். ஆனால் தேவனைத் தொழுது கொள்வதற்காக அவைகளை திரும்பி கேட்ட பொழுது மனப்பூர்வமாய் கொடுப்பதற்கு சற்று தாமதித்தார்கள். ஆனால் நம்முடைய சகல உடமைகளையும் தேவனே தந்திருக்கிறார் என்பதை உணர்ந்தால் அதை மனப்பூர்வமாய் தயக்கமின்றி கொடுத்துவிடலாம். இப்படியாகப் பெற்ற காரியங்களை மீண்டுமாக தேவனுடைய பணிக்காக மனப்பூர்வமாக செலுத்துகையில் தேவனுடைய அளவற்ற ஆசீர்வாதங்களைப் பெறலாம்.

**சாலொமோனுக்கு தாவீது கொடுத்த கடைசி ஆலோசனை**

தாவீது தன்னுடைய ஜீவன் முடிவுக்கு வருவதை அறிந்து, தம்முடைய குமாரனாகிய சாலொமோனை இஸ்ரயேலின் அடுத்த இராஜாவாக

அமரச்செய்தார். 1 நாளா 28:6-10 வசனங்களில் தாவீது மரிக்கும்போது, சாலொமோனுக்குக் கொடுத்த ஆலோசனைகளின் பதிவைக் காணலாம்.

"என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்; நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்." (1 நாளா 28:9)

பரிபூரண இருதயத்தோடு இருப்பதே ஒரு முழுமையான இருதயம். இது எந்த சூழ்நிலையிலும் இதன் விசுவாசம் பங்கிடப்படுவதில்லை. இப்படிப்பட்ட முழு இருதயத்தோடு சாலொமோன் முழு சிந்தை கொண்டவராக நேர்த்தியாக கற்பிக்கப்பட்டிருந்தார். இளைஞனாகிய சாலொமோனிடத்தில் தேவன் கண்ட இந்த குணங்கள் இஸ்ரயேல் மேல் ஆட்சி புரிவதற்கு தகுதியுள்ளதாய் இருந்தது. அவர் பெற்ற திறமைகளோ, அறிவோ அவருடைய சகோதரரிடமிருந்து பிரித்துக் காட்டவில்லை. அவர் பெற்றிருந்த முழு விசுவாசமும் மனப்பூர்வமான சிந்தை மட்டுமே அவரை விசேஷித்தவராய் எடுத்துக்காட்டியது. கிறிஸ்துவோடு ஆட்சி செய்ய வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு இதில் அருமையான பாடம் ஒன்று உண்டு.

"அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்." (மத் 20:28) இயேசு கிறிஸ்துவைப் பற்றி புதிய ஏற்பாட்டில் இவ்வாறாகக் கூறப்படுகிறது. இயேசு நமக்கு ஊழியம் செய்ய விரும்பினதே இந்த உலகம் பெறக்கூடிய மிகப் பெரிய ஆசீர்வாதமாகும். அவர் இந்த உலகத்திற்கு வந்து நாம் எவ்வாறு ஊழியம் செய்ய வேண்டும் என்பதை கற்றுக் கொடுத்தார். மேலும் நாம் செய்யக்கூடிய ஊழியத்திற்கு சரியான நோக்கம் இருக்க வேண்டும் என்பதையும் கற்றுக்கொடுத்தார்.

"நாம் எதைக் கொடுக்க வேண்டும்? நான் எப்படி ஊழியம் செய்ய வேண்டும்?" என்பதை ஒரு வளர்ச்சியடைந்த கிறிஸ்தவனுடைய இலக்காய் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையை வாழ்வதற்கு நம்முடைய ஆண்டவராம் இயேசு சீஷர்களுக்குக் கற்பித்து தம்முடைய முன்மாதிரியை வைத்துப் போனார்.

**தூண்டுதலுக்கான திறவுகோல்**

சரியான வழியில் ஊக்குவிக்கப்பட்டால் மட்டுமே இடுக்கமான பாதையில் வெற்றிகரமாய் நடக்க முடியும் என்று இயேசுவின் வார்த்தைகள் கருதுகிறது. ஆகவே ஆண்டவருக்காக நாம் செய்யக்கூடிய ஊழியம் வேதத்தின் அடிப்படையில் எவ்வாறு சரியாக ஊக்குவிக்கப்பட வேண்டும் என்ற கேள்வியை நாம் கேட்கலாம்.

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்" (யோவ 13:34, 35)என்ற வசனங்களில் நம்முடைய ஆண்டவராம் இயேசு இதற்கான பதிலைக் கொடுக்கிறார். நாம் செயலாற்றக்கூடிய அன்பானது, நாம் அவருடைய சீஷர்கள் என்று அடையாளம் காட்டப்படுகிறது. மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால் அன்பு அதின் கிரியைகளினால் வெளிப்படுகிறது.

அன்பு என்ற வார்த்தைக்கு Agapeo (அகாபியோ) என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இது phileo (பிலியோ) அன்பிலிருந்து - குடும்பத்தில் காணப்படும் அன்பு மற்றும் சகோதர அன்பு - காட்டிலும் வேறுபட்டது. அகாபே அன்பு என்பது பரிசுத்தமான உயர்தர அன்பாகும். குடும்பங்கள் நண்பர்கள் மற்றும் சகோதரர்களிடம் செலுத்தப்படும் அன்பை நாம் திரும்பப் பெறலாம். ஆனால் எந்த அன்பையும் எதிர்பாராமல் செலுத்தக்கூடியது அகாபே அன்பாகும். நம்மை நேசிக்காதவர்களை திரும்ப நேசிப்பது மிகக் கடினமான காரியமாகும். நமக்கு எந்தவிதமான நன்மைகளையும் செய்யாதவர்களுக்கு ஊழியம் செய்வதே அகாபே அன்பாகும். இந்த ஒரு நிலையைப்

பெறுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். இதுவே உண்மையான ஊழியக்காரனுடைய உள்நோக்கமாக இருக்க வேண்டும் - தேவனைப் போல ஊழியம் செய்வது நன்மையானதும் சரியானதுமாக இருப்பதினால் அவைகளை நிறைவேற்றுவதில் மிகுந்த அன்பைக் காட்ட வேண்டும்.

நாம் மற்றவர்களுக்கு ஊழியம் செய்யாவிட்டால் நிச்சயமாக நாம் அவர்களை நேசிக்கவில்லை என்று பொருள்படும். ஏனெனில், அன்பு கிரியைகளினால் வெளிப்படுகிறதாய் இருக்கிறது.

**மக்கெதேனியா சகோதரர்கள்**

11 கொரி 8-ம் அதிகாரத்தில் மக்கெதோனியாவில் பவுல் பெற்ற அனுபவங்களைக் கூறுகிறார். எருசலேமில் ஏழ்மை நிலையிலிருந்த சகோதரர்களுக்காக பணங்களை வசூலித்தார். குறிப்பாக அப்பொழுது மக்கெதோனியாவிலிருந்த சகோதரர்களும் ஏழ்மை நிலையில் காணப்பட்டார்கள். ஆயினும் அவர்கள் செய்த உதவியினிமித்தம் பவுல் ஆச்சரியமடைந்தார். எருசலேமிலுள்ள சகோதரர்களுக்கு உதவி செய்யும் படியாக அவர்கள் கெஞ்சினார்கள். தங்களிடமிருந்த குறைவான பணங்களை பகிர்ந்துக் கொள்வதற்கான ஒரு வழியை கண்டுபிடித்தார்கள்.

"அன்றியும் சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்குத் தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம். அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன். தங்கள் உபகாரத்தையும், பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக்கொண்டார்கள். மேலும் நாங்கள் நினைத்தபடிமாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்." (11 கொரி 8:1-5)

உண்மையான ஊழியக்காரனின் சித்திரத்திற்கு கூடுதலான ஒரு குணநலனை மக்கெதோனியாவிலுள்ள சபையில் காணலாம். முதலில் எந்தவிதமான தனி நபர்களைப் பற்றியும் குறிப்பிடப் படவில்லை. மேலும் எந்தவிதமான தனிப்பட்ட சபையையும் அங்கு குறிப்பிடப்படவில்லை. "மக்கெதோனி யாவிலுள்ள சபைகள் இக்காரியங்களைச் செய்தார்கள்" என்று பவுல் கூறுகிறார். ஆகவே தேவனுடைய உண்மையான ஊழியக்காரன் பொதுவாக தன்னுடைய பெயரை வெளிப்படுத்தாமல் இருக்க விரும்புவார். ஆகவே உண்மையான ஊழியக்காரர்கள் மற்றவர்கள் அறியாத வண்ணம் தங்களுடைய பணியை செய்வார்கள். ஆனால் மாம்சமானது தான் அடையாளம் காணும் படியாக விரும்பக்கூடியது என்று நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

மக்கெதோனியா சபைகளில் செயலாற்றப்பட்ட மற்றொரு உச்சிதமான செயல் - இரக்கமுள்ள குணம் "தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்" (11கொரி 8:1) என்று பவுல் கூறுகிறார். தங்களுடைய வாழ்க்கையில் செயல்படும் பரிசுத்த ஆவிக்கு ஆதாரமாக வெளிப்பட்ட இந்த செயல்கள் எவ்வளவு அற்புதமானது! தங்களுடைய தேவைகளை சந்திப்பதற்குப் போராடிக் கொண்டிருந்த அவர்கள் எருசலேமிலிருந்த சகோதரர்களுக்கு மனப்பூர்வமாய் கொடுப்பதற்கு மிகுந்த மகிழ்ச்சியாய் இருந்தார்கள். இவர்களின் கொடுத்தல் மிக நேர்த்தியானதாய் இருந்தது. மதிப்புள்ளதை நாம் கொடுக்கும் போது நிச்சயமாக நம் இருதயத்தின் தாராளம் வெளிப்படுகிறது.

**ஊழியக்காரனின் சில குணங்கள்**


சபைகளில் மூப்பர்கள் கண்காணிகளுக்குரிய தேர்வு நடைபெறும் பொழுது, தீமோத்தேயுவில் வரிசைப்படுத்தப்பட்ட தகுதிகளைப் பொதுவாக வாசிப்பதுண்டு. ஆயினும் கிறிஸ்தவர்களின் சரீரத்தில் இதற்கான அதிகப்பட்ச நடைமுறைகள் உண்டு என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

"ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்கவேண்டும். அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனு மாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பணஆசையில்லா தவனுமாயிருந்து, தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது. அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்கவேண்டும்." (1 தீமோ 3:2-7)

இக்குணங்கள் மூப்பர்களுக்கு மட்டுமல்ல, தேவனுடைய ஜனங்களிடத்தில் இவைகள் குறையாமல் காணப்பட வேண்டும். மூப்பர்கள் மட்டும் இரக்கமுள்ளவர்களாக இருந்தால் போதுமா? மூப்பர்கள் அல்லாதவர்கள் பண ஆசையில்லாதவர்களாய் இருந்தால் ஏற்றுக் கொள்ள முடியுமா? நிச்சயமாக இல்லை. ஆகவே இக்குணங்கள் அனைத்தும் கிறிஸ்துவைப் போல் இருக்கும் ஊழியக்காரர்களுக்கு மிகவும் அவசியமானது.

கண்காணிகளுக்குத் தேவையான குணங்கள் பற்றியும் பவுல் வரிசைப் படுத்துகிறார். "அந்தப்படியே, உதவிக்காரரும் இருநாக்குள்ளவர்களாயும், மதுபானப்பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல், நல்லொழுக்கமுள்ளவர்களாயும், விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக்கொள்ளுகிற வர்களாயும் இருக்க வேண்டும். மேலும், இவர்கள் முன்னதாகச் சோதிக்கப் படவேண்டும்; குற்றஞ்சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ் செய்யலாம். அந்தப்படியே ஸ்திரீகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறுபண்ணாதவர்களும், தெளிந்தபுத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கவேண்டும். மேலும் உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும்சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்கவேண்டும். இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்." (1தீமோ 3:8-13)இந்த வரிசை மிகவும் ஆர்வ மூட்டக்கூடியதாய் இருக்கிறது. இந்த குணங்கள் அனைத்துமே கிறிஸ்துவைப் போன்று இருக்கும் ஊழியக்காரர்களுக்கு மிகவும் அவசியமானது.

விசுவாசமுள்ள ஊழியக்காரனின் சித்திரத்தைக் குறித்து ஒரு சுருக்கமான காரியம் - சுயநலமற்ற ஒரு வாழ்க்கையை வாழ்வது இவ்வாழ்கையை வெகு சிலரே பழக்கப்படுத்த முயற்சிக்கிறார்கள். அதிலும் சிலரே இதை நடைமுறைப்படுத்துகிறார்கள். "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" (மத் 11:29)என்று இயேசு கூறுகிறார். இயேசு சொன்ன நுகத்தை நாம் சுமக்கும் பொழுது இலகுவாய் இருக்கும் - ஆனால் மற்றவர்களுக்குப் பணி செய்ய விரும்பாதபொழுது இந்த நுகம் மிகவும் பாரமாகக் காணப்படும். ஆனால் மக்கெதோனியா சகோதர்களைப் போல நமக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்புகளை சிறப்புரிமைகளாக நாம் ஏற்றுக் கொண்டால் எல்லாமே இலகுவாகிவிடும். இப்படிப்பட்ட உண்மையான ஊழியக்காரனுடைய சித்திரத்தை வசனங்களின் மூலம் வரைந்து காணப்படும் பொழுது எவ்வளவு அற்புதமான வாழ்க்கை முறையாக காணப்படுகிறது - இதுவே தேவனால் வடிவமைக்கப்பட்ட வாழ்க்கை முறையாகும்.



# ஊக்குவிக்கும் வரம்

"மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்."(எபிரெயர் 10:24, 25)

Todd Alexander

நாம் பெற்ற தாலந்துகளையும், இயல்பான வரங்களையும், தேவனுடைய பணிக்காக மேலும் சிறப்பாக எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை சிந்திப்பவர்களுக்கு ஜனவரி மாதம் மிகப் பொருத்தமான காலமாயிருக்கிறது. யாரொருவர் விசேஷித்த வரங்களைப் பெற்றிருக்கிறார்களோ, மற்றவர்களை மேலும் ஊக்குவிப்பதற்கும், உற்சாகப்படுத்துவதற்கும் உரிய இந்த வரத்தைக் குறித்து சிந்திக்கக்கடவர்கள்.

"கவனித்து" மற்றும் "ஏவப்படும்படி" என்ற வார்த்தைகளை அப்போஸ்தலனாகிய பவுல் சரியான ஐக்கியத்திற்கு எவ்வாறு பயன்படுத்தினார் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்."மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து;" (எபி 10:24)

இன்றைய தினங்களில் ஏவப்படுதல் என்ற வார்த்தைக்குப் பதிலாக ஊக்குவிப்பது என்ற வார்த்தையை நாம் பவுலின் எச்சரிப்புக்குப் பயன்படுத்தலாம். இது சக கிறிஸ்தவர்களை சரியான வழியில் கிரியை செய்வதற்கான ஒரு உற்சாக மூட்டுதலாம். நாம் ஒவ்வொருவரும் ஒரு அப்போஸ்தலனாக இல்லாதப்போதிலும் பவுல் செய்ததுபோல ஒருவரையொருவர் ஊக்கமளிக்கக் கூடிய திறமையைப் பெற்றிருக்கிறோம். இது அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய வரமல்ல, இதில் வளர்ச்சியடைய விரும்பும் அனைவருக்கும் கொடுக்கப்படும் பொதுவான வரமாயிருக்கிறது. சிலர் இதை இயல்பாகவும், எளிதாகவும் பெற்றுக் கொண்டு மற்றவர்களை ஊக்குவிக்கிறார்கள். ஆனால் எல்லா கிறிஸ்தவர்களும் இதை நடைமுறை படுத்தும்படி பவுல் எச்சரிக்கிறார்.

இந்த வரத்தை முதலில் சகோதர ஐக்கியத்தை நாம் நடைமுறைபடுத்தலாம். மகிமையடைந்த இயேசுவோடு அப்போஸ்தலராகிய பவுல் தன்னுடைய ஊழியத்தில் அனைவரையும் உற்சாகமாக ஊக்குவித்துக் கொண்டிருந்தார். அதைப்போல புறஜாதிகளிடத்தில் நடந்த ஊழியத்திற்காகவும், சக அப்போஸ்தலரை ஊக்குவித்தார். ஆகவே, "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்" (எபி 10:25)என்று எச்சரித்தார். அப்போஸ்தலர் பவுலின் ஊழியத்தை மற்றவர்களை உற்சாகப்படுத்தக்கூடிய காரியங்களை மிக முக்கியமானதாக எண்ணி மற்றவர்களுக்குள் இருக்கும் இந்த வரத்தையும் வளர்ச்சியடைய செய்வதற்கு துரிதப்படுத்தினார்.

பவுலின் மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு மற்றவர்களை ஊக்குவிப்பதற்கான ஏழு வழிகளைக் குறித்துப் பார்க்கலாம்.

### கேள்விகள்

கேள்விகள் நம்மை வழி நடத்தும். உயிர்த்தெழுந்த நம்முடைய ஆண்டவர் தமஸ்குவின் சாலையில் சவுலிடம் ஒரு கேள்வியோடு சந்தித்தார். "ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்?" (அப் 26:14) இந்த ஒரு கேள்வியானது சவுலின் வாழ்க்கையின் நோக்கத்தின் எல்லா பகுதிகளிலும் ஊடுருவிச் சென்றது. அவர் மனசாட்சியில் குத்தப்பட்டவராக இயேசு கிறிஸ்துவினிமித்தம் வாழ்நாள் முழுவதும் கீழ்ப்படிந்து துன்பப்படுவதற்கு ஏவப்பட்டார். மற்றவர்களை சரியான வழியில் நடத்துவதற்கு அவர்களுக்கு உதவியாக ஒரு நியாயமான கேள்வியை எழுப்புவது மிகச் சரியாக இருக்கும். ஏனெனில் அப்படிப்பட்ட கேள்விகள் மனசாட்சி உணர்வடைய செய்து வாழ்க்கைப் பாதையை மாற்றும்.

வெகு சில வருஷங்களுக்குப் பின் பவுல் பேதுருவிடம் ஊடுருவிச் செல்லக்கூடிய ஒரு கேள்வியை எழுப்பினார். "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே." (கலா 2:16)இந்த கேள்வி பேதுருவின் இருதயத்தை அறுத்தது. பேதுரு சரியான காரியங்களைச் செய்ய வேண்டும் என விரும்புவதை பவுல் அறிந்திருந்தார். ஆயினும் பேதுருவுக்குள் அந்த மாற்றங்கள் ஏற்பட பவுல் அந்த கேள்வியின் மூலம் ஊக்கமூட்டினார். இறுதியில் பேதுரு பவுலின் மீது வைத்த அன்பையும் வெளிப்படுத்தினார். "அன்பாக நேசிக்கப்பட்ட சகோதரர் பவுல்" (2 பேது

3:15) ஊடுருவும் கேள்விகளை அன்பின் அடிப்படையில் மிருதுவாகக் கேட்கப்படும்பொழுது, அது மிகுந்த பலனளிக்கும்.

**அன்பு**

ஜெயிக்க முடியாத யுத்தங்களையும் அன்பு வெகு சீக்கிரத்தில் ஜெயித்துவிடும். "உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள். சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்." (ரோமர் 12:9,10) ஒருவேளை பவுல் முன்னதாக உபத்திரவப்படுத்தினவர்களிடத்தில் அன்பின் வல்லமையை ஒரு புதிய துவக்கத்தில் வலியுறுத்தி இருக்கலாம். பவுல் தன்னுடைய உபத்திரவங்களின் மத்தியில் வாழ்ந்தாலும், கிறிஸ்தவ சகோதரர்களின் மிதமான அன்பை எப்பொழுதும் உணர்ந்தார்.

அன்பு செயலாற்றக்கூடிய உணர்வுகளை நமக்குக் கொடுக்க வேண்டும். "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்;" (11கொரி 5:14) கிறிஸ்துவின் மேல் வைக்கக்கூடிய அன்பு, நம்முடைய வாழ்க்கையின் வழிகளை அமைக்கிறது. நாம் அந்த அன்பை மற்றவர்களிடத்தில் பிரதிபலிக்கும்போது, மற்றவர்களையும் அதே திசையில் ஊக்குவிக்கிறது. நாம் விரும்பக்கூடிய காரியங்களை தடை செய்வது அன்பு அல்ல. ஆனால் இலக்கை நோக்கி நம்மை சரியான வழிகளில் நடத்தக்கூடியதாய் இருக்கிறது.

**நம்பிக்கை**

"மனுஷன், உணவின்றி நாற்பது நாளும், தண்ணீரின்றி மூன்று நாளும், காற்றின்றி எட்டு நிமிஷங்களும் வாழக்கூடும். ஆனால் நம்பிக்கையின்றி ஒரு நொடி கூட வாழ முடியாது என்ற பிரபலமான ஒரு வாக்கியம் சொல்லப்பட்டுள்ளது. இந்த நம்பிக்கையின் முக்கியத்துவத்தை பவுல் அறிந்திருந்தார். ஆபிரகாமைப் போல வல்லமையுள்ள பாத்திரங்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளை எடுத்துரைத்து மற்றவர்களை ஊக்குவித்தார். "உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்." (ரோமர் 4:18)நம்பிக்கையோடு வாழக்கூடிய வாழ்க்கைக்கு பவுலின் வாழ்க்கை நமக்கு சிறந்த மாதிரியாக இருக்கிறது. "நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார். அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது." (எபி 6:18, 19) இயேசு தம்முடைய புதிய அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்ட விதியை அனனியா உணர்ந்திருந்தார். "அதற்கு கர்த்தர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்." (அப் 9:15, 16) சிறையிலிருந்த அப்போஸ்தலரின் நம்பிக்கையானது, தேவ ஜனங்களை தன்னுடைய நிருபங்களால் ஊக்குவிக்கும்படி தனக்குள் இருந்த நம்பிக்கை கட்டாயப்படுத்தியது. ஆகவே மற்றவர்களுக்கு மாதிரியாக இருக்கும்படி பவுலின் வார்த்தைகளில் காணப்படும் நம்பிக்கையை நாம் பின்பற்ற வேண்டும்.

**முழுமையான**

முழுமையான என்பது ஒரு முழு மனுஷனை அடையாளப்படுத்தும். தீமோத்தேயு தன்னுடைய இளவயதை காரணம் காட்டி ஊழியத்தில் சற்று பின்தங்கிய போது, பவுல் தீமோத்தேயுவின் தாய் மற்றும் பாட்டியின் விசுவாசத்தைக் குறித்தும் நினைப்பூட்டி அவரை ஊக்குவித்தார். (2 தீமோ 1:2-12) தீமோத்தேயு விசுவாசத்தைப் பெற்றுக் கொண்ட மூன்றாம் தலைமுறையில் இருப்பதைக் காணும்படி செய்தார்.

அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கையின் மதிப்புள்ள அமைப்பில் இந்த முழுமையான காரியங்களை தக்க வைத்துக் கொள்வது கடினமாகத் தோன்றுகிறது. ஆயினும் நெகேமியா, யோசேப்பு மற்றும் தானியேல் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அகப்பட்டு இருந்தாலும், முழுமனதோடு தேவனிடத்தில் உறுதியான விசுவாசத்தை வெளிப்படுத்துவதில் தங்களை தக்க வைத்துக் கொண்டனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு சூழ்நிலைகளில் தேவனுடைய இரக்கத்தைப் பெற்று விடுவிக்கப்பட்டார்கள். மற்றவர்கள் சோர்வடையும்போது பழைய ஏற்பாட்டில் நீதிமான்களுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஆவியை மாதிரியாக எடுத்துக் கொண்டு நம்முடைய இக்காலத்துப் பாடுகளை எளிதாக மேற்கொள்ளலாம். (1 கொரி10:11)

**வல்லமை**

நம்முடைய ஆவிக்குரிய சிந்தையை அதிக அளவிலான பரிசுத்த ஆவிக்குரிய உணவுகளைக் கொடுப்பதினிமித்தம் நமக்குள் இருந்து ஆவிக்குரிய வல்லமை புறப்படுகிறது. "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்." (ll தீமோ 1:7 )பல நேரங்களில் பவுல் உதவியற்றவராகக் காணப்பட்டார். அவர் ஆழங்களில் மூழ்கடிக்கப்பட்டார். அடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஆனாலும் யோசேப்பு மற்றும் தானியேல் போன்றவர்களிடம் செயல்பட்ட தேவனுடைய வல்லமையை நன்கு அறிந்திருந்தார். (ஆதி 41:14-49; தானி 5:10-28) பேலிக்ஸ் மற்றும் பெஸ்துவுக்கு முன்பாக பவுல் நிறுத்தப்பட்டபொழுது யோசேப்பு மற்றும் தானியேல் கொண்டிருந்த அதே வல்லமையை பவுலும் வெளிப்படுத்தினார்.

இன்றைக்கும் அநேகர் தங்களுடைய விசுவாசத்தை வெளிப்படையாக அறிக்கையிடுவதற்கு தயங்குகிறார்கள். பவுலின் வாழ்க்கை மற்றும் வார்த்தைகளின் வழியாக இப்படிப்பட்டவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

**நோக்கம்**

ரோமர் 12:1, 2 வசனங்களில், ஒரு கிறிஸ்தவனுடைய நோக்கம் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்." அர்ப்பணிப்பு ஒரு வாழ்க்கையை புதிதாக மாற்றி அமைக்கிறது. இதற்கு ஒருவருடைய உபத்திரவங்களுக்குள்ளாக கடந்துவருவது மிக அவசியமானது. அதில் நம்முடைய அனுபவங்கள் சோர்வடையச் செய்தாலும் நம்மை புது சிருஷ்டிகளாக வளர்ச்சியடையச் செய்கிறது.

ஒரு முழு கிறிஸ்தவனாக வளர்ச்சியடையக் கூடிய தன்னுடைய பயணத்தில் பவுல் எங்கும் நிறுத்தவில்லை. "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" (பிலி 3:14)என்று அவர் கூறினார். இந்த எளிமையான வாக்கியம் வாழ்க்கையின் நோக்கத்தை விவரிக்கிறது. பிதாவாகிய யேகோவா தேவன் அவருக்குக் கொடுத்த வேலையை ஒரே மனதோடு செய்வதற்காக அவர் சித்தம் கொண்டிருப்பதைக் காட்டுகிறது. பவுலின் வார்த்தையின் படி அர்ப்பணிப்பு துவங்கியது. ஆனால் அது முடியவில்லை. இப்படிப்பட்ட வார்த்தைகளை மற்றவர்களுக்குக் கூறி வாழ்க்கையின் பல போராட்டங்களைப் போராடுகிற கிறிஸ்தவர்களை நாம் ஊக்குவிக்கலாம்.

**கதைகள்**

"ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது; ஒருவன் அடிமையானவளிடத்தில் பிறந்தவன், ஒருவன் சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன். அடிமையானவளிடத்தில் பிறந்தவன் மாம்சத்தின்படி பிறந்தான், சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன் வாக்குத்தத்தத்தின்படி பிறந்தான். இவைகள் ஞான அர்த்தமுள்ளவைகள்; அந்த ஸ்திரீகள் இரண்டு ஏற்பாடுகளாம்; ஒன்று சீனாய்மலையிலுண்டான ஏற்பாடு, அது அடிமைத்தனத்திற்குள்ளாகப் பிள்ளைபெறுகிறது, அது ஆகார் என்பவள்தானே" (கலா 4:22-24)போன்ற கதைகளும் நம்மை ஊக்குவிக்கிறது. கலாத்தியா நாட்டிலுள்ள கிறிஸ்தவர்கள் யூத யுகத்திலிருந்து சுவிசேஷ யுகம் மாற்றப்பட்டதின் விளக்கங்களைப் புரிந்து கொள்வதற்கு இது உதவியாய் இருந்தது.

ஒப்புமைகளாயும், உவமானங்களாயும் பயன்படுத்தி அப்போஸ்தலர் பவுல் தேவனுடைய கோட்பாடுகளை ஆவிக்குரிய விதத்தில் புரிய வைத்தார். அது போல, உபதேசங்கள் மற்றும் குணநலன்கள் பற்றிய கோட்பாடுகளைக் கற்றுக் கொள்வதற்கு விசுவாசம், கீழ்ப்படிதல் மற்றும் வசனங்களில் உண்டான பல கதைகளையும் நம்முடைய சகோதரர்களின் வாழ்க்கையில் காணப்படும் சரித்திரங்களையும் எடுத்துக் கொள்ளலாம்.

மற்றவர்களை ஊக்குவிக்கக்கூடிய வரமானது, தொடர்ந்து நம்முடைய சகோதரர்கள் மத்தியில் பயன்படுத்தலாம். மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதில் நாம் எவ்வாறாக இந்த வரத்தை பயன்படுத்த வேண்டும் என்று பவுலின் வாழ்க்கையையும், எழுத்துக்களையும், ஏராளமான மாதிரிகளையும் காணலாம். ஆகவே நாம் ஒவ்வொருவரும் நற்கிரியைகளைச் செய்து அன்பில் ஏவப்படும்படியாக அப்போஸ்தலர் பவுலின் அர்ப்பணிப்பைப் பின்பற்றுவோமாக.

தீர்க்கதரிசனத்தில் இன்று

# பாதுகாப்பின் தூண்

"அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (ஆமோஸ் 9:15)

சென்ற நவம்பர் மாதம் எழுநூறுக்கும் மேற்பட்ட ஏவுகனைகளால் ஹம்மாஸ், இஸ்ரயேலைத் தாக்கியதன் காரணமாக இஸ்ரயேலின் காசா பகுதியில் மீண்டும் வன்முறை வெடித்துள்ளது. டெல் -அவிவ் நகரம் தாக்கப்பட்டதால் இஸ்ரயேல் பதிலடிகொடுக்க வேண்டியதாயிற்று. இதில் ஹம்மாஸின் தளபதி கொல்லப்பட்டான், இதை இஸ்ரயேலின் பழிதீர்க்கும் செயல் என்றே ஊடகங்கள் ஏற்றுக்கொண்டன.

ஆயினும், பத்திரிகை தலைமையின் கருத்தின்படி, இஸ்ரயேலின் தாக்குதல் பொருத்தமாக அமையவில்லை என்றே தெரிவிக்கப்பட்டது. வாஷிங்டன் பத்திரிகையின் யூஜின் ராபின் கருத்துப்படி இஸ்ரயேல் காசா பகுதிக்கு ஹம்மாஸைத் தேர்வு செய்ததற்காக கொடுக்கப்பட்ட தண்டனையேயாகும் என்று குறித்துக் காட்டப்பட்டது. நியூயார்க் பத்திரிகை செய்தியின்படி, இஸ்ரயேல் பதிலடி நடவடிக்கைகளுக்கு பாலஸ்தீன அதிகாரிகளுடைய ஆதரவு பெறுவதற்குப் பேச்சுவார்த்தை நடத்தப்படுவது எளிதானதாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. காசாப் பகுதியின் 1.6 மில்லியன் ஜனங்களுள், 44% பதினான்கு அல்லது அதற்கு குறைந்த வயதினர் ஆவர். அவர்களுக்கெல்லாம் மின்சாரம் வழங்குவதுபற்றி எவ்வித உறுதி மொழியும் இடம் பெறவில்லை.

மேலும் திட்டமிட்ட தாக்குதல்கள் குறித்து, அது பற்றிய எச்சரிக்கைப் பிரசுரங்கள் ஏதும் விநியோகிக்கப்படவில்லை. ஆயினும் அவற்றைப் பொருட் படுத்த வேண்டாம் என்ற ஹம்மாஸின் எச்சரிக்கை வாயிலாகவே தெரியவந்தது.

**மேலும் ஓர் கொடூரமான ஹம்மாஸ்**

இஸ்ரயேலின் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பின், நான்கு ஆண்டுகளாக ஹம்மாஸ் எந்தத் தாக்குதலையும் தொடங்கவில்லை. மாறாக, மற்ற காசா பகுதிகள் தீவிரவாதிகளால் தாக்கப்படக்கூடிய நிலையைத் தடுக்கவே பலவழிகளில் முயற்சி எடுத்தார். எகிப்தின் முகமதிய ஆட்சியானது ஹம்மாஸ்க்கு ஊக்கம் அளித்து, அவரை, மேலும் அதிக வெறித்தனம் கொண்ட போராளியாக மாற்றியது.

முகமதியர் பலர் மத்திய கிழக்கு நாடுகளில் வெகுவாக முன்னேறி அதிகாரம் பெற்றனர். அவற்றுள், துனிசியா, மொராக்கோ, ஜோர்டன் மற்றும் லிபியா ஆகிய நாடுகள் இடம் பெற்றன.

சிரியா நாட்டில் முகமதியர், ஆஸாத் ஆட்சிக்கு முக்கிய எதிர்ப்பாளர் ஆவார். கத்தார் நாட்டு ஆளுநர் மீட்புப் பணிக்காக 400 மில்லியன் பவுண்டுகள் வாக்களித்தார். இஸ்ரயேலின் பதிலடி தாக்குதலானது ஒரு தீவிரவாத செயலே என்று துருக்கி பகிரங்கமாகக் கண்டனம் தெரிவித்தது. ஆயினும் இஸ்ரயேலின் தோழமை நாடான ஐக்கிய அமெரிக்காவின் மறுப்பு பற்றி ஏதும் தெரிவிக்கப்பட வில்லை. இவ்வித அமெரிக்காவின் மௌனத்தை பத்திரிகைகள் பல விமர்சித்தன.

இதற்கிடையில், மத்திய கிழக்கு நாடுகளில் குவார்ட்டட் (Quartet)என்ற நாவ்வர்குழு, 2002 ல் நிறுவப்பட்டது. அக்குழுவில் ஐக்கியநாட்டு ஸ்தாபனம், அமெரிக்க ஐக்கிய நாடுகள்,

ஐரோப்பியக் கூட்டமைப்பு மற்றும் ரஷ்யாஆகிய நாடுகள் உறுப்பினர்களாக இடம் பெற்றன. இந்நால்வர் குழு இஸ்ரயேல், பாலஸ்தீனம் இடையே சமாதானம் ஏற்படுத்தும் முயற்சிக்காகவே நிறுவப்பட்டது.

ஆனால் ஹம்மாஸ் 2007 ல் அதிகாரம் கைப் பற்றிய பிறகு மாட்ரிட் விதி முறைகள் நிராகரிக்கப்பட்டன. மேலும் சீயோன் நகரின் ஆட்சியை அழித்துவிடுவதே நோக்கம் என்பது புலனானது.

தவிரவும், சீயோன் ஒப்பந்தம் ஒரு முறைகேடான செயல் என்றும் அறிவிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போர்க்காலத்தில், யூத சமுதாயம் இராணுவ, தளவாடங்கள் விநியோகம் செய்ததன் மூலம் ஏராளமானப் பயன் அடைந்தனர். ஆயினும் எண்ணற்ற ஜனங்கள் அக்காலத்தில் பலியானது பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை.

**வேதாகமத்தில் - இஸ்ரயேலுக்கு உரிய நிலம்**

மத சார்பற்ற இன்றைய உலகில் இறைவனும் அவருடைய உறுதி மொழிகளும், இயேசுவைப் பின்பற்றும் ஜனங்களால் ஓரளவு ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், பொதுவாக அவை புறக்கணிக்கப்பட்டுவிடுகின்றன. கடவுள் ஆபிரகாமுக்கும், பிறகு யாக்கோபுக்கும் கொடுத்த வாக்குறுதிகள் பல, அவை இறுதிநாட்களில் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. "அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று: நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்."(ஆதி 28 :13,14) தேவன் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தேசத்தின் எல்லைகளை எவராலும், எந்த எதிரிகளாலும், அசைக்கப்பட முடியாது.

தீர்க்கதரிசியாகிய எசேக்கியேல் கண்ட ஒரு காட்சியில் பல எலும்புகள் ஒன்று சேர்க்கப்பட்டு, கடவுளின் ஆவியைப் பெற்றுக்கொண்டது. இக்காட்சி, இஸ்ரயேல் மீண்டும் புத்துயிர் பெறுவதைக் குறிப்பதாக எடுத்துக் கொள்ளப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சீயோன் இயக்கம் யூதர் பலரை அழித்து எல்லோரையும் ரஷ்யாவிலிருந்து நாடுகடத்தியது. அவர்கள் ரஷ்யாவின் ஆதிக்கத்தில் இருந்த பகுதிகளில் அடைக்கலம் புகுந்தனர். மேலும், 1930ம் ஆண்டிற்குப் பிறகு நாஜிப் படையினர் எண்ணற்ற யூதர்களை ஐரோப்பாவிலிருந்து வெளியேற்றினர். ஆனால் பிரிட்டன் நாடுகள் தங்களது எண்ணெய் வள கூட்டாளியான அரேபியாவின் எண்ணத்தின்படி யூதர்கள் வெளியேற்றத்தில் தொடர்பு படுத்திக்கொள்ளவில்லை.

பாபிலோனியா காபத்திலிருந்து கண்டிராத அளவிற்கு, யூதர்களின் அழிவு அதிக அளவில் காணப்பட்டது. கடவுள் கோபத்தைப் பற்றி சகரியா கூறுகிறார் -"அப்பொழுது என்னோடே பேசின தூதன் என்னை நோக்கி: சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்: நான் எருசலேமுக்காகவும் சீயோனுக்காகவும் மகா வைராக்கியம் கொண்டிருக்கிறேன். நான் கொஞ்சங் கோபங்கொண்டிருந்தபோது அவர்கள் தங்கள் கேட்டை அதிகரிக்கத் தேடினபடியால், சுகமாய் வாழுகிற புறஜாதிகள்பேரில் நான் கடுங்கோபங்கொண்டேன்." (சகரி 1:14,15)

ஆகவே, இஸ்ரயேல் பற்றிய வாக்குறுதி அழிவு பற்றி அன்றி, சுபிட்சமான வாழ்வு பற்றியே அதிகம் எதிர்பார்க்கப்பட்டது.

1990க்குப் பிறகு தென் ஆப்பிரிக்கா, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து செல்லும் யூதர்கள் தங்கி வாழ்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கர்த்தரின் பெயரால் அல்லது

சொத்துக்களின் பாதுகாப்பு முறைகளால் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. குறிப்பாக பிரான்ஸ் நாட்டு யூதர்கள், இஸ்ரயேல் நாட்டில் பல இல்லங்கள் அமைத்துக்கொண்டனர்.

2008ல் ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடியின் நிமித்தம், அமெரிக்க யூதர்கள் பலர் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் மேற்கொண்டனர். குறைந்த செலவில் வேலைவாய்ப்புத் திட்டங்கள் ஊக்கத்தொகை வழங்கும் திட்டங்கள் போன்ற பல திட்டங்களை மேற்கொண்டனர். கடந்த 36 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 2009ல் வட அமெரிக்க யூதர்கள் 3324 பேர்கள் இஸ்ரயேலுக்கு நாடுபெயர்ந்தனர்.

இஸ்ரயேல் நீடித்து நிலைக்கும் என்ற வேதாகம வாக்குறுதி மேலும் தீவிரமாக்கப்படும். "ஆகையால் என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்படாதே; இஸ்ரவேலே, கலங்காதே என்று கர்த்தர் சொல்லுகிறார்; இதோ, நான் உன்னைத் தூரத்திலும், உன் சந்ததியைத் தங்கள் சிறையிருப்பின் தேசத்திலும் இராதபடிக்கு இரட்சிப்பேன்; யாக்கோபு திரும்பிவந்து அமர்ந்து சுகித்திருப்பான்; அவனைத் தத்தளிக்கப்பண்ணுகிறவனில்லை. உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னோடே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன்; உன்னையோ நான் நிர்மூலமாக்காமலும், முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய்த் தண்டிப்பேன்." (எரே 30:10,11)

இஸ்ரயேல் பற்றிய தேவனுடைய வாக்குறுதியின்படி, ஆபிரகாமின் சந்ததி இயேசு கிறிஸ்துவின் இராஜ்யத்தில் இடம் பெறுவர்.(ஆதி 22:17) அர்மெகதோன் என்று அழைக்கப்படும் இறுதி யுத்தத்தில் அது தொடரும். (எசேக் 38:16, சகரி 14:2,3, வெளி 16 :16) இந்த உலகத்தில் உள்ள ஜனங்களை ஆசீர்வதிப்பதற்கான வாய்ப்பு, இஸ்ரயேலுக்கு கிறிஸ்துவின் இராஜ்யத்தில் முதலில் கொடுக்கப்படும். கடந்த 3000 வருடங்களாக உலகம் எங்கும் சிதறி கிடந்த யூதர்களுக்கு எல்லா ஜாதிகளின் பாரம்பரியத்தைப் பற்றியும், பழக்கங்களைப் பற்றியும் நன்கு அறிந்திருப்பார்கள்.

கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சியில் பூமியில் உள்ள எல்லா குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும். பிதாவாகிய யேகோவா தேவன் கிறிஸ்து மற்றும் சபையின் வழியாக பழைய ஏற்பாட்டின் நீதிமான்களை உயிர்ப்பித்து, அவர்களின் மூலமாக பூமியில் உள்ள பல பில்லியன் கணக்கான ஜனங்களை சீர்பொருந்த செய்வார்கள். (சகரி 8:23, ஏசா 2:3) இஸ்ரயேலுக்கு எதிராக வந்தவர்கள், எருசலேமுக்கு சென்று தேவனை ஆராதிப்பார்கள். "பின்பு, எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த எல்லா ஜாதிகளிலும் மீதியான யாவரும் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ளும்படிக்கும், கூடாரப்பண்டிகையை ஆசரிக்கும்படிக்கும், வருஷாவருஷம் வருவார்கள்; "(சகரி 14:16) ஆகவே, எருசலேமின் சமாதானத்திற்காக ஜெபிப்போம் - எருசலேமின் சமாதானம் என்பதற்கு இந்த உலகத்தின் ஆசீர்வாதமாகும்.

**சங்கிலியாண்டபுரம் வேத மாணவர்கள்,**

**திருச்சி.**

**Cell : 9244611241, 81224919**